# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 ஆனி 06 செவ்வாய்க்கிழமை (21.06.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 207





வெளிநாட்டு தொடர்புகள் பாதிப்பு 09



14 ராஜீவ் படுகொலை அதிரும் உண்மைகள்



20 ஏலனம் செய்கிறார் விஜித



25 கைநழுவும் முதலிடம்


# தடுப்பில் உள்ளோர் விவரம் வவுனியாவில் கிடையாது

## தகவல் பெறச் செல்லும் உறவினர்கள் ஏமாற்றம்

கொழும்பு, ஜூன் 21

**தடுத்து வைக்கப்பட்டுள்ளோர் மற்றும் காணாமற்போனோரின் பெயர் விவரங்கள் பயங்கரவாத விசாரணைப் பிரிவில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன என அரசு அறிவித்துள்ள போதிலும், பயங்கரவாத விசாரணைப் பிரிவில் வவுனியா அலுவலகத்தில் அந்தப் பட்டியல் காட்சிப்படுத்தப்படவில்லை. நாள்தோறும் எதிர்பார்ப்புடன் செல்லும் மக்கள் ஏமாற்றத்துடனேயே திரும்புகின்றனர்.**

''அரசு அறிவித்தபோதும், வவுனியா பயங்கரவாத விசாரணை பிரிவுக்குச் செல்லும் உறவினர்கள் ஏமாற்றம் அடைகின்றனர்.எந்த விவரமும் தம்மிடம் இல்லை என்று கூறி அதிகாரிகள் அவர்களைத் திருப்பி அனுப்புகின்றனர்'' - என கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் மற்றும் காணாமல் போனோரின் பெயர் விவரங்களை நீண்டகால இழுபறியின் பின்னர் கொழும்பு, பூஸா, வவுனியா ஆகிய பகுதிகளில் உள்ள பயங்கரவாத விசாரணைப் பிரிவு அலுவலகங்களில் காட்சிப்படுத்தப்படும் என்று அரசு அண்மையில் அறிவித்திருந்தது.

இந்த நிலையில் பூஸா மற்றும் கொழும்பு பயங்கரவாத விசாரணைப் பிரிவு அலுவலகங்களில் குறித்த பெயர், விவரப்பட்டியல் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதாக அறியக் கிடைத்தது.வவுனியா பயங்கரவாத விசாரணைப் பிரிவில் அவ்விவரங்கள் இன்னும் காட்சிப் படுத்தப்படவில்லை.





இரண்டு வருடங்கள் கழிந்தும் ஈரவிழிகளோடு உறவுகளைத் தேடி அலைந்தபடி....

''தடுத்து வைக்கப்பட்டுள்ளோர் மற்றும் காணாமல் போனவர்களின் பெயர், விவரங்கள் வவுனியா பயங்கரவாத விசாரணைப் பிரிவில் இன்னும் காட்சிப்படுத்தப்படவில்லை. நாள்தோறும் எதிர்பார்ப்புகளுடன் அங்கு செல்கின்ற எம்மக்கள் வெறுங்கையுடனும், ஏமாற்றத்துடனும் திரும்புகின்றனர்.

இது குறித்து மக்கள் எம்மிடம் முறைப்பாடு செய்கின்றனர்'' என்றார் சிவசக்தி ஆனந்தன். (04 ஆம் பக்கம் பார்க்க)

# ஈழத் தமிழருக்கு 'செவாலியர்' விருது

யாழ்ப்பாணம், ஜூன் 21

ஈழத் தமிழர் ஒருவருக்கு பிரான்ஸ் நாட்டின் உயர் விருதான 'செவாலியர்' விருது வழங்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை ஆத்தியடியைச் சேர்ந்த நாகநாதன் வேலுப் பிள்ளைக்கே இந்த கௌரவப்பட்டத்தை பிரான்ஸ் அரசு அறிவித்திருக்கிறது.

எதிர்வரும் 27ஆம் திகதி கொழும்பில் வைத்து இந்த விருது வழங்கப்பட உள்ளது.....

'செவாலியர்' என்பது பிரெஞ்சு நாட்டுத் தேசிய திறமைப் பட்டியலில் இடம் பெறுகின்றது.

இருபத்துமூன்று ஆண்டுகளுக்கு மேலாக பிரெஞ்சு அரச சேவையில் வேலுப்பிள்ளை

(27 ஆம் பக்கம் பார்க்க)

# கிளிநொச்சியில் சட்டத்தரணிக்கு பிடிவிறாந்து

கிளிநொச்சி, ஜூன் 21

கிளிநொச்சிப் பகுதியில் பணமோசடியில் ஈடுபட்ட சட்டத்தரணி ஒருவருக்கு எதிராக கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றம் நேற்றுப் பிடியாணை பிறப்பித்துள்ளது.

கிளிநொச்சியைச் சேர்ந்த பிரபல சட்டத்தரணி ஒருவர் 2

(04 ஆம் பக்கம் பார்க்க)

# ஆசிரியர் இடமாற்றம்; இரத்துச்செய்தார் ஜனாதிபதி

திருகோணமலை, ஜூன் 21

கிழக்குமாகாணத்தில் ஆளுநரால் மேற்கொள்ளப்படவிருந்த ஆசிரிய இடமாற்றத்தைக் கண்டித்து ஆசிரியர்கள் சுகயீனப் போராட்டத்தில் குதிக்க இருந்த நிலையில், குறித்த இடமாற்றங்களை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நிறுத்தி வைத்துள்ளார்.ஆளணிச் சீராக்கம் என்ற பெயரில் (27 ஆம் பக்கம் பார்க்க)

# கந்தரோடையின் பண்பாடு பெருங்கற்காலத்துக்குரியது

## 2,500 ஆண்டுகளுக்கு முற்பட்டது என ஆய்வில் நிருபணம்

அலுவலகச் செய்தியாளர் உமாசங்கர்

யாழ்ப்பாணம், ஜூன் 21

2,500 ஆண்டுகளுக்கு முற்பட்ட பெருங்கற்காலப் பண்பாட்டைச் சேர்ந்த, தென்னிந்தியப் பண்பாட்டை ஒத்த மக்கள் கந்தரோடையில் வாழ்ந்துள்ளார் என்பது ஆய்வுகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன என்று இலங்கை தொல்லியல் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் கலாநிதி தெரணியகல நேற்று உதயனுக்குத் தெரிவித்தார்.

''கந்தரோடையில் புராதன குடியிருப்பு நகரம் இருந்ததுள்ளமை ஆய்வில் தெரியவந்துள்ளது. இலங்கையின் ஏனைய இடங்களில் மக்கள் குடியிருப்புக்கள் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் கந்தரோடையிலும் மக்கள் வாழ ஆரம்பித்துள்ளனர் என்பது இதன் மூலம் நிரூபணமாகிறது. கந்தரோடையில் பெருங்கற்காலப் பண்பாட்டு மக்கள் வாழ்ந்துள்ளனர்'' - என்றார் தெரணியகல. (27 ஆம் பக்கம் பார்க்க)



தொல் லியல் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் கலாநிதி நிமல் பெரேரா, முன்னாள் பணிப்பாளர் கலாநிதி தெரணியகல, பேரசிரியர் புஸ்பரட்ணம் ஆகியோர் கந்தரோடைக்கு நேற்று விஜயம் செய்தனர்.

# தொற்றுநோய் பரவல் யாழில் அதிகம்

யாழ்ப்பாணம், ஜூன் 21

நெருப்புக் காய்ச்சல், வயிற்றோட்டம் போன்ற தொற்று நோய்கள் குடிதண்ணீர், உணவு என்பவற்றின் மூலம் பரவலடையும் வீதம் யாழ்ப்பாணத்தில் அதிகரித்துள்ளது.

இவ்வாறு வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வீடுகளிலும் உணவகங்களிலும் நிலவுகின்ற சுகாதாரமற்ற செயற்பாடுகளே இத்தகைய தொற்றுநோய் (27 ஆம் பக்கம் பார்க்க)

# கோத்தபாய கூறுவது அபத்தம் கூட்டமைப்பில் பிளவு ஏதுமில்லை

## சுரேஷ் எம்.பி. கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 21

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கூறுவது போன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் கருத்து வேறுபாடுகளோ பிளவுகளோ இல்லை என்று தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன்.

அரசுடன் உறவுகளை மேம்படுத்த இரா. சம்பந்தன் எடுக்கும் முயற்சிகளை கூட்டமைப்பின் ஒரு பகுதி எதிர்ப்பதுடன் நல்லிணக்கத்தைக் குழப்ப இரவு பகலாக உழைக்கிறது என்று பாது காப்புச் செயலர் தெரிவித்த கருத்துத் தொடர்பிலேயே சுரேஷ் பிரேமச்சந்திரன் இதனைத் தெரிவித்தார்.

''கூட்டமைப்புக்குள் எந்தக்

(04 ஆம் பக்கம் பார்க்க)

# அளவெட்டிச் சம்பவத்தில் இராணுவமே ஈடுபட்டது

## பாதுகாப்புச் செயலர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 21

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அளவெட்டி தேர்தல் பிரசாரக் கூட்டத்தினுள் புகுந்து அடாவடியில் ஈடுபட்டவர்கள் இராணுவத்தினரே என்பதை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ உறுதிப்படுத்தி உள்ளார்.


கொழும்பிலிருந்து வெளியாகும் ஜலண்ட் பத்திரிகைக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்திருக்கிறார்.

''அதிகாரிஒருவரின்தலைமை

(27 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: admin@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் தெளிவான வெப்பக் காலநிலை நிலவுவதற்கான சாத்தியமுள்ளது.

CSE
COLOMBO STOCK EXCHANGE

பங்குச்சந்தை µ யாழ்ப்பாணம்
ஆனி 20, 2011
பங்குச்சந்தைச்சுட்டிகள்
அனைத்துப்பங்கு(ASPI) 7040.68↓
மிலங்கா(MPI) 6603.20↑
உரிமைமுதல் தகவல்கள்
வியாபாரப்புரள்வு(Rs.) 1.7Bn
பங்குகளின் அளவு(No.) 116.68Mn
வியாபாரம்(No.) 22638
விலை அசைவுகளின் அடிப்படையில்
அதிகரிப்பு(Top 5 gainers)விலை Rs.
சுவர்ணமகால் 69.90
இன்டஸ்றியல் அஸ்பர்ஸ் 482.90
பிபுத் 103.70
புறபரி டிவலொப்மன்ர் 72.00
ஏசியன் அலையன்ஸ் 162.00
குறைவு(Top 5 losers) - விலை Rs.
கலாமசு சிஸ்ரம் 3109.70
றிவேறினா ஹொட்டல்ஸ் 106.40
புளுடயமன்ட் 2.40
ஒன்னலி 69.10
ஹன்ரர் அன்ட் கம்பனி 1077.40
மேலதிக தகவல்கள்- www.cse.lk

# அல்லைப்பிட்டியில் நடமாடும் சேவை; நேற்று 16 அலுவலகங்களின் பணிகள்

## 31 பிறப்புச் சான்றிதழ்கள் உடன் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 21

அல்லைப்பிட்டியில் நேற்று திங் கட்கிழமை இடம்பெயர்ந்த வர்களுக்கான தேசிய பாதுகாப் புக்கும் நிரந்தர தீர்வுக்குமான நடமாடும் சேவை இடம்பெற்றது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய நிகழ்ச்சித் திட்ட அதிகாரி செல்வி கார்த்திகா தலைமையில் நடை பெற்ற இந்த நடமாடும் சேவை யில் பிறப்பு, இறப்பு சான்றிதழ் அலு வலகம், வேலணை பிரதேச செய லகம், தீவகக் கல்வி வலயம், கடற் றொழில் திணைக்களம், பொலிஸ் திணைக்களம், சுகாதார சேவை கள் திணைக்களம், சமூக சேவை கள் திணைக்களம் ஆகியவற் றின் அதிகாரிகள் உட்பட 16 அலு வலகங்களின் அதிகாரிகள், உத்தி யோகத்தர்கள் கலந்துகொண்டனர்.

இந்த நடமாடும் சேவையில் சுமார் 150 குடும்பத்தவர்கள் கலந்துகொண்டு தமது தேவை கள் பிரச்சினைகள் குறித்து தெரி வித்ததுடன் சிலவற்றுக்கான தீர்வுகளையும் பெற்றுக்கொண்ட னர். பிறப்பு, இறப்பு சான்றிதழ்



களைப் பெறுவதிலேயே கூடுதல் மக்கள் அக்கறை காண்பித்தனர். 31 பிறப்புச் சான்றிதழ்கள் உட னடியாகவே வழங்கப்பட்டன.

ரியூசனுக்குச் சென்று வரும் மாணவிகளிடத்தில் அல்லைப் பிட்டிப் பகுதியில் சில இளை ஞர்கள் சேட்டை புரிவதாகவும் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பொது மக்கள் சிலர் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்தனர்.

இது குறித்து உடன் ஊர்காவற் றுறை பொலிஸ் அதிகாரியிடம் தெரிவித்து நடவடிக்கை எடுக்கப் படும் என ஊர்காவற்றுறை பொலிஸ் சார்ஜன்ட் எஸ்.நட ராசா தெரிவித்தார்.

நடமாடும் சேவையில் கலந்து கொண்டு மக்கள் தெரிவித்த விடயங்கள் தொடர்பாக உரிய திணைக்கள அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்கவுள்ளதாக பிராந்திய நிகழ்ச்சித் திட்ட அதிகாரி செல்வி கார்த்திகா தெரிவித்தார். (ஒ-7)

# சிறையில் இருந்த தமிழ்க் கைதி விசாரணைக்காக கொழும்புக்கு

கொழும்பு, ஜூன் 20

அனுராதபுரம் சிறைச்சாலை யில் கடந்த இரு வருடங்களா கத் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதியான இராச வல்லபன் தவரூபன் குற்றப் புலனாய்வுப் பிரிவின் விசார ணைக்கென நேற்று கொழும் புக்கு அழைத்துச் செல்லப்பட் டுள்ளார்.

நீதிமன்ற விசாரணைக்கென நேற்று அவர் அனுராதபுரம் நீதி மன்றத்துக்கு அழைத்துச் செல் லப்பட்டார். அங்கு வருகை தந்திருந்த கொழும்பு, குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் மேலதிக விசாரணைக்காக அவரை அழைத்துச் செல்ல அனுமதிக்கு மாறு நீதிமன்றத்திடம் விண்ணப் பித்தனர்.

அந்த விண்ணப்பத்தை ஏற் றுக்கொண்ட நீதிமன்றம் தவரூ பனை விசாரணைக்கு அழைத் துச் செல்ல அனுமதித்தது.

(உ-ஐ)

## யாழ்ப்பாணத்தில் புற்றுநோய் சிகிச்சை நிலையம்

# தெற்கிலிருந்து வடக்கு நோக்கி நடைப்பயணப் பிரசாரங்கள்

## ரூ. 220 மில்லியன் எதிர்பார்ப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 21

வடக்கு, கிழக்கு மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு யாழ்ப்பாணத்தில் புற்றுநோய்ச் சிகிச்சை நிலையம் ஒன்று அமைக் கப்படவுள்ளது.

இதற்கென ஜூலை முதலாம் திகதி தெற்கில் இருந்து வடக்கு நோக்கி நடைப்பயணப் பிரசாரம் ஒன்று இடம்பெறவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை ''த கலர்ஸ் ஒவ் குறோச் றஸ்ட்'' என்னும் நிதியம் மேற்கொண் டுள்ளது.

இந்த நிதியத்துடன் 45 நிறு வனங்கள் இதற்கென இணைந்து செயற்படவுள்ளன.

மொபிட்டல், எம்.ஏ.எஸ். ஹோல்டிங், இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பிரிவு, ஹற்றன் நஷனல் வங்கி, எச்.எஸ்.பி.சி, ஈஸ்வரன் பிறதர்ஸ், டீ.எச்.எல்., பெடெக்ஸ் உட்பட 45 நிறுவனங் கள் இணைந்து கொள்கின்றன.

இலங்கையில் புற்றுநோய்க் குச் சிகிச்சையளிக்கும் அனைத்து வசதிகளையும் கொண்ட வைத் தியசாலை மகரகமவில் மட்டுமே அமைந்துள்ளது.

இங்கு சிகிச்சைக்காக வரும் வடக்கு, கிழக்கு மக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்கின் றனர்.

இதனைக் கருத்திற்கொண்டே மேற்படி நிதியம் யாழ்.போதனா வைத்தியசாலையில் புற்றுநோய்ச் சிகிச்சை நிலையத்தை அமைக்க முன்வந்துள்ளது.

தேவேந்திர முனையில் ஆரம்ப மாகும் இந்த நடைப்பயணம் 28 நாள்களில் பருத்தித்துறையைச் சென்றடையும்.

இந்தப் பயணத்தின் ஊடாக 220 மில்லியன் ரூபா நிதியைத் திரட்டுவதற்கு எதிர்பார்க்கப் படுவதாகத் தெரிவிக்கப்படு கின்றது. (ம)

# உயர்தர மாணவருக்கு வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூன் 20

ஜீ.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் பொருளியல், வணிகக் கல்வி, கணக்கீடு ஆகிய பாடங்களுக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கு எதிர்வரும் 25ஆம், 26ஆம் திக திகளில் காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 1.30 மணிவரை யாழ். பல்கலைக்கழகத்தில் பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு நடத் தப்படவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக வணிக பீட மாணவர் ஒன்றியத்தால் ஏற் பாடு செய்யப்பட்டுள்ளது. இந் தக் கருத்தரங்கில் கலந்துகொள்ள விரும்பும் மாணவர்கள் முகாமைத் துவக் கற்கைகள் பீடத் தலை வருடன் தொடர்புகொண்டு தங் கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட் டுள்ளது. (ற)

# பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை முகாம் யாழ்.மாவட்டத்தில் நடத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூன் 21

யாழ்.மாவட்டத்தில் வெளி நாட்டு சத்திர சிகிச்சை நிபுணர் களால் பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை முகாம் ஒன்று நடத்தப்படவுள்ளது. டிசெம்பர் மாதமளவில் இந்தச் சிகிச்சை முகாம் நடத்தப்படவுள்ளது.

இதில் உதட்டு அண்ணப் பிளவு உடையவர்கள், எரிகாயங் களுக்குள்ளானவர்கள், காயங் களுக்குப் பின்னர் பெரிய தழும் புகளை உடையவர்கள் சிகிச்சை களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இந்தச் சிகிச்சைகள் பெற விரும்புவோர் தமது பிரிவு சுகா தார வைத்திய அதிகாரி பணி மனை, பிரதேச பொதுச் சுகாதா ரப் பரிசோதகர், குடும்ப நல உத்தி யோகத்தர் ஆகியோரிடம் பதிவு களை மேற்கொள்ள முடியும் என்று யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத் திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (ம)

# கொழும்பு மத்திய தபால் நிலையத்தில் 20 ஆயிரம் பதிவுத் தபால்கள் தேக்கம்

கொழும்பு, ஜூன் 21

கடந்த ஒரு வாரகாலமாக மத் திய தபாற் பரிமாற்ற நிலையத் தில் 20 ஆயிரத்துக்கும் மேற் பட்ட பதிவுத் தபால்கள் குவிந் திருப்பதாகத் தபாற் தொழிற்சங் கங்கள் தெரிவிக்கின்றன.

தபால் ஊழியர்களின் மேல திக வேலை நேரம் மாதமொன் றுக்கு 240 மணித்தியாலங்கள் என்றவாறு வரையறுக்கப்பட் டுள்ளமையே இந்த நிலைக்குக் காரணமென்று தபால் ஊழியர் கள் ஒன்றியத்தின் பேச்சாளர் தெரிவித்தார்.

மேலதிக வேலை நேரக் கடமைகளில் ஈடுபடும் ஊழி யர்கள் வரையறுக்கப்பட்டுள்ள 240 மணி நேரத்துக்கு அப் பாலும் பணியாற்றியுள்ளதன் காரணமாக அவர்கள் மேலதிக வேலை நேரக் கடமைகளை மேற்கொள்வதில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். (ஒ-22)

# நிகழ்வுகள்

## சமயக் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஜூன் 21

யாழ். வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் அழகியல், சமய கண்காட்சி இன்று செவ்வாய்க் கிழமை முற்பகல் 10 மணிக்கு பாடசாலை நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சித்திரபாட ஆசிரிய ஆலோசகர் து.துஸ்யந்தன், சிறப்பு விருந் தினராக கோப்பாய் ஆசிரிய பயிற்றிக் கலாசாலை விரி வுரையாளர் ந.சுந்தரலிங்கம் ஆகியோர் கலந்துகொள்ள வுள்ளனர். (ற)

## பயிற்சிக் கருத்தரங்கு

வண்ணை, ஜூன் 21

சங்கானை சிவப்பிரகாசம் மகா வித்தியாலயத்தில் தரம் 12 மாணவ, மாணவிகளுக்கு இன்று செவ்வாய்க் கிழமை பிற்பகல் ஒரு மணி முதல் 3 மணிவரை ''வன் முறையற்ற தொடர்பாடல்'' பயிற்சிக் கருத்தமர்வு நடைபெறவுள்ளது.

சர்வதேச சமாதான தினத்தையொட்டி யாழ்.சமா தான மற்றும் நல்லிணக்கப் பணியகத்தினால் இந்தக் கருத்தமர்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (ற-160)

## ஒன்றுகூடல் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூன் 21

நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலய உயர் தர மாணவர் மன்றத்தின் ஒன்று கூடலும் மதியபோசன விருந்துபசாரமும் இன்று செவ்வாய்க்கிழமை முற் பகல் 11 மணிக்கு நடைபெறவுள்ளன.

மாணவ மன்றத் தலைவன் ப.சாரங்கன் தலைமை யில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந் தினராக நெடுந்தீவு பிரதேச செயலர் ஆ.சிறி கலந்து கொள்வார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளின் சொத்துக்களைக் கைப்பற்ற சட்டத் திருத்தத்துக்கு அரசு தீர்மானம்

விடுதலைப் புலிகள் அமைப்பின் சொத்துக்கள் மற்றும் நிதியை கைப்பற்றுவதற்கு ஏதுவான வகையில் நடைமுறையிலுள்ள சட்டத்தினைத் திருத்தத்துக்கு அரசு உத்தேசித்துள்ளது.

அதற்கான நடவடிக்கைகள் இலங்கை மத்திய வங்கியின் ஊடாக முன்னெடுக்கப்பட்டு சட்ட மூலத்துக்கான நகல்திட்டமொன்றும் தயாரித்து முடிக்கப்பட்டுள்ளதாக மத்திய வங்கியின் தகவல் வட்டாரங்கள் மூலம் அறியமுடிகின்றது.

விடுதலைப் புலிகள் அமைப்பினருக்கு உரித்தான வெளிநாடுகளில் உள்ள சொத்துக்களை முடக்குவதற்கும், நிதி சேகரிப்பு நடவடிக்கைகளைத் தடுப்பதற்கும் பிரஸ்தாப சட்டத்திருத்தங்கள் துணை செய்யும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.

அதற்கு ஏதுவான முறையில் நாணயப் பரிவர்த்தனைச் சட்டம், அந்நிய செலாவணிக் கொடுக்கல் வாங்கல்கள் சட்டம், பயங்கர வாதத்துக்கான நிதியளிப்புத் தடைச்சட்டம் என்ப வற்றில் திருத்தங்களைக் கொண்டுவரும் வகையி லான முயற்சிகளை அரசு மேற் கொண்டுள்ளது.

தற்போதைக்கு உத்தேச திருத்தச் சட்டமூலம் சட்ட மா அதிபரின் அங்கீகாரத் துக்காக சமர்ப்பிக் கப்பட் டிருப்பதாகவும் பிரஸ்தாப தகவல் வட்டாரங்கள் தெரி விக்கின்றன.

இணையச் செய்திகள்

# அதிவேக நெடுஞ்சாலைகளுக்கு விசேட பொலிஸ் பிரிவு

அதிவேக நெடுஞ்சாலைகளில் போக்குவரத்தை கண்காணிப்பதற்காக விசேட பொலிஸ் பிரிவொன்று ஏற்படுத்தப்படவுள்ளதாக பொலிஸ் தலைமையக வட்டாரங்கள் தெரிவித்தன.

சாதாரண போக்குவரத்துச் சட்டங்களிலிருந்து அதிகவே நெடுஞ்சாலைகளில் போக்குவரத்து வீதிகள் வித்தியாசமானவை என்பதால் இந்த விசேட பிரிவு அவசியமானது என பொலிஸார் தெரிவிக்கின் றனர்.

அதிவேக நெடுஞ்சாலைகளுக்காக விசேட ஒழுங்கு விதிகள் வரையப்பட்டு வருகின்றன. இப்புதியபிரிவு பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஒருவரால் நிர்வகிக்கப்படவுள்ளது. இதற்காக தெரிவுசெய்யப்படும் பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் விசேட பயிற்சியொன்றுக்கு அனுப்பப்படவுள்ளனர்.

இந்த உத்தியோகஸ்தர்கள் அடுத்த மாதம் திறக்கப்படவுள்ள தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில்கொழும்பு கொட்டாவ முதல் காலி மாவட்டத்தின் பின்னதுவ வரையான பகுதியில் சேவையில் ஈடுபடுத்தப் படவுள்ளனர்.

# ஈராக்கில் உண்ணாவிரதம் இருக்கும் இலங்கையர் விவகாரத்தில் தலையிடுக

## ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு இலங்கையிடம் கோரிக்கை

கொழும்பு, ஜூன் 21

ஈராக்கில் உண்ணாவிரதம் இருந்து வரும் இலங்கைப் பணியாளர்களின் பிரச்சினைக்கு அரசு உடனடியாகத் தலையிட்டு தீர்வைப் பெற்றுக்கொடுக்க முன்வரவேண்டும்.

-இவ்வாறு ஆசிய மனித உரிமைகள் ஆணைக் குழு இலங்கை அரசை வலியுறுத்தியுள்ளது.

இதற்குத் தேவையான நடவடிக்கைகளை வெளிவிவகார அமைச்சினூடாக முன்னெடுக்க வேண்டும் என ஆணைக்குழுவின் கொள்கைப் பணிப்பாளர் பெசில் பெர்னாந்து தெரிவித்தார்.

ஈராக்கில் இலங்கைத் தூதரகம் இல்லாததன் காரணமாகப் பணியாளர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் தாமதம் நிலவுகிறது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சுமார் 19 மாதங்களுக்கான சம்பள நிலுவையை வழங்கித் தம்மை மீண்டும் இலங்கைக்கு அனுப்புமாறு ஈராக் அரசை வலியுறுத்தி கடந்த 12 ஆம் திகதிமுதல் இலங்கைப் பணியாளர்கள் உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

உண்ணாவிரதம் இருந்து வருகின்றவர்களில் 10 பேரின் உடல்நிலை மோசமடைந்துள்ள நிலையில் அவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர் என்றும் -

தற்போது 18 பேர் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளனர் என்றும் அந்நாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, சம்பளம் வழங்கப்படாத நிலையில் 41 இலங்கையர் ஈராக்கில் இருக்கின்றனர் என இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# ஜோர்தான் நாட்டில் இலங்கையர் கைது

## வன்புணர்வுக் குற்றச்சாட்டில்

கொழும்பு, ஜூன் 21

ஜோர்தானில் உள்ள ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் பணிபுரிந்த இலங்கைப் பெண்களையும் ஏனைய பெண்களையும் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் இலங்கையர் ஒருவர் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

ஜோர்தானில் உள்ள மனித உரிமை ஆர்வலர்கள் இந்தக் கைதை உறுதிப்படுத்தி உள்ளனர்.

ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரிய வரும் பெண்களை, அனில் சாந்த என்ற அதிகாரி பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தி வந்தார் என்று மனித உரிமை அமைப்புக்கள் அண்மையில் கடும் குற்றச்சாட்டுக்களை எழுப்பி இருந்தன.

இதனை அடுத்து, தொழிற்சாலையின் பொது முகாமையாளரான சாந்த கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரால் பாதிக்கப்பட்ட பெண்களில் இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷைச் சேர்ந்தவர்கள் அடங்குவர் என்று அமெரிக்காவைத் தளமாகக் கொண்டியங்கும் மனித உரிமை மற்றும் தொழிலாளர் உரிமை அமைப்பு ஒன்று தனது அறிக்கையில் குறிப்பிட்டிருந்தது. (உ)

# 6 மோட்டார் சைக்கிள்களில் வந்தவர்கள் வீடு புகுந்து தாக்குதல்

## சினிமாப் பாணியில் அல்லாரையில் சம்பவம்

தென்மராட்சி ஜூன் 21

சினிமாப் பாணியில் ஆறு மோட்டார் சைக்கிள்களில் அணிவகுத்து வந்தவர்கள் அத்துமீறி வீட்டினுள் புகுந்து தாக்கியதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் காயமடைந்தனர்.

நேற்றுமுன்தினம் இரவு அல்லாரை தெற்கில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த கிருஷ்ணர் வேலாயுதம்பிள்ளை (வயது 61), இவரது மனைவியான வேலாயுதம்பிள்ளை நாகேஸ்வரி (வயது 55) இவர்களது மகள்களான பிரேம்காந்த் கலைச்செல்வி (வயது 31) வேலாயுதம்பிள்ளை கிருஷ்ணவேணி (வயது 13) ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

காயமடைந்த நால்வரும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, இ. வேலாயுதம்பிள்ளை, வே. நாகேஸ்வரி, வே. கிருஸ்ணவேணி ஆகியோர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

தம்மை சி.ஐ.டி யினர் எனத் தெரிவித்தே வந்தவர்கள் தாக்கினர் என்றும் தாக்கியதற்கான காரணம் தெரியவில்லை என்றும் காயமடைந்த பி. கலைச்செல்வி தெரிவித்தார்.

(ஒ-207)

# யாழ். மாவட்டத்தில் உள்ள உணவு கையாளும் நிலையங்களை தரப்படுத்துவதற்குத் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஜூன் 21

யாழ். மாவட்டத்தில் உள்ள உணவு கையாளும் நிலையங்கள் அனைத்தும் மதிப்பீடு செய்யப்பட்டுத் தரப்படுத்தப்படவுள்ளன.

சுகாதார அமைச்சின் பணிப்புரைக்கு அமைவாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், பணிமனையில் சுகாதாரம் மற்றும் கல்வி உத்தியோகத்தர் எஸ்.பிரணவன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட உணவுகையாளும் நிலையங்களின் உரிமையாளர்களுடனான கலந்துரையாடல் ஒன்று நேற்று வைத்திய அதிகாரி பணிமனையில் இடம்பெற்றது.

சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ.சிவசங்கர் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் நூற்றுக்கும் மேற்பட்ட உணவகங்களின் உரிமையாளர்கள் கலந்துகொண்டனர்.

இதில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

தேசிய ரீதியாக முன்னெடுக்கப்பட்டு வரும் இந்த நடிவடிக்கை யாழ். மாவட்டத்திலும் அமுல்படுத்தப்படவுள்ளன.

உணவகங்கள் மதீப்பீடு செய்யப்பட்டுத் தரப்படுத்தப்படவுள்ளதுடன் அவை ஆவணமாக்கப்படவுள்ளன.

'ஏ', 'பி', 'சி', 'டி' என்று நான்கு பிரிவுகளாக இந்தத் தரப்படுத்தல் இடம்பெறவுள்ளது.

உணவுத் தொழிற்சாலைகள் பேக்கரிகள், உணவுவிடுதிகள், சிற்றுண்டிச்சாலைகள், பல சரக்கு விற்பனை நிலையங்கள் ஆகியன விரைவில் ஆய்வுக்கு உட்படுத்தப்படவுள்ளன.

இந்தத் திட்டம் நுகர்வோரை மையப்படுத்திய உணவுப் பாதுகாப்புத் திட்டமாகும் என்று மேலும் கூறப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் நல்லூர் பிரதேச சபைச் செயலாளர் எஸ்.சாந்தசீலன், நல்லூர் பகுதிக்கான மேற்பார்வை பொது சுகாதாரப் பரிசோதகர் எஸ்.எவ். செபராஜா, பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் உணவு, மருந்து பரிசோதகர் பொ.சிவரூபன், நல்லூர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எஸ்.பிரேம்குமார் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

(ம-14)

# குடாநாட்டில் மீண்டும் தலைதூக்கிவரும் தெருச்சண்டைகள், குழு மோதல்கள்

யாழ். மாவட்டத்தில் அருகியிருந்த குழு மோதல்களும் தெருச் சண்டைகளும் மீண்டும் தலை தூக்கத் தொடங்கியுள்ளன.

தினமும் ஒவ்வொரு இடத்தில் குழு மோதல்கள் மற்றும் தெருச் சண்டைகளால் காயமடைவோர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர்.

வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறி கொட்டன் அடி, கத்தி வெட்டு, வாள் வெட்டு, கோடறி வெட்டு என்றவாராக நாளாந்தம் சம்பவங்கள் அரங்கேரி வருகின்றன.

எவரும் எதிர்பாராத வேளையில் திடீரென மோதல்கள் உருவாவதால் இடையில் அகப்படும் பொதுமக்களும் கூட பாதிக்கப்படுகின்றனர்.

ஒரு நாள் குழு மோதல் தொடர்ந்து பல நாள்களுக்கு நீடிக்கிறது. இதனால் ஏற்படும் இழப்புகள், பாதிப்புகள் ஏராளம். குடா நாட்டில் மீண்டும் வன்முறைக் கலாசாரம் தலைதூக்கியிருப்பது பொதுமக்கள் மத்தியில் பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

(ஒ-207)

# கசிப்பு உற்பத்தி செய்தவருக்கு அபராதம்

கிளிநொச்சி, ஜூன் 21

கிளிநொச்சி, ஊற்றுப்புலம் பகுதியில் கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனையில் ஈடுபட்டிருந்த ஒருவருக்கு 1 லட்சத்து 85 ஆயிரம் ரூபா தண்டப்பணமாக அறவிடுமாறு கிளிநொச்சி நீதிமன்ற நீதிவான் தீர்ப்பளித்துள்ளார்.

குறித்த குற்றவாளிக்கு எதிராக கசிப்பு உற்பத்தி செய்யும் உபகரணங்கள் குறிப்பிட்டளவு கசிப்பு மற்றும் கசிப்பு உற்பத்திக்கான மூலப்பொருள் என்பவைகளை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டுக்கள் கிளிநொச்சிப் பொலிஸாரால் மன்றுக்கு தெரியப்படுத்தப்பட்டது.

இந்த வழக்கை நேற்று விசாரணைக்காக எடுத்துக் கொண்ட போது குற்றவாளி குற்றத்தை ஒப்புக்கொண்டார். இதனால் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதிவான் குற்றவாளிக்கு 1 லட்சத்து 85 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார்.

குற்றவாளி உடனடியாகவே குற்றப்பணத்தை ரொக்கமாகச் செலுத்திவிட்டு நீதிமன்றத்தைவிட்டுச் சென்றார். (ந-10-06)

# பாம்பு தீண்டிய சிப்பாய் யாழ். ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், ஜூன் 21

இயக்கச்சி படைமுகாமில் பணியாற்றும் சிப்பாய் ஒருவர் நேற்று முற்பகல் 11 மணியளவில் பாம்புக்கடிக்கு இலக்கானார்.

கே.எம்.பி. குமாரசிங்க (வயது -28) என்ற அந்தச் சிப்பாய் பலாலி இராணுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளார்.

(ஜ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தத்தின் பின்னரான காலத்தில் திருப்தியான செயற்பாடுகள் எவற்றிலும் அரசு ஈடுபடவில்லை

## யாழ்.ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் அடிகளார் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 21

யுத்தத்திற்குப் பின்னரான காலகட்டங்களில் திருப்திகரமான செயற்பாடுகள் எதிலும் அரசு ஈடுபடவில்லை. யுத்தம் முடிவடைந்து இரண்டு ஆண்டுகள் முடிவடைந்துவிட்டன. ஆனால் மக்கள் மனதில் இன்னும் மகிழ்ச்சி இல்லை.

- இவ்வாறு யாழ் ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இருந்து சென்ற ஊடகவியலாளர்கள் சிலரை ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் நேற்றுமுன்தினம் ஆயர் இல்லத்தில் சந்தித்துப் பேசினார்.

இதன்போது அவர் மேலும் கூறியவை வருமாறு-

அபிருத்தி நடவடிக்கைகளுக்காக அமைச்சர்கள் வந்து செல்கின்றனர். ஆனால் மக்களுக்கு என்ன தேவை என்பதை அரசினால் அறிந்து கொள்ள முடியாதுள்ளது.

உரிய அரசியல் தீர்வை வழங்கி தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை பூர்த்தி செய்ய வேண்டும் என கடந்த மாதம் கொழும்புக்குச் சென்று ஜனாதிபதியைச் சந்தித்த மூன்று தமிழ் ஆயர்களும் வலியுறுத்தினர்.

கடந்த மூன்று தசாப்த காலத்துக்கும் மேலாக தமிழர்கள் அனுபவித்து வரும் துன்பங்களுக்கு, பொறுப்புள்ள ஜனாதிபதி என்ற அடிப்படையில் தீர்வு காணுமாறு ஆயர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

ஜனாதிபதி அதனை ஏற்றுக் கொண்டார். ஆனால் நம்பிக்கை தரும் நலலெண்ண செயற்பாடுகள் எதனையும் இன்னமும் காணவில்லை.

தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் போராளிகளின் முழு விவரங்களை வெளியிடுவதாகவும் ஜனாதிபதி உறுதியளித்திருந்தார். ஆனால் அந்த விவரங்கள் கூட இதுவரை வெளியிடப்படவில்லை.

நம்பிக்கை அளிக்கும் குறைந்தபட்ச வேலைத் திட்டங்களையாவது அரசு முன்வைக்க வேண்டும். இந்தியா உறுதியளித்த 50 ஆயிரம் வீட்டுத் திட்டங்கள் கூட இன்னமும் செய்து முடிக்கப்படவில்லை.

மீளக் குடியமர்த்தப்பட்ட மக்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்ப இன்னும் 25 ஆண்டுகள் வரை செல்லும். தங்கள் சொந்த முயற்சியால் மாத்திரமே மக்கள் முன்னேற முடியும் அரச உதவிகள் எதுவும் இல்லை.

- இப்படி அவர் தெரிவித்தார். (ம- சி)

# வடமாகாண மீலாத் திருவிழா இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 21

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வடமாகாண மீலாத் திருவிழா இன்று காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது. கல்லூரி அதிபர் எம்.எஸ்.ஏ.எம்.முபாறக் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக யாழ்.வலயப் பதில் கல்விப் பணிப்பாளர் வை.ரவீந்திரன், தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் வி.இராதாகிருஷ்ணன் ஆகியோர் கலந்துகொள்வர். (ம)

## கோத்தபாய... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கருத்து வேறுபாடும் இல்லை. கூட்டமைப்பின் தலைவர்கள் ஒன்றாகவே செயற்படுகிறார்கள். முரண்பாடு என்பதெல்லாம் பொய்ப் பிரசாரம்'' என்றார் சுரேஷ்.

முன்னதாக, கொழும்பில் வெளியாகும் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த செவ்வியில் கூட்டமைப்புக் குறித்த காட்டமான கருத்துக்களை பாதுகாப்புச் செயலர் கூறியிருந்தார்.

அவர் தெரிவித்ததாவது:- வடக்கு,கிழக்கில் இயல்பான அரசியல் செயற்பாடுகளை மேற்கொள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு உதவுமாறு இரா. சம்பந்தன் அனுப்பிய கடிதம் எனக்குக் கிடைத்தது.இந்தக் கடிதத்தில் இராணுவம் மற்றும் பாதுகாப்புச் செயலருடன் இணைந்து பணியாற்ற சம்பந்தன் இணக்கம் தெரிவித்திருந்தார், அவரது கருத்தை அரசு மதிக்கிறது.

இந்தியா ஹவுஸில் கடந்த 8ஆம் திகதி இந்தியத் தூதுவர் அசோக்கே. காந்தா முன்னிலையில் சம்பந்தனை சந்தித்துப் பேசினேன். இந்தியத் தூதுவரின் அழைப்பின் பேரிலேயே இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. கடந்த வியாழக்கிழமை அளவெட்டியில் நடந்த சம்பவத்தை அடுத்து இரா.சம்பந்தனுடனான சந்திப்புத் தொடர்பாக தகவலை வெளிப்படுத்துவதை விட எனக்கு வேறு தெரிவுகள் ஏதும் இல்லை. சம்பந்தனின் இந்த நகர்வுகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒரு பகுதியினருக்குப் பிடிக்கவில்லை.

எனக்குக் கடிதம் எழுதிய பின்னர் சம்பந்தன் இந்தியாவுக்கு மருத்துவ சிகிச்சைக்காகச் சென்றுவிட்டார். நான் தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்ளத் தயாராக இருந்தேன். துரதிஷ்டவசமாக அந்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதற்கு முன்னதாகவே இரா.சம்பந்தனின் முயற்சிகளைப் பிடிக்காத கூட்டமைப்பினர் சிலர், அனுமதி பெறப்படாத கூட்டம் ஒன்றை அள வெட்டியில் நடத்தி பிரச்சினையை ஏற்படுத்தி உள்ளனர் - என்றார்.(உ)

## தருப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான பேச்சுகளில் கூட்டமைப்பினர் காணாமல் போனோர், கடத்தப்பட்டோரின் விவரங்களை வெளியிடுமாறு அரசுக்கு தொடர் அழுத்தங்களைப் பிரயோகித்து வந்தனர்.

(உ-சி)

## கிளிநொச்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலட்சத்து 20 ஆயிரம் ரூபா பணத்தினை ஒருவரிடம் கடனாகப் பெற்று ஆறுமாதங்களாகியும் அந்தப் பணம் திருப்பிக் கொடுக்கப்படவில்லை என்றும்-

பிறிதொரு நபரிடம் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்யும் பொருட்டு 40 ஆயிரம் ரூபா பணத்தினைப் பெற்று ஆறு மாதமாகியும் வழக்குத் தொடரப்படவில்லை எனக்கூறியும்-

பாதிக்கப்பட்ட இருவராலும் கடந்த முதலாம் திகதி கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் இருவேறு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.வழக்கு விசாரணைக்காக குறித்த சட்டத்தரணியை நேற்று மன்றில் ஆஜராகுமாறு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் பெ.சிவகுமார் பணித்ததுடன் குறித்த சட்டத்தரணிக்கு அழைப்புக்கட்டளை அனுப்புமாறும் கடந்த முதலாம் திகதி உத்தரவிட்டிருந்தார்.

எனினும் குறித்த சட்டத்தரணி நேற்றையதினம் மன்றில் ஆஜராகாத நிலையில் அவருக்கு எதிராக நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(ந-10-06)


# மரண அறிவித்தல்

## பொன்னர் வீரபாகு

(நயினாதீவு)



நயினாதீவு, 7ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த பொன்னர் வீரபாகு நேற்று (20.06.2011) திங்கட்கிழமை நயினாதீவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னர் - நாகமுத்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற நாமப்பிள்ளை-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற பூமணியின் அன்புக் கணவரும் தர்மகுலசிங்கம் (லண்டன்), மகாலிங்கம் (பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்), ஓங்காரலிங்கம் (அதிபர், சதாசிவம் மகாவித்தியாலயம், அனலைதீவு), காலஞ்சென்ற கிருஷ்ணமணி ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான தங்கமுத்து, சின்னம்மா, சுப்பிரமணியம், மார்க்கண்டு, சின்னத்தம்பி, சோமசுந்தரம் மற்றும் இராசரத்தினம் ஆகியோரின் பாசமிகு சகோதரரும் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை, தங்கரத்தினம், பூபாலசிங்கம் (ஸ்தாபகர், பூபாலசிங்கம் புத்தகசாலை), விஜயரட்ணம், அப்பாத்துரை, கணேசன் ஆகியோரின் மைத்துனரும் மகாலட்சுமி (உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்), விஜயகௌரி ஆகியோரின் அன்பு மாமனும் மதூஷன் (சென்.ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்), வைஷ்ணவி (வேம்படி மகளிர் கல்லூரி), மயூரன் (யா/சென். ஜோன்ஸ் கல்லூரி), கௌதமி (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), சுஜீவன் (தபாலகம், நயினாதீவு), தாட்சாயினி, கிருசாயினி (நயினாதீவு மகா வித்தியாலயம்), சித்தார்த்தினி (யாழ்.இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.06.2011) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நயினாதீவு சல்லிபரவை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வீ.மகாலிங்கம் (மகன்)
பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.
வீ.ஓங்காரலிங்கம்
அதிபர், சதாசிவம் ம.வி., அனலைதீவு

'பூமணியகம்'
7ஆம் வட்டாரம், நயினாதீவு.
தொ.பே.:021 3002542

# மரண அறிவித்தல்

## சிதம்பரப்பிள்ளை ஆறுமுகம்

(ஆறுமுகம் & சன்ஸ் கட்டட ஒப்பந்தகாரரும், இளைப்பாறிய இ.போ.ச உத்தியோகத்தரும்)



தையிட்டியைப் பிறப்பிடமாகவும் மத்தொனி, கரவெட்டி மேற்கு, கரவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை ஆறுமுகம் நேற்று (20.06.2011) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை - சிதம்பரம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற முருகேசு - தெய்வானை தம்பதியரின் அன்பு மருமகனும் பாக்கியத்தின் அன்புக் கணவரும் நந்தினி, குணரதி, சிறிஸ்கந்தராசா (சுவிஸ்), சிறிகுமார் (பின்லாந்து), ஜெகன் (கட்டட ஒப்பந்தகாரர்) ஆகியோரின் அன்புத் தந்தையும் கந்தசாமி (இலங்கை மின்சார சபை), கிருஸ்ணகுமார் (யாழ்.போதனா வைத்தியசாலை), கிருஸ்ணகுமாரி (சுவிஸ்), கிருபாலாஜினி (பின்லாந்து) ஆகியோரின் மாமனும் காலஞ்சென்ற திருமதி மகேந்திரம் பொன்னம்மா மற்றும் சுந்திரலிங்கம், திருமதி கனகலிங்கம் மகேஸ்வரி, திருமதி சுந்தரலிங்கம் பரமேஸ்வரி, தவலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.06.2011) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மத்தொனி சோனப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

மத்தொனி,
கரவெட்டி மேற்கு, கரவெட்டி.
(5045)(31)

# கண்ணீர் அஞ்சலி



எமது ஸ்தாபன முகாமையாளர்
வீ.மகாலிங்கம் அவர்களின்
அன்புத் தந்தையார்
பொன்னர் வீரபாகு
அவர்களின் இழப்பால்
துயருற்றிருக்கும் அவரின்
குடும்பத்தினர்
அனைவருக்கும் எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஊழியர்கள்,
பூபாலசிங்கம் புத்தகசாலை,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தமிழ் மக்கள்பால் திருப்தியான செயற்பாடு எப்போதோ...?

போரினால் பாதிக்கப்பட்டு மீளக்குடியமர்த்தப்பட்ட மக்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்புவதற்கு இன்னும் இருபத்தைந்து ஆண்டுகளாவது செல்லும். அரசு வழங்கும் உதவிகள் திருப்திகரமானவையாக இல்லை. மக்கள் தமது சொந்த முயற்சியால் மட்டுமே வாழ்க்கையில் முன்னேற்றம் காணமுடியும்.

இவ்வாறு கவலை கலந்த ஆலோசனை ஒன்றைத் தெரிவித்துள்ளார் யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம்.

போர் முடிவடைந்து இரண்டு வருடங்கள் பூர்த்தியாகிவிட்டன. ஆனால் மக்கள் மனதில் இன்னும் மகிழ்ச்சி திரும்பவில்லை என்றும் அவர் நெஞ்சம் வெதும்பியுள்ளார்.

மக்கள் நலனில் அக்கறைகொண்ட ஆயர் போன்ற பொறுப்புள்ள மதத்தலைவர்கள், மனித நேயத்தின் பாற்பட்டுக் கருத்து வெளியிடுவது இயல்பானதே. போரினால் பெரியளவில், தாங்கொணாத இடர்பாடுகளையும் துன்பங்களையும் சந்தித்துக்கொண்டு, தமது முந்தைய நிலைக்கு எப்படித் திரும்பப் போகிறார்களோ என்ற மனக்கிலேசமும் அதன்பால் எழும் ஆதங்கமும் எல்லோருக்கும் பொதுவானவையே. ஆனால் அவற்றை வெளியே சொல்ல - கருத்து வெளியிட- மிகப் பலர் முன்வருவதில்லை.

கடந்த மாதத்தில் யாழ்ப்பாணம், மன்னார் மற்றும் மட்டக்களப்பு மறைமாவட்டங்களின் ஆயர்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை நேரில் சந்தித்து வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் மக்களின் தற்போதைய துன்பநிலையை நேரில் எடுத்துரைத்திருந்தனர்.

போரினால் பாதிக்கப்பட்டு வாழ்க்கையின் ஓரத்துக்கே தள்ளப்பட்டு சூனியமான வருங்காலத்தை எதிர்நோக்கியுள்ள, அவர்களின் அவல நிலையை விளக்கமாகவும் விசாலமாகவும் ஆயர்கள் விவரித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த மூன்று தசாப்தங்களாக ஏனைய மக்களைப் போன்று இயல்பு வாழ்க்கையையோ, சராசரி வாழ்க்கையையோ நடத்த முடியாது அல்லற்பட்டு, ஆற்றாது கண்ணீரும் கம்பலையுமாக வாழ்ந்தவர்கள் தமிழர்கள். பல கட்டங்களில் அவர்களின் அடிப்படைத் தேவைகளைத் தானும் பெறமுடியாது பெயருக்காக வாழ்ந்த நிலைக்குத் தள்ளப்பட்டவர்கள்.

போர் ஓய்ந்துவிட்டதால், ஒரு சாதாரண மனிதனுக்குரிய சராசரி வாழ்க்கையை இனியாவது வாழலாம் என்று எதிர்பார்த்தவர்கள். நீங்கள் அதனை எட்டிப் பிடிப்பதற்கு விரைந்து வகை செய்வோம்: என்று அரசும், அமைச்சர்களும், அரச அதிகாரிகளும், அரச எடுபிடிகளும் கடந்த இரண்டு வருடங்களாக மேடைமேடையாக வாய்கிழியக் கத்தி வருகிறார்கள். ஆனால் பேச்சுப் பல்லக்கு தம்பி கால் நடை என்பது போல எல்லாமே ஆமை வேகத்திலேயே நகர்கின்றன!

பலபல திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும், போரினால் பாதிக்கப்பட்டவர்கள், மிகக்குறிப்பாக மீளக்குடியமர்த்தப்பட்ட மக்களின் நலன் நாடிய பணிகள் விசேட கவனிப்புடன், செயலூக்கத்துடன் அவர்கள் கைக்கு வந்துசேரும் என்று அரச தரப்பு அறிவிப்புகள், பிரசாரங்கள் வந்து குவியும். ஆனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவற்றில் பத்துச் சத வீதமும் போய்ச் சேர்வதில்லை; சுவறுவதில்லை.

போரினால் பாதிக்கப்பட்டோர் மீள்வாழ்வுத் திட்டங்களுக்காக வெளிநாடுகளும் பல்வேறு வகைகளிலும் உதவுகின்றன என்ற தகவல்கள் வெளிவருகின்றன.

பாதிகப்பட்டோர் வாழ்க்கை நிலையை மேம்படுத்துவதற்கான பல்வேறு திட்டங்கள் ஆரம்பிக்கப்படுகின்றன. திறப்பு விழா வகையறாக்கள் அடிக்கடி நடைபெறுகின்றன. ஆனால் மக்களின் வாழ்க்கை நிலை இன்னும் இயல்பு நிலைக்கு எட்டியும் பார்ப்பதாக இல்லை என்பதே யாதார்த்தம்.

அபிவிருத்திசார் நடவடிக்கைகளுக்கென அமைச்சர்கள் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு வந்துசெல்கின்றனர். ஆனால் மக்களின் தேவைகளை அவர்களால் அறிந்துகொள்ள முடியாது உள்ளது. மக்களுக்கு பயன்தரும் விதத்தில், அவர்களுக்கு நம்பிக்கை உண்டாக்கும் வகையில், குறைந்த பட்ச வேலைத்திட்டங்களையாவது அரசு முன்வைத்துச் செயற்பட வேண்டும் - என்றும் ஆயர் தோமஸ் சௌவுந்தரநாயகம் சரியாகச் சுட்டிக்காட்டியுள்ளார்.

சிங்கள மக்களைப் போன்று, தமிழர்களும் இந்த நாட்டின் பிரஜைகளே. போரினால் அதிகம் பாதிக்கப்பட்டு நிர்க்கதி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளவர்கள், அவர்களே என்பதை உணர்ந்து மனிதநேயத்துடன் உதவும் மனம் அரசுக்கும் அதன் பிரதானிகளுக்கும் இருந்தால், மீளக்குடியமர்ந்த மக்களை சராசரி வாழ்க்கை நிலைக்கேனும் உயர்த்துவது மலையைக் கெல்லும் பணியல்ல.

தமிழ்ப் பிரதேசங்களின் வளங்கள் தமிழ் மக்களுக்கு அறுதி உறுதியாக எழுதிக்கொடுக்கப்படவில்லை. அங்கு ஏதோ ஒரு வகையில் சிங்கள மக்களை விரைந்து குடியேற்ற வேண்டும் என்பதிலும் -

ஏனைய பல சூழ்ச்சி நிறைந்த திட்டங்களை நிறைவேற்ற அதியதி வேகமாகச் செயற்படும் அரசு -

தமிழ் மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதில் - வழங்குவதில் - மந்தகெதியில் செயற்பட முனைவது எந்த வகையிலும் நியாயமாகாது. மனித தர்மமும் ஆகாது. சம்பந்தப்பட்டவர்கள் இது குறித்து தமது மனதைத்தொட்டுக் கேட்பார்களா?

அரசாட்சியிலும் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா சொல்லிப் போந்த 'தர்மிஷ்டம்' வேண்டும். அவர் வேறு அணியின் தலைவராக விளங்கியவர் என்பதால் இந்த அரசுக்கும், அதன் தலைவர்களுக்கும் அது வேப்பங்காயாகக் கசக்குமோ என்னவோ?

மனிதாபிமானமும், மனிதநேயமும் பிறந்து, வேற்றுமையையும் குரோதநோக்கையும் துறந்தால், 'தர்மிஷ்டம்' என்ற [illegible] போகாது; எட்டி நிற்காது!

# களஞ்சியங்களில் கையிருப்பு இல்லாமையால் குடாநாட்டுக்கு பெற்றோல் வருவதில் தாமதம்

## நேற்று மாலை விநியோகம் சீரானது

யாழ்ப்பாணம், ஜூன் 21

நாடளாவிய ரீதியில் ஏற்பட்ட பெற்றோல் தட்டுப்பாடு காரணமாகவே யாழ். குடாநாட்டுக்கும் பெற்றோல் வந்து சேர்வதில் தாமதம் ஏற்பட்டதாக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் யாழ். அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்றுக்காலை பெற்றோலுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டது. எரிபொருள் நிலையங்களில் பெற்றோல் இல்லாமையால் வாகனங்களில் பயணிப்பவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர்.

இது தொடர்பாக பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் யாழ்.அலுவலக அதிகாரி ஒருவருடன் தொடர்பு கொண்டு கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாடளாவிய ரீதியில் பெற்றோலுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எரிபொருள் களஞ்சியங்களுக்கும் பெற்றோல் கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டிருந்தது.

இதனால் நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கான பெற்றோல் விநியோகத்தில் சிறு தடங்கல் ஏற்பட்டிருந்தது. யாழ். குடா நாட்டுக்கும் பெற்றோல் வருவதில் சிறிது தாமதம் ஏற்பட்டது. இதனால் பெற்றோல் தட்டுப்பாடு ஏற்பட்டது.

எனினும் தற்போது பெற்றோல் விநியோகம் யாழ்ப்பாணத்தில் சீரடைந்துள்ளது. தற்போது யாழ்ப்பாணத்தில் உள்ள அனைத்து எரிபொருள் விற்பனை நிலையங்களுக்கும் தேவையான பெற்றோல் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

மேலும் குடாநாட்டுக்குத் தேவையான பெற்றோலை எடுத்து வருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது - என்றார். (த-26)

# உள்ளூராட்சி உதவியாளர் பதவி இனிமேல் நாடளாவிய ரீதியில்

## அமைச்சர் அதாவுல்லா தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 21

வடக்கு -கிழக்கில் 1999 இல் உள்ளூராட்சிச் சபைகளைப் பலப்படுத்துவதற்காக வழங்கப்பட்ட உள்ளூராட்சி உதவியாளர் பதவியை நாடளாவிய ரீதியில் ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

1999 இல் தேசிய வரவு செலவுத் திட்டப் பணிப்பாளர் நாயகத்தினால் உருவாக்கப்பட்ட மேற்படி பதவி இன்று வடக்கு- கிழக்கில் வலுவுடைய சேவையாகக் கருதப்படுகிறது. மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லா இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வடக்கு-கிழக்கில் உள்ளூராட்சி உதவியாளர் பதவியில் 1999 இல் உள்வாங்கப்பட்ட அதிகாரிகளில் இன்று அநேகமானவர்கள் செயலாளர்களாக உள்ளூராட்சி சபைகளில் கடமையாற்றுகின்றனர்.

வடக்கில் உள்ள உள்ளூராட்சி சபைகள் 7 இலும், கிழக்கில் உள்ள உள்ளூராட்சி சபைகள் 5 இலும் உள்ளூராட்சி உதவியாளர்கள் செயலாளர்களாக பதவியேற்று மிக வினைத்திறனாகப் பணியாற்றி வருகின்றனர்.

இவ்வாறான பதவியை வகிக்கும் உள்ளூராட்சி உதவியாளர்கள் கிழக்கு மாகாணத்தில் பதவி நிலை தரத்தில் வகுப்பு II இற்கு உள்வாங்கப்பட்டு அவர்களுக்கான பிரத்தியேகமான பிரமாணக் குறிப்பு கிழக்கு மாகாண பொதுநிர்வாக பிரதிப் பிரதம செயலாளரால் உருவாக்கப்பட்டுள்ளது.

அதேபோல வடக்கு மாகாணத்துக்கும் உள்ளூராட்சி உதவியாளர்களுக்கான பிரத்தியேகமான சேவைப் பிரமாணக்குறிப்பு வெளியிட நான் பிரதம செயலாளருக்கும் பணிப்புரை வழங்கியுள்ளேன்.

நாடளாவிய ரீதியில் இனிவரும் காலங்களில் பட்டதாரி நியமனம் வழங்கும் போது உள்ளூராட்சி உதவியாளர் பதவியை உருவாக்கி வலுப்படுத்த உள்ளேன்.

மேலும் கிழக்கிலும் உள்ளூராட்சி உதவியாளர்களாக பணியாற்றுபவர்களுக்கு செயலாளர் நியமனம் வழங்க பணிப்புரை விடுத்துள்ளேன்-என்றார். (த-302)

# வடக்கு - கிழக்குப் பிரதேசங்களில் கலாசாரப் பேரவைகள் விரைவில்

யாழ்ப்பாணம், ஜூன் 21

வடக்கு-கிழக்குப் பிரதேசத்தில் கலாசாரப்பேரவையை அமைக்கும் முயற்சியில் கலை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு ஈடுபட்டுள்ளது.

வடக்கு-கிழக்குப் பிரதேசங்களான கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு பிரதேசங்களில் நிலவும் கலாசார உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன.

இதன் மூலம் உத்தியோகத்தர் தெரிவு செய்யப்பட்டதன் பின்னரே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று கலாசார அலுவல்கள் திணைக்கள அதிகாரியொருவர் தெரிவித்தார். (த-319)

# ஜூலை முதல் பஸ் கட்டணம் 7 வீதத்தால் உயரும் வாய்ப்பு

கொழும்பு, ஜூன் 21

ஜூலை முதலாம் திகதி முதல் பஸ் கட்டணங்கள் ஏழு வீதம் வரையில் அதிகரிக்கக் கூடுமென போக்குவரத்துச் சேவைகள் அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கமைய, ஆறு ரூபாய் என்ற குறைந்த பட்சக் கட்டணம் ஏழு ரூபாவரை அதிகரிக்குமென அமைச்சின் சிரேஷ்ட பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

மேலும் அவர் விளக்கமளிக்கையில்:

ஒரு ரூபாவிலிருந்து இருபது ரூபா வரையிலான பெறுமதியில் கட்டணங்கள் அதிகரிக்குமெனவும் -

ஆறு ரூபாவிலிருந்து இருபது ரூபா வரையினால் அனைத்துக் கட்டணமும் ஒரு ரூபாவினால் உயருமெனவும் தெரிவித்தார்.

குறைந்த பட்சக் கட்டணம் இரண்டு ஆண்டுகள் அதிகரிக்கப்படவில்லை. இதன் காரணமாக இந்த முறை மேற்கொள்ளப்படும் கட்டண மீளாய்வின்போது ஆறு ரூபா என்ற குறைந்த பட்சக் கட்டணம் எட்டு ரூபாவாக அதிகரிக்கப்பட வேண்டும் என இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்கள் மீதான வன்முறைக்கு எதிராக யாழ். பஸ் நிலையத்தில் நேற்று போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 21

பெண்களுக்கெதிரான வன்முறைகள் அடக்கப்படவேண்டும், வன்முறையாளர்கள் இனங்காணப்பட்டுத் தண்டிக்கப்படவேண்டும் போன்ற பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து யாழ். பஸ்நிலையப் பகுதியில் நேற்று முற்பகல் 10 மணியளவில் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று இடம்பெற்றது.




மனித உரிமைகள் இல்லத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தக் கவனயீர்ப்புப் போராட்டத்தில் மகளிர் அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்துகொண்டு பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தடுக்கப்படவேண்டும் எனக் கோரிக் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தமது கோரிக்கைகளை அறிவுறுத்தும் பதாகைகளைத் தாங்கியிருந்தனர். அந்தப் பதாகைகளில் வன்முறைகளை சகித்துக் கொண்டு வாழப் பெண் கடமைப்பட்டவளா?, பெண் வன்முறை தொடர்பாக கிடப்பில் உள்ள விசாரணை தொடரவேண்டும், வன்முறையாளர்களை அரசு தண்டிக்க வேண்டும், 'இயலாதவர்களின் இறுதி ஆயுதம் வன்முறை' போன்ற வாசகங்கள் பொறிக்கப்பட்டிருந்தன.

இந்தப் போராட்டம் யாழ். பஸ் நிலையத்தில் சுமார் 2 மணி நேரம் நடைபெற்றது. இதில் 50 இற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர். இந்தப் போராட்டத்தையொட்டி அந்தப் பகுதியில் பொலிஸ், இராணுவப் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

இதனை ஒழுங்கமைத்து நடத்திய மனித உரிமை இல்லப் பெண்கள் பிரிவுப் பொறுப்பாளர் பி.தர்சினி தெரிவிக்கையில்:

பெண்கள் பல்வேறுவிதமாக வன்முறைக்கு உள்ளாக்கப்படுகின்றனர். உயர் கல்வி நிறுவனங்கள், பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் என வன்முறைத் தளம் நீண்டு செல்கிறது.

இது தொடர்பான முறைப்பாடுகள் எமக்கு கிடைத்துவருகின்றன. 5 மாதங்களில் 50 பேர் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இவர்கள் வெளியே தமது பிரச்சினைகளைச் சொல்லப் பயப்படுகின்றனர்.

இவர்கள் இதுதொடர்பான முறைப்பாடுகளை எம்மிடம் வழங்கினால் அவற்றுக்கான ஆலோசனைகளையும், வழிப்படுத்தல்களையும் வழங்கத் தயாராகவுள்ளோம்.- என்றார். (த-319)

# வீடு வீடாக ஏறியிறங்கும் உள்ளூராட்சி வேட்பாளர்கள்

பருத்தித்துறை, ஜூன் 21

ஒத்திவைக்கப்பட்ட உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல் எதிர்வரும் ஜூலை 23 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில் இந்தத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தமது தேர்தல் பிரசார நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியுள்ளனர்.

குறிப்பாகக் கிராமப் புறங்களில் வேட்பாளர்களின் இந்தப் பிரசாரம் சூடுபிடித்துள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது.

யாழ்.மாவட்டத்தில் இம்முறை அதிகளவான அரசியல் கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் இந்தத் தேர்தலில் போட்டியிடவுள்ளன. கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களில் போட்டியிடும் உள்ளூர் வேட்பாளர்கள் பலர் ஆரவாரமின்றித் தமது தேர்தல் பிரசாரங்களை ஆரம்பித்துள்ளனர்.

கிராமப்புறங்களில் வீடு வீடாகச் செல்லும் இந்த வேட்பாளர்கள் தம்மை அறிமுகம் செய்து ஆதரவு கோரும் பிரசாரங்களில் ஈடுபட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

பெரிய தேர்தல் சுவரொட்டிகள் மூலம் பிரசாரம் செய்யாமல் ஒவ்வொருவரும் தமது தனிப்படங்களை அச்சிட்ட சிறிய துண்டுப் பிரசுரங்களை வழங்கித் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தேர்தலுக்கு இன்னும் ஒரு மாதகாலம் உள்ள நிலையில் வேட்பாளர்கள் வீடு வீடாகச் செல்லும் இந்தப் பிரசாரப் பணிகளில் இளைஞர்களும் ஆர்வத்துடன் ஈடுபட்டுவருகின்றனர் எனக் கூறப்பட்டது. (த)

## பாடசாலைகளில் கட்டாயக் கல்விக் குழுக்கள்

பருத்தித்துறை, ஜூன் 21

கட்டாயக் கல்விக்குழுவை பாடசாலைகளில் உடனடியாக புனரமைத்து இந்த ஆண்டுக்கான கல்விக்குழு உறுப்பினர்களின் விவரங்களை வடமராட்சியிலுள்ள பாடசாலைகளின் அதிபர்கள் வலயக் கல்வித் திணைக்களத்தில் ஒப்படைக்குமாறு கேட்கப்பட்டுள்ளார்கள்.

இடைவிலகல் மாணவர் விவரம், வரவு ஒழுங்கீனமான மாணவர்களின் விவரம் ஆகியவற்றையும் வகுப்பு ரீதியாக சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (த-190)

**திறமை...**



பார்வைக்கு : புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தக் கல்லூரியில் கடந்த வெள்ளி இடம்பெற்ற அழகியற் பாடக் கண்காட்சியின் போது பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சற்குணராஜா நாடாவை வெட்டிக் கண்காட்சியைத் திறந்துவைக்கிறார். (த-72)

# ஆழ்கடலில் மீன்பிடிப்பதற்கு எமக்கும் அனுமதி வழங்குங்கள்

## தோப்புக்காடு மீனவர் கோரிக்கை

காரைநகர், ஜூன் 21

காரைநகர் தோப்புக்காடு கிராம மீனவர்கள் தாம் அனலைதீவு, எழுவைதீவை அண்டிய ஆழ்கடல் மீன் பிடியில் ஈடுபடவும் இரவு நேரத்தில் மீன்பிடித் தொழிலை மேற்கொள்ள அனுமதிக்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

காரைநகர் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இதற்குப் பதில் அளித்த காரைநகர் கடற்படைத் தளபதி, குறிப்பிட்ட பாதை ஊடாகச் சென்று மீன்பிடியில் ஈடுபடலாம் எனவும், தற்போது அந்தப் பகுதிகளில் ஊர்காவற்றுறை பிரதேச மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றனர் எனவும் தெரிவித்தார்.

கடற்றொழில் உபகரணங்களை மானிய விலையில் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மீனவர் சங்கப் பிரதிநிதிகளால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.(த-250)

# வீதி விபத்தில் வயோதிபர் காயம்

யாழ்ப்பாணம், ஜூன் 21

வீதியைக் கடக்க முற்பட்ட வயோதிபர் ஒருவர் அந்த வழியே சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளுடன் மோதியதால் தலையிலும் காலிலும் காயங்களுக்குள்ளாகி சிகிச்சைக்கென யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் நிலாவரையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இந்தச் சம்பவத்தில் ஊரெழுவைச் சேர்ந்த சி.இளையதம்பி (வயது - 74) என்பவரே காயமடைந்தார். அச்சுவேலிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (த-4)

# 10 லட்சம் ரூபா பெறுமதியான நகைகள் அரியாலை அம்மன் பக்தர்களிடம் திருட்டு

## சந்தேகத்தில் பெண்ணொருவர் கைது

கொழும்புத்துறை ஜூன் 21

அரியாலை பிரப்பங்குளம் மகாமாரி அம்மன் ஆலய மஹாகும்பாபிஷேக நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்ற போது பக்தர்களிடமிருந்து மொத்தம் 20 பவுன் தங்க நகைகள் திருடப்பட்டுள்ளன.

இரண்டு தாலிக்கொடிகள், இரண்டு சங்கிலிகள் என நான்கு பெண்களிடமிருந்து சுமார் 10 லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் களவாடிச் செல்லப்பட்டுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சந்தேகத்தின் பேரில் ஒரு பெண்ணை பொலிஸார் விசாரணைக்காக அழைத்துச் சென்றுள்ளனர்.

இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது:

நேற்று முன்தினம் காலை மேற்படி கோயிலில் கோபுர கலச அபிஷேகங்கள் நிறைவுற்று 7.30 மணியளவில் ஆலயத்தின் உள்ளே பக்தர்கள் திரண்டிருந்து அம்மனைத் தரிசனம் செய்து கொண்டிருந்த வேளை ஒரு பெண் அடியாரின் 9 பவுண் எடையுள்ள தாலிக்கொடி காணாமல் போனதும் இந்தச் செய்தி பரவியதும் தத்தமது நகைகளைப் பக்தர்கள் அவதானித்த வேளை மேலும் ஒருவரின் தாலிக்கொடியும் இருவரின் சங்கிலிகளும் காணாமல் போனமை தெரியவந்தது.

ஆலயத்தின் இளைஞர்களால் அந்தப் பகுதி சுற்றிவளைக்கப்பட்டு பொலிஸாருக்குத் தகவல் கொடுக்கப்பட்டது.

இதற்கிடையில் நைசாக அங்கிருந்து சென்று பஸ் ஏற முற்பட்ட ஒரு பெண்ணை சந்தேகங்கொண்டு இளைஞர்கள் மடக்கிப்பிடித்தனர்.

அதற்கு முன்னதாக சிலர் பஸ் ஏறிச் சாவகச்சேரி நோக்கி சென்றதாகவும் கூறப்பட்டது.

பிடிக்கப்பட்ட பெண்ணிடமிருந்து நகைகள் எதுவும் கைப்பற்றப்படவில்லை.

விசாரணைக்காகப் பொலிஸார் அந்தப் பெண்ணை அழைத்துச் சென்றனர். (த-135)

# ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தில் ஆர்வத்துடன் இணையும் முதியவர்கள்

நாவற்குழி, ஜூன் 21

அரச சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் பிரதேச சங்கங்களில் ஆர்வத்துடன் ஓய்வூதியர்கள் இணைந்து வருகின்றனர்.

யாழ்.மாவட்டத்தில் அண்மைக் காலத்தில்தான் இந்தச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டபோதும் குறுகிய காலத்தில் அதிகளவான அங்கத்தவர்கள் இணைந்து கொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

பிரதேச ரீதியாக இதுவரை இணைந்துள்ள அங்கத்தவர்களின் எண்ணிக்கை விவரம் வருமாறு:

யாழ்ப்பாணம்-400, நல்லூர் -440, வலிகாமம் தெற்கு (உடுவில்) - 353, வலிகாமம் கிழக்கு - (கோப்பாய்)- 394, வலிகாமம் வடக்கு (தெல்லிப்பழை) -100, வலிகாமம் தென்மேற்கு (சண்டிலிப்பாய்)- 158, வடமராட்சி தெற்கு மேற்கு (கரவெட்டி) -255, வடமராட்சி வடக்கு (பருத்தித்துறை) -296, காரைநகர் -82, வேலணை -53, ஊர்காவற்றுறை 21, நெடுந்தீவு- 16.

யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து ஓய்வூதியர்களையும் மிகவிரைவில் பிரதேச சங்கங்களில் இணைக்கும் நடவடிக்கைகள் தற்போது தீவிரமாக்கப்பட்டுள்ளது.

அரச ஓய்வூதியத் திணைக்களமும் இந்த ஓய்வூதியத் திட்டத்துக்கு நிதிப் பங்களிப்பைச் செய்து வருகின்றது.

விசேட மரண சகாயக் கொடுப்பனவு, மரண சகாயக் கொடுப்பனவு, வைத்தியச் செலவுக் கொடுப்பனவு, கண் வில்லைக்கான கொடுப்பனவு, பல்கலைக்கழகப் புலமைப்பரிசில், மிகக் குறைந்த வட்டியில் 10 ஆயிரம் ரூபா கடன் போன்ற திட்டங்கள் இருப்பதால் ஓய்வூதியர்கள் மிக்க ஆர்வத்துடன் இதில் இணைந்து வருகின்றார்கள். (த-121)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது கடல் வளத்தை தமிழக 'ட்றோலர்கள்' வாரி அள்ளிச் செல்வது வேதனை தருகிறது

## முதல்வர் ஜெயலலிதாவுக்கு வடபகுதி மீனவர்கள் கடிதம்

யாழ்ப்பாணம், ஜூன் 21

எமது தொப்புழ் கொடி உறவுகளான தமிழ் நாட்டு மீனவர்கள் இழுவைப் படகுகள் சகிதம் எமது கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து கடல் வளத்தை வாரி அள்ளிச் செல்கின்றனர்.

இந்த விடயத்தில் இலங்கை இந்திய அரசுகள் தலையிட்டு சுமுகமான தீர்வை எட்டுவதில் அக்கறை காட்டவில்லை.

எனவே புதிதாக தமிழக முதலமைச்சராகப் பதவியேற்றுள்ள நீங்கள் இது தொடர்பில் தீர்க்கமான முடிவை எடுத்து எமது பகுதி மீனவர்கள் சுதந்திரமாக தொழில் செய்யக் கூடிய நிலைமையை ஏற்படுத்த வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு தமிழ் நாட்டின் புதிய முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு வடமாகாணக் கடற்றொழிலாளர்களின் கூட்டமைப்பு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்தக் கூட்டமைப்பின் சார்பாக அதன் தலைவர் எஸ்.தவரட்ணம் சில தினங்களுக்கு முன் அனுப்பி வைத்துள்ள அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

கடந்த 30 வருடங்களாக ஈழத்தமிழர்கள் அனுபவித்த துன்பங்கள், துயரங்கள், இடர்பாடுகள் அனைத்தும் தாங்கள் அறிவீர்கள். இந்த நிலையில் தமிழகத்தின் விடிவெள்ளியாக பெரும்பலத்துடன் தமிழக முதல்வராக வெற்றி பெற்றுள்ளமையானது ஈழத் தமிழர்களின் இருண்டயுகத்தில் ஒளிக் கீற்று ஒன்று தெரிவது போன்று மிகவும் சந்தோஷம் கொண்டுள்ளோம்.

எமது தொப்புழ் கொடி உறவாக இரத்தத்தின் இரத்தமாக மிளிர்கின்ற தமிழ் நாட்டு உறவுகள் தங்கள் இழுவைப் படகுகள் சகிதம் எமது கடற்பரப்புக்குள் அத்துமீறி உட்புகுந்து எமது கடல் வளங்களை வாரி அள்ளிக்கொண்டு செல்லும் போது கடலட்டைகொள்வனவு செய்த வலை உபகரணங்களையும் அழித்தொழித்துச் சென்று விடுகின்றனர்.

இதன் காரணமாக எம் மீனவர்கள் துன்ப நிலைக்காளாகி செய்வதறியாது அவல வாழ்வு வாழ்ந்து வருகின்றனர்.

இழுவைப்படகு தொழில் சம்பந்தமாக 2004 ஆம் ஆண்டு இந்திய மீனவர் குழுவினருக்கும் எமக்குமிடையில் நான்கு தினங்கள் பேச்சு நடைபெற்றது. 2004 இல் ஏற்பட்ட இயற்கை அனர்த்தம் காரணமாக அதை மேலும் தொடரமுடியாமல் போய்விட்டது.

மீண்டும் 2010 ஆம் ஆண்டு எமது மீனவர் குழு இந்தியாவுக்குச் சென்று தமிழ் நாடு கரையோர மீனவ கிராமங்களைப் பார்வையிட்டு இந்திய உறவுகளுக்கு எங்கள் மீனவர்கள் பட்ட துன்பங்களையும் எடுத்துக் கூறினோம். பின்னர் 3 நாள்கள் பறங்கிமலையில் மாநாடு நடத்தி மாநாட்டின் தீர்மானங்களை இலங்கை- இந்திய அரசுகளுக்கு வழங்கியிருந்தோம்.

2011 ஆம் ஆண்டு கொழும்பில் இந்திய மீனவர்களைச் சந்தித்து கலந்துரையாடினோம். ஆனாலும் சாதகமான முடிவுகள் ஒன்றும் இதுவரை கிடைக்கவில்லை.

எனவே ஈழத்தமிழ் மீனவர்களின் பிரச்சனைகளை இந்திய மீனவர்களுடன் கலந்துரையாடி ஓர் இணக்கப்பாட்டை- ஓர் தீர்க்கமான முடிவை தாங்கள் எடுக்க வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு என்றுள்ளது. (த-14)

# குடத்தனை வீதியில் மதகுகள் புனரமைப்பு

கொடிகாமம்- ஜூன் 21

வரணி-குடத்தனை பிரதான வீதியில் மூன்று மதகுகளைப் புதிதாக அமைப்பதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். இதற்கென சிமெந்துக் குழாய்கள் தென்பகுதியில் இருந்து எடுத்துவரப்பட்டு மதகு அமைக்க உத்தேசிக்கப்பட்ட இடங்களில் வைக்கப்பட்டுள்ளன.

50 ஆண்டுகளுக்கு மேலாக புனரமைக்கப்படாத பகுதியிலேயே இந்தப் புதிய மதகுகள் அமைக்கப்படவுள்ளன. மாரி காலங்களில் பாயும் வெள்ள நீர் சீராகப் பாய்வதற்காக இந்தப் புதிய மதகுகள் அமைக்கப்படஉள்ளதுடன் குறிப்பிட்ட பிரதேச பாதையின் ஒரு பகுதியும் புனரமைக்கப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-122)

# புத்தூர் சோமஸ்கந்தவுக்கு விரைவில் புதிய கட்டடங்கள்

நாவற்குழி, ஜூன் 21

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சு ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் அறிவுசார் சமூகத்துக்கான கல்வித் திட்டத்தின் கீழ் புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரியில் கட்டுமானங்களை மேற்கொள்ளவுள்ளது.

கணினிப் பிரிவு பல்ஊடக அறையுடன் வகுப்பறை ஆகியவற்றை உள்ளடக்கிய 1500 சதுர அடி விஸ்தீரனமுள்ள இருமாடிக் கட்டடம் புனரமைக்கப்படவுள்ளது.

அத்துடன் 2750 சதுர அடி விஸ்தீரணமுள்ள இருமாடிக் கட்டடம், 800 சதுர அடியில் அமைந்த வகுப்பறைக் கட்டடம், பிரதான மண்டபம், ஆண்கள் ,பெண்கள், ஆசிரியர் ஆகியோரின் மலசலகூடம் ஆகியவையும் புனரமைக்கப்படவுள்ளன. (த-121)

## நினைவழியாத...



அந்தக் கணங்கள் : வதிரி சி.ரவீந்திரன் எழுதிய ' மீண்டும் வந்த நாள்கள்' நூல் வெளியீட்டு விழா கடந்த சனிக்கிழமை காலை வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரி க.மு. சின்னத்தம்பி அரங்கில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்ட பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீ நிதி நந்தசேகரன், எழுத்தாளர் தெணியான், எழுத்தாளர்களான மேமன்கவி, திக்குவலை கமால், உபாலி லீலாரத்ன மற்றும் பிரமுகர்கள். (த-319)

# கால் நடை வைத்தியசாலை காரைநகரில் அமைக்கப்படும்

காரைநகர் ஜூன் 21

காரைநகர் உதவி அரச அதிபர் பிரிவில் கால்நடை வைத்தியசாலை ஒன்று அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகளிலும் கால்நடை வைத்திய அதிகாரி பனிமனை அமைக்கப்படும் திட்டத்தின் கீழ் காரைநகரிலும் 4.5 மில்லியன் ரூபா செலவில் இதற்கான கட்டடம் அமைக்கப்பட உள்ளது.

எனினும் இந்தக் கட்டடம் அமைப்பதற்கான காணியைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை காணப்படுவதாக வட்டுக் கோட்டைப் பிரிவு கால்நடை வைத்திய அதிகாரி கவலை தெரிவித்துள்ளார். (த-250)

# ஓடும் பஸ்ஸில் ஏறமுயன்றவர் விழுந்து காயம்

தென்மராட்சி, ஜூன் 21

பஸ் புறப்பட்ட பின்னர் பாய்ந்து ஏறிய குடும்பஸ்தர் தவறி வீழ்ந்து காயமடைந்தார். இந்தச் சம்பவம் கடந்த 17ஆம் திகதி இயக்கச்சியில் இடம்பெற்றது.

இந்த இடத்தைச் சேர்ந்த நகுலேஸ்வரன் (வயது- 47) என்பவரே காயமடைந்தவராவார்.

இதேவேளை காச்சாய் பகுதியில் மோட்டார் சைக்கிள் வீதியின் குறுக்கே ஓடிய நாயுடன் மோதியதில் இதே இடத்தைச் சேர்ந்த ஞானரூபன் (வயது-21) என்பவர் காயமடைந்தார்.

காயமடைந்த இருவரும் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (த-207)

# எம்.பிக்களின் நிதி ஒதுக்கீட்டில் பருத்தித்துறையில் அபிவிருத்திப் பணி

நெல்லியடி, ஜூன் 21

நாடாளுமன்ற உறுப்பினர்களின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் கீழ் பருத்தித்துறை பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பல்வேறு வேலைத்திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தில் அல்வாய் முருகமூர்த்தி ஆலய கட்டடத்துக்கு 2 லட்சம் ரூபாவும் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி சைக்கிள் தரிப்பிடத்துக்கு 2 லட்சம் ரூபாவும் கொற்றாவத்தை பொன்மகள் ஆரம்ப பாடசாலைக்கு 1 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், வியாபாரி மூலையில் உள்ள தூபிக்கு 1லட்சம் ரூபாவும், அல்வாய் குமுதினி கூட்டுறவு நிலையத்துக்கு மதில்சுவர் அமைப்பதற்கு 1 லட்சம் ரூபாவும் அல்வாய் சிறிலங்கா வித்தியாலய கட்டடத்துக்கு 75 ஆயிரம் ரூபாவும் புலோலி அறிவகம் கூட்டுறவு நிலையத்துக்கான தளபாடத்துக்கு 75 ஆயிரம் ரூபாவும், பருத்தித்துறை போக்குவரத்துச் சபைக்கான கணினி இணைப்புக்கு 50ஆயிரம் ரூபாவும், பருத்தித்துறை கலைமாணி விளையாட்டுக் கழகத்தினருக்கு 50 ஆயிரம் ரூபாவும், துன்னாலை அமெரிக்க மிஷன் கட்டடத்துக்கு 50 ஆயிரம் ரூபாவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# வெளிநோயாளர் பிரிவில் இடநெருக்கடி காரைநகர் ஆஸ்பத்திரிக்கு வருவோர் சிரமம்

காரைநகர், ஜூன் 21

காரைநகர் அரசினர் வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் இடவசதி போதாமையால் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். எனவே வெளிநோயாளர் பிரிவு கட்டடத்தை விஸ்தரிக்க வேண்டும் என காரைநகர் வைத்தியசாலை வைத்திய அதிகாரி எஸ்.சுவாமிநாதன் கோரிக்கை விடுத்துள்ளார்.

கிணைப்புக் குழுக் கூட்டத்தின்போதே அவர் மேற்கண்ட கோரிக்கையை முன்வைத்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு வைத்தியசாலைக்கு வைத்தியர் விடுதி அமைக்கப்பட்டது போன்று தாதியர் விடுதி ஒன்று அமைக்கப்பட வேண்டும். இங்கு உள்ள மருத்துவ மாதுக்கான விடுதி சேதமடைந்துள்ளமையால் அதனையும் மீள் அமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

வைத்திய சாலையில் ஆளணிப் பற்றாக்குறை நிலவுவதால் நோயாளர்களுக்கு நிறைவான சேவையை வழங்க முடியாதுள்ளது. எனவே அனைத்துப் பிரிவிலும் காணப்படும் ஆளணி வெற்றிடங்கள் நிரப்பப்படல் வேண்டும்.

நீண்ட காலமாக வர்ணம் பூசப்படாமல் இருந்த வைத்தியசாலைக்கு கடந்த வெசாக் தினத்தையொட்டி கடற்படையினர் வர்ணம் பூசித் தந்தனர் என்றார். (த-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இலங்கை விவகாரம் தொடர்பாக

# புதிய ஜனநாயகக் கட்சி நிறைவேற்றிய தீர்மானத்துக்கு தமிழர் பேரவை வரவேற்பு

இலங்கையில் நீதியையும் உண்மையையும் நிலை நாட்டத்தக்க, தன்னிச்சையான, பக்கசார்பற்ற, பன்னாட்டு விசாரணை நடத்தப்பட வேண்டும் என்னும் கோரிக்கையை வலியுறுத்தி புதிய ஜனநாயகக் கட்சி நிறைவேற்றிய தீர் மானத்துக்கு கனேடியத் தமிழர் பேரவை வரவேற்பு அளித்துள்ளது.

பிரிட்டனின் கொலம்பியா மாநில வன்கூவரில் நடைபெற்ற மூன்று நாள் கொள்கை பகுப்பு மாநாட்டில் மேற்கண்ட தீர்மானத்தை புதிய ஜனநாயகக் கட்சி நிறைவேற்றியது. மாநாட் டில் கலந்து கொண்ட கனேடி யத் தமிழர் பேரவையின் பேச் சாளர் டேவிட் பூபாலப்பிள்ளை கருத்து தெரிவிக்கையில்: மனித உரிமைகளைப் பேணிக் காப்பதில் தலைமைத்துவத்தை ஏற்றுள்ள ஜக் டேய்டன் மற்றும் புதிய ஜனநாயகக் கட்சிக்கும் கனேடியத் தமிழர் பேரவை நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது என்றார்.

மேலும் மதிப்புக்குரிய ஜக்லேய்டன் மற்றும் புதிய ஜனநாயகக் கட்சியின் இலங்கைக்கான ஆலோசகரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ராதிகா சிற்சபேசன், வெளிவிவகாரங்களுக்கான புதிய ஜனநாயகக் கட்சியின் விமர்சகர் போல் டேவர், நாடாளுமன்ற உறுப்பினர் பீட்டர் ஜூலியன், புதிய ஜனநாயகக் கட்சியின் முக்கிய தலைவர்கள் மற்றும் உண்மைக்கும் நியாயத்துக்கும் துணை நிற்கும் அனைத்து புதிய ஜன நாயகக் கட்சி உறுப்பினர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம் என்றார் அவர். (வ)

# தலையில் கை வைக்கிறார் மன்மோகன்!



நாம் சொல்வதையும் எமது கருத்துக்களையும் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கேட்க மறுக்கிறார். இந்த நிலையில் என்னால் என்ன செய்ய முடியும் என இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் தமிழக முதல்வர் ஜெயலலிதாவிடம் புலம்பியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

புதிதாகப் பதவியேற்ற பின்னர் தமிழக முதல்வர் ஜெயலலிதா புதுடில்லி சென்ற போது இந்தியப் பிரதமரைச் சந்தித்திருந்தார்.

இந்தச் சந்திப்பின் போதே இலங்கை விவகாரம் கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட போது மன்மோகன் சிங் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

போரின் போது உளவுத் தகவல்கள், செய்மதிப் புகைப்படத் தகவல்கள், ஆயுதங்கள் தொழில்நுட்ப உதவிகள் மற் றும் படையினரின் நேரடியான எல்லா உதவிகளையும் வழங்கிய இந்திய அரசு தற்போது இலங்கை தனது பேச்சை கேட்பதில்லை எனப் புலம்புவது அதன் இராஜதந்திர தோல்வியையே காட்டுவதாக என்று இணையத் தளச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

# இலங்கையின் கடற்படை உதவியுடன் கேரளக் கடலில் மீண்டும் நடமாடும் சோமாலியக் கடல் கொள்ளையர்

### இந்திய இணைய ஊடகம் தகவல்

இலங்கை கடற்படையின் உதவியுடன் இந்தியக் கடல் பகுதியில் சோமாலியக் கடற்கொள்ளையர்கள் மீண்டும் நடமாடத் தொடங்கியுள்ளதாக இந்திய இணைய ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இதனால் தூத்துக்குடி- கொழும்பு பயணிகள் கப்பல் சேவைக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாகவும் அந்த இணையத் தளம் சுட்டிக் காட்டியுள்ளது.

கேரள கடற்பகுதியில் திருவனந்தபுரத்துக்கு அருகில் சென்று கொண்டிருந்த கப்பல்களை கடத்த சோமாலிய கடல் கொள்ளையர்கள் மேற்கொண்ட இரண்டு முயற்சிகள் தொடர்பாக இந்திய கடற்படையும், கடலோரக் காவல்படையும் கவலையடைந்துள்ளன. கடந்த சனிக்கிழமை காலை திருவனந்தபுரத்துக்கு மேற்கே 28 கிலோ மீற்றர் தொலைவில் கப்பல் ஒன்றைக் கடத்தும் முதலாவது முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அந்தக் கப்பலில் இருந்து கிடைத்த தகவலை அடுத்து இந்தியக் கடற்படை உலங்குவானூர்தி ஒன்று அந்த இடத்துக்கு அனுப்பப்பட்டதாக லண்டனைத் தளமாக்க் கொண்ட அனைத் துலக கடல் சார் பிரிவு தெரிவித்துள்ளது.

இலங்கை கடற் பகுதியையே சோமாலியக் கடற் கொள்ளையர்கள் பயன் படுத்தியுள்ளனர் என்ற சந்தேகத்தை இது உறுதி செய்வதாகவும் இந்திய இணையத்தளம் குறிப்பிட்டுள்ளது.

சோமாலியக் கடல் கொள்ளையர் களினால் அந்தமானுக்குப் பயணம் மேற் கொள்ளும் தனியார் படகுகளுக்கும், கொழும்பு- தூத்துக்குடி பயணிகள் கப்பல் சேவைக்கும் ஆபத்து ஏற்படக் கூடும் என்றும் அந்த இணையத்தளம் தெரிவித்துள்ளது. (வ)

## 2 ஆம் வருட நினைவஞ்சலி



### கதிர்காமதேவன் ஜெனிற்ரோ நிரோஜன்

தோற்றம்: 10.09.1984

மறைவு: 21.06.2009

அன்பின் திருவுருவே ஆராத தெள்ளமுதே - எங்குதான் சென்றனையோ
இரண்டு ஆண்டென்ன ஈராயிரம் ஆண்டானாலும்
மாறுமோ உம் நினைப்பு இல்லை மறக்கத்தான் முடியுமோ - உம்மை நாம்
ஈரவிழிகளுடன் இதயம் தான் வெடிக்குதடா
எம் இதய வீணைகளின் நரம்புகளை வருடியவன் நீ அன்றோ...
இன்று நாம் சுருதியில்லா நரம்புகளாய் துவண்டு தான் கிடக்கின்றோம்
மீண்டும் வாராயோ எம் சுருதியினை மீட்டாயோ

61, மாட்டின் றோட், யாழ்ப்பாணம்.

(40)(5046,24,23)

அப்பா, அம்மா, அக்கா குடும்பம், தம்பி, அன்பு நெஞ்சங்கள்.

## தசாக கிருஹயக்ஞ அறிவித்தல்



### பிரம்மஸ்ரீ தியாகராஜக் குருக்கள் கார்த்திகேசசர்மா

கடந்த (14.06.2011) செவ்வாய்க்கிழமை சிவபத மடைந்த கீரிமலை நகுலேஸ்வரர் ஆதீனத்தைச் சேர்ந்த

பிரம்மஸ்ரீ தியாகராஜக்குருக்கள் கார்த்திகேசசர்மாவின் (வாகீஸ்ஐயா)

அந்தியக்கிரியைகள் பின்வரும் நாள்களில் நடைபெறும்.

தசாகம் - 22.06.2011 புதன்கிழமை முற்பகல் 10.00 மணி
ஏகோதிஷ்டம் - 23.06.2011 வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணி
சபிண்டீகரணம் - 24.06.2011 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணி
கிருஹயக்ஞம் - 25.06.2011 சனிக்கிழமை முற்பகல் 11.00 மணி

அன்னாரின் ஆத்ம சாந்திக்கிரியைகளில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து பிரார்த்திக்குமாறும் 25.06.2011 சனிக் கிழமை நடைபெறவிருக்கும் சமாராதனையிலும் பங்குகொள்ளுமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

பிள்ளையார் கோயிலடி, வடலியடைப்பு.

கா.துரைச்சாமிக்குருக்கள் (சித்தப்பா) (021 2017393)
சோ. லக்ஸ்மி நாராயணக்குருக்கள் (மைத்துனர்) (021 3735010)

(5044)(45)

# இலங்கை இராணுவத்தினரின் போர்க்குற்றங்கள் நாஸிப்படையினரின் நடவடிக்கைகளுக்கு ஒப்பானதாகும்

### இஸ்ரேலிய எழுத்தாளர் கருத்து

இலங்கையில் இடம்பெற்ற போரின் போது தமிழர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட படுகொலைச் சம்பவம் நாஸி படையினர் போரின் போது பொது மக்கள் மீது குண்டு வீசித் தாக்குதல்களை நடத்தியமைக்கு ஒத்ததாகும் என்று றே குக் (Ray Cook) என்னும் எழுத்தாளரின் இஸ்ரேலிய புளொக்கர் தளம் கருத்து வெளியிட்டுள்ளது.

சனல் 4 தொலைக் காட்சியின் இலங்கையின் கொலைக் களம் ஆவணப் படத்தைப் பார்த்த பின்னரே இந்த கருத்தை குறித்த புளொக்கர் வெளி யிட்டுள்ளது. சனல் 4 காணொளியின் காட்சிகளின் அடிப்படையில் பெண்கள் பாலியல் பலாத்காரத்துக்கு உட்படுத்தப்பட்டு பின்னர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

இனப்படுகொலையை மேற்கொண்டமை மூலம் இலங்கைப் படையினர் போர்க் குற்றத்தைப் புரிந்துள்ளனர். இதேவேளை விடுதலைப் புலிகளும் தமது சொந்த மக்களை தடுத்து வைத்தமை குற்ற மாகும் என்று மேற்படி எழுத்தாளர் கூறியுள்ளார்..

வைத்தியசாலைகள் மீது இலங்கைப் படையினர் தாக்குதல் நடத்தியதன் மூலம் அவர்கள் மிகப்பெரியளவிலான மனித உரிமை மீறல்களை மேற்கொண் டுள்ளதாகவும் அந்தத் தளம் கூறுகிறது. (வ)

## ஜனஜய லொத்தர்

உத்தியோகப்பூர்வ முடிவுகள்

வாரம் 237

சீட்டிழுப்புத் திகதி 19.06.2011

வெற்றி இலக்கங்கள்: 31 34 36 47

சுப்பர் இலக்கம்: 06

சுப்பர் பரிசுப்பொதி — ரூ. 7,823,930/=

| வெற்றி இல. | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த ஏதும் 1 இலக்கத்துக்கும் | 111865 | ரூ. 20/= | ரூ. 2,237,300 |
| சுப்பர் இலக்கத்துடன் ஏதும் 1 இலக்கத்துக்கும் | 10185 | ரூ. 40/= | ரூ. 407,400 |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த ஏதும் 2 இலக்கங்களுக்கும் | 8643 | ரூ. 100/= | ரூ. 864,300 |
| சுப்பர் இலக்கத்துடன் ஏதும் 2 இலக்கங்களுக்கும் | 774 | ரூ. 200/= | ரூ. 154,800 |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த ஏதும் 3 இலக்கங்களுக்கும் | 199 | ரூ. 1,500/= | ரூ. 298,500 |
| சுப்பர் இலக்கத்துடன் ஏதும் 3 இலக்கங்களுக்கும் | 16 | ரூ. 3,000/= | ரூ. 48,000 |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த ஏதும் 4 இலக்கங்களுக்கும் | 1 | ரூ. 1,000,000/= | ரூ. 1,000,000 |
| சுப்பர் இலக்கத்துடன் ஏதும் 4 இலக்கங்களுக்கும் | | ரூ. 7,823,930/= | |
| மொத்த எண்ணிக்கை | 131683 | | ரூ. 5,010,300/= |

வியாழக்கிழமை சுப்பர் பரிசுப்பொதி ரூ. 8,163,740/= உட்பட வரிவிலக்கற்ற புதிய மோட்டார் வாகனமும் அதன் மிகுதிப்பணமும்

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02
தொலைபேசி: 2 333 546 - 47 தொலைநகல்: 2 333 545
Website: www.dlb.lk

## மஹஜன சம்பத

சீட்டிழுப்பு இல. 2408

திகதி 19.06.2011

அலுவலக முடிவுகள்

வெற்றி எழுத்து: H

வெற்றி எண்கள்: 3 9 6 8 5 2

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | H | 3 | 9 | 6 | 8 | 5 | 2 | ரூபா. 20,278,058/= | பரிசு | - |
| 1ம் பரிசுகள் | | 3 | 9 | 6 | 8 | 5 | 2 | ரூபா. 20,00,000/= | பரிசுகள் | 01 |
| 2ம் பரிசுகள் | | | 9 | 6 | 8 | 5 | 2 | ரூபா. 100,000/= | பரிசுகள் | 08 |
| 3ம் பரிசுகள் | | | | 6 | 8 | 5 | 2 | ரூபா. 10,000/= | பரிசுகள் | 75 |
| 4ம் பரிசுகள் | | | | | 8 | 5 | 2 | ரூபா. 1,000/= | பரிசுகள் | 823 |
| 5ம் பரிசுகள் | | | | | | 5 | 2 | ரூபா. 100/= | பரிசுகள் | 8,116 |
| 6ம் பரிசுகள் | | | | | | | 2 | ரூபா. 20/= | பரிசுகள் | 80,322 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7ம் பரிசுகள் | | 3 | 9 | 6 | 8 | 5 | | ரூபா. 10,000/= | பரிசுகள் | 09 |
| 8ம் பரிசுகள் | | 3 | 9 | 6 | 8 | | | ரூபா. 1,000/= | பரிசுகள் | 84 |
| 9ம் பரிசுகள் | | 3 | 9 | 6 | | | | ரூபா. 100/= | பரிசுகள் | 806 |
| 10ம் பரிசுகள் | | 3 | 9 | | | | | ரூபா. 50/= | பரிசுகள் | 8,025 |
| 11ம் பரிசுகள் | H | | | | | | | ரூபா. 20/= | பரிசுகள் | 32,208 |

அடுத்த வார சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூபா. 20,651,549.00

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூபா. 8,091,050.00
ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும். பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கும் வளமான நாட்டிற்கும்

தேசிய லொத்தர் சபை

234/2 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 4607000 Hotline: 2433631

முடிவுகளை அறிய www.nlb.lk

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அரசுக்கு எதிராகச் சர்வதேச வழக்கு; வெளிநாட்டுத் தொடர்புகளிலும் பாதிப்பு

## ரணில் விக்கிரமசிங்க கூறுகிறார்



கொழும்பு; ஜூன் 21

வெளிநாடுகளில் அரசுக்கு எதிராகத் தொடுக்கப்படும் வழக்குகள் எதிர்காலத்தில் இலங்கையின் வெளிநாட்டுத் தொடர்புகளில் பாதிப்பேற்படுத்தக் கூடும் என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

சப்ரகமுவ மாகாண விகாரையொன்றில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது,

வெளிநாடுகளில் இருக்கும் நீதிமன்றங்களில் யாரும் அரசுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய முடியும்.

அவ்வாறான வழக்குகள் தொடுக்கப்படுவதற்கு அரசின் ஒரு சில செயற்பாடுகளே காரணமாக அமைந்திருக்கின்றன. பிரச்சினைகளை ஆரம்பத்திலேயே கிள்ளி எறிய வேண்டிய அரசு அதனை பூதாகரமாக வளர விடுவதன் காரணமாகவே இன்றைய நெருக்கடி நிலைமைகள் ஏற்பட்டுள்ளன.

எந்தவொரு பிரச்சினையையும் எதிர்கொள்வதற்கான சாணக்கியம் அரசுக்கு இல்லை. அவ்வாறு இருந்திருக்குமானால் இன்று அரசுக்கு எதிராக நிற்கும் சர்வதேச சமூகம் இலங்கையுடன் கைகோர்த்து எமது எதிரிகளுக்கெதிரான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கும்.

ஆனால் இன்று வெளிநாடுகளில் ஜனாதிபதிக்கு எதிராக வழக்குகள் தான் தொடுக்கப்படுகின்றன.

அவற்றின் காரணமாக நம் நாட்டின் மக்களும், எமது வெளிநாட்டுத் தொடர்புக்கான இராஜதந்திர சேவைகளுமே பாதிக்கப்படப் போகின்றன - என்றார். (ச)

## வெளியீடு.....



முன்னாள் பிரதமர் டட்லி சேனநாயக்காவின் 100ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அவரின் சுயசரிதை நூல் வெளியிடப்பட்டது. இந்த நிகழ்வில் ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சி முக்கியஸ்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச)

# உதவிகளை துஷ்பிரயோகம் செய்து வரும் தொண்டு நிறுவனங்கள்

கொழும்பு, ஜூன் 21

தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் உதவிகளைத் துஷ்பிரயோகம் செய்து வருகின்றன என அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

ஆழிப்பேரலை முதல் அண்மைய வெள்ளப் பெருக்கு வரையில் வெளிநாடுகளிடமிருந்து கிடைக்கப் பெற்ற நிதிகளைத் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் துஷ்பிரயோகம் செய்துள்ளன என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொண்டு நிறுவனங்களுக்குக் கிடைக்கும் பணத்தில் ஒரு தொகுதி மட்டுமே அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டோருக்கு வழங்கப்படு கின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதாக ஐக்கிய நாடுகள் அமைப்பு அறிவித்த போதிலும், சில தன்னார்வத்தொண்டு நிறுவனங்கள் அந்த நிதியை தமது சொந்தத் தேவைகளுக்குப் பயன்படுத்திக் கொண்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் அரசின் ஊடாகவே நன்கொடைகள் வழங்கப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

# இலங்கை ஆசிரியர்களுக்கு உருது மொழிப் பயிற்சி

கொழும்பு, ஜூன் 21

இலங்கையிலுள்ள ஆசிரியர்களுக்கு பாகிஸ்தானின் தேசிய மொழியான உருது மொழி கற்பிக்கப்படவுள்ளது என கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.குணவர்த்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் இலங்கைக்கான பாகிஸ்தான் தூதருடன் பேச்சு நடத்தப்படவுள்ளது என்றும் அவர் கூறினார்.

கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பிலுள்ள பாகிஸ்தான் தூதரகத்தில் 107 இலங்கை மாணவர்களுக்கு ஜின்னா புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்விலேயே அவர் இவ்வாறுதெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

நடைமுறையிலுள்ள கல்விமுறையில் மாற்றம் கொண்டுவரப்படும். இதனடிப்படையில் பாடத் திட்டங்கள், கற்பித்தல் முறைகள் போன்றவற்றிலும் மாற்றங்கள் மேற்கொள்ளப்படும்.

2012 ஆம் ஆண்டு முதல் ஜி.சீ.ஈ.சாதாரண தரப் பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு மூன்று மாத காலத்திற்குள் தொழிற்பயிற்சி வழங்கப்படவுள்ளது. இதே போன்று உயர்தரம் எழுதிய மாணவர்களுக்கும் தொழிற்பயிற்சி வழங்கப்படவுள்ளது.

அடுத்த நான்கு வருடத்திற்குள் இலங்கையின் அறிவு மையத்தை விருத்தி செய்வதற்காக 4,400 மில்லியன் அமெரிக்க டொலர் ஒதுக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் பாடசாலைகள், ஆசிரியர் பயிற்சி நிலையங்கள் அபிவிருத்தி செய்யப்படும் - என்றார். (ச)

# சிறந்ததொரு தலைமைத்துவம் ஐக்கிய தேசியக்கட்சிக்குத் தேவை

கொழும்பு, ஜூன் 21

நாட்டிலுள்ள பொதுமக்களின் நம்பிக்கையை வென்றெடுக்கக் கூடியதான தலைமைத்துவமொன்று ஐ.தே.க.வுக்குத் தேவை என்று அக்கட்சியின் முக்கியஸ்தர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தெரிவித்துள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியின் தொழிற்சங்கமான தேசிய ஊழியர் சங்கத்தின் கிளைகளுக்கு அண்மையில் நிதி வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது;

ஐக்கிய தேசியக் கட்சி என்பது வெற்றிகளை ஈட்டக் கூடிய கட்சியொன்றாகும். அதன் காரணமாக அதன் தலைமைத்துவத்துக்கு நாட்டு மக்களின் நம்பிக்கையை வென்றெடுக்கக் கூடிய தலைமைத்துவமொன்று தேவை.

உலகின் மாற்றங்களை உள்வாங்கிக் கொண்டு காலத்திற்கேற்ற மாற்றங்களை உருவாக்கிக் கொண்டால் ஐக்கிய தேசியக் கட்சியை வெற்றிப்பாதையில் இட்டுச் செல்ல முடியும். அதற்காக புத்திசாதுரியத்துடன் செயற்பட வேண்டும். இன்றைய அரசு ஊழல் மோசடிகளை கட்டவிழ்த்து விட்டுள்ளது. குடும்ப ஆட்சியை முன்னிறுத்தி செயற்படுகின்றது. அவற்றுக்கு எதிராகப் போராட ஐக்கிய தேசியக்கட்சியைப் பலப்படுத்த வேண்டியுள்ளது - என்றார். (ச)

# பல வருடங்களுக்கு முன் வந்த சட்டங்களைத் திருத்துகிறது அரசு

கொழும்பு, ஜூன் 21

புலிகளின் வெளிநாட்டு சொத்துக்களை முடக்குதல், நிதி சேகரிப்பு நடவடிக்கைகளை தடுப்பதற்கான முயற்சியாக நிதிப் பரிமாற்றச் சட்டம், பயங்கரவாத நிதியளிப்பு தடைச்சட்டம் ஆகியவற்றில் திருத்தங்களை செய்வதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

இந்த உத்தேச சட்டத் திருத்தங்கள் சட்டமா அதிபரின் அங்கீகாரத்திற்கு காத்திருப்பதாக மத்திய வங்கியின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

சட்டமா அதிபரின் அங்கீகாரம் கிடைத்தவுடன் அவை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

பல வருடங்களுக்கு முன்னர் இந்தச் சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டபோது. சூழ்நிலை வித்தியாசமாக இருந்தது. இப்போது சந்தேகத்திற்கிடமான, பரிமாற்றங்கள் தொடர்பாக நாம் இன்னும் அதிக விடயங்களைச் செய்ய வேண்டியிருக்கிறது.

அதனால் இந்தச் சட்டங்கள் திருத்தப்பட வேண்டும். இதற்காக மத்தியவங்கி தேவையானவற்றைச் செய்துள்ளது என்று மேலும் தெரிவித்துள்ளார். (ச)

## ஈராக்கில் உண்ணாவிரதப் போராட்டம்;

# இலங்கையர்கள் பன்னிருவர் வைத்தியசாலையில் அனுமதி

கொழும்பு, ஜூன் 21

18 மாதங்களுக்கான சம்பளத்தை வழங்குமாறு கோரி ஈராக்கின் பக்தாத், அமரா ஆகிய நகரங்களில் உண்ணா விரதப் போராட்டத்தை நடத்திவரும், 41 இலங்கையர்களில் 12 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தப் பிரச்சினையில் ஈராக் அரசு தலையிட்டதை அடுத்து, வழங்கப்பட வேண்டிய சம்பளத்தில் 50 சதவீதத்தை வழங்க உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது. இதனையடுத்து, தினம் ஒரு தடவை உணவை அருந்தப் போராட்டக்காரர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இந்தப் பிரச்சினை சம்பந்தமாக இலங்கை அரசும் தலைவீடுகளை மேற்கொண்டுள்ளதால் பிரச்சினைக்கு முடிவு காணப்பட்டது. இந்த இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்து வர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தலைவர் கிங்ஸ்லி ரணவக தெரிவித்துள்ளார். (ச)



உலகக் குருதிக் கொடையாளர் தினத்தை முன்னிட்டு யாழ். மாவட்டத்தில் உள்ள தன்னார்வக் குருதிக் கொடையாளர்கள், எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் வைத்து யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கியினால் கௌரவிக்கப்பட உள்ளார்கள்.

இரத்ததானம் உயிர்காக்கும் உன்னத பணி

* ஆரோக்கியமானவர்களாகவும் உடல் நிறை 50 கி.கி. இற்கு மேற்பட்டவராகவும் - வயது 18 தொடக்கம் 60 வரையிலும் - இரத்ததானம் வழங்குவதற்கு சில மணி நேரங்களுக்குள் உணவு உட்கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.
* ஆண், பெண் இருபாலாரும் எவ்வித பாதிப்பும் இல்லாது நான்கு மாதங்களுக்கு ஒரு தடவை இரத்ததானம் செய்யலாம்.

மேற்கூறிய தேவைகளுக்கு மனிதக் குருதியை மட்டுமே பயன்படுத்த முடியும்.

இரத்தவங்கி, போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம். 021-2223063.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
21 ஜூன் 2011 செவ்வாய்க்கிழமை

# மனநலம் பாதிக்கப்பட்டவர்களை ஒதுக்கி வைக்காது சிகிச்சை வழங்கவும்

## உளநல வைத்திய நிபுணர் அறிவுரை

வவுனியா, ஜூன் 21

மனநலம் பாதிக்கப்பட்டவர்களை ஒதுக்கி வைக்காது ஆரம்பத்திலிருந்தே உரிய சிகிச்சையை அவர்களுக்கு வைத்தியசாலையில் பெற்றுக் கொடுப்பது அவசியமானது. இவ்வாறு தெரிவித்தார் வவுனியா பொது வைத்தியசாலையின் உளநல வைத்திய நிபுணர் டாக்டர் எஸ்.சிவதாஸ்.

கடந்த வாரம் வேல்ட்விஷன் நிறுவனத்தால் ஊடகவியலாளர்களுக்கென ஏற்பாடு செய்யப்பட்ட பயிற்சிப்பட்டறை ஒன்று வவுனியா சுவர்க்கா மண்டபத்தில் நடைபெற்றது. இதில் கருத்துரை வழங்கிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

போர் காரணமாக எமது வடபகுதியில் பல மக்கள் உள நோய்களால் பாதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

இவர்களை ஆரம்பத்திலேயே இனங்கண்டு சிகிச்சை வழங் குவதன் ஊடாக அவர்களை இலகுவில் சுகமாக்க முடியும். மனநலம் பாதிக்கப்பட்டவர்களை அன்புடனும் அரவணைப்புடனும் பாதுகாப்பதன் தேவை மிகவும் அவசியமானது.

மேலும் பொது மக்களை நல்வழிப்படுத்துவதும் அவர்களுக்குச் சரியான வழிகாட்டல்களை உரிய வேளையில் வழங்குவதும் ஊடகங்கள் ஆகும். எனவே ஊடகவியலாளர்கள், மக்களின் மனநலத்தைப் பேணுவதற்கான வழிகாட்டல்களை வழங்குவது இன்றியமையாத ஒன்றாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தப் பயிற்சிப் பட்டறையில் வவுனியா பொது வைத்தியசாலையின் உளநலப் பிரிவின் சிரேஷ்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். சுதாகரனும் வேறு வைத்திய அதிகாரிகளும் உளச் சமூக நன்நல மேம்பாட்டு வழிமுறைகளில் ஊடகவியலாளர்களின் பங்கின் முக்கியத்துவம் தொடர்பாகக் கருத்துரைகளை வழங்கியிருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

(க-501)

## நல்ல மனம் படைத்தவர்கள்...




பாலர்களுக்கு உதவிகள்: யாழ். நகர்மைய றோட்டறக்ட் கழகமும், யாழ்ப்பாண றோட்டறிக் கழகமும் இணைந்து வன்னிப் பிரதேசத்தில் பரந்தன், கிளிநொச்சி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த பாலர் பாடசாலைகளுக்குத் தளபாடங்கள் மற்றும் கற்றல் உபகரணங்களை வழங்கியுள்ளன. (க)

# காயமடைந்த மூன்று வீரர்கள் சிகிச்சைக்காக அனுமதி

மன்னார், ஜூன் 21

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் கடந்த 14ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட மாவட்ட அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டப் போட்டியின் போது இடம்பெற்ற மோதலில் காயமடைந்த வீரர்களில் மூவர் தற்போது மன்னார் மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக மன்னார் வைத்திய சாலையின் வைத்திய அத்தியட்சகர் முகமட் ஆசாத் தெரிவித்தார்.

ஆட்டத்தின் போது கிளிநொச்சி மற்றும் மன்னார் மாவட்ட அணிகளுக்கிடையில் ஏற்பட்ட மோதலால் 6 பேர் காயமடைந்தனர். கடந்த 14ஆம் திகதி காலை யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. கிளிநொச்சி மற்றும் மன்னார் மாவட்ட அணிகள் மோதிய போட்டியின் போது மன்னார் அணி 2 கோல்களைப் போட்டு முன்னிலையில் இருந்தது.

போட்டி முடிவதற்கு 15 நிமிடம் இருக்கையில் இரு அணி வீரர்களுக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியது. இதனை அடுத்து கிளிநொச்சி மாவட்ட அணி சார்பாக வெளியில் பார்வையாளர்களாக நின்றவர்கள் மைதானத்தில் இறங்கி மன்னார் வீரர்களைத் தாக்கினர் என்று கூறப்பட்டது.

இந்தக் கைகலப்பின் போது மன்னார் மாவட்ட வீரர்கள் 4 பேரும் கிளிநொச்சி மாவட்ட வீரர்கள் இருவரும் காயமடைந்தனர். தாக்குதலுக்குள்ளான மன்னார் மாவட்ட வீரர்கள் யாழ்ப்பாணம் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்ற பின் மன்னார் திரும்பினர்.

எனினும் மன்னார் மாவட்ட வீரர்கள் மூவர் திடீர்ச் சுகவீன முற்ற நிலையில் அவர்கள் தொடர்ந்து மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் முகமட் ஆசாத் தெரிவித்தார்.

மேலதிக விசாரணைகளை மன்னார்ப் பொலிஸார் மேற்கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். (க-604)

# கிரவலுக்கு தடை விதிக்கப்பட்டதால் வீதிகளை அமைப்பதில் சிரமம்

முல்லைத்தீவு, ஜூன் 21

முல்லைத்தீவு மன்னாகண்டலில் இருந்து கிரவல் எடுப்பதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதால் வீதிகளைச் சிறந்த முறையில் அமைக்க முடியாதுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் மட்டுமல்ல ஏனைய இடங்களுக்கும் மன்னாகண்டலில் இருந்தே கிரவல் பெறப்பட்டு வந்தது.

இந்தக் கிரவல் சிறிய கற்களோடு கூடியதாக இருப்பதால் வீதிகளுக்கு இடுவதில் உகந்ததாகக் காணப்பட்டது.

தற்போது வேறு இடங்களில் இருந்து பெறப்படும் கிரவல் வீதிகள் அமைப்பதற்கு உகந்ததாகக் காணப்படவில்லை. இதனால் வீதிகளைப் புனரமைப்புச் செய்வோர் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

ஆகவே முன்னரைப் போன்று மன்னாகண்டலில் இருந்து கிரவலைப் பெறுவதற்கு அனுமதி வழங்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

(க-500)

# உடையார்கட்டு, இரணைப்பாலை, கோம்பாவில் பகுதிகளில் மக்கள் மீளக்குடியமர்வு

முல்லைத்தீவு, ஜூன் 21

புதுக்குடியிருப்பு உதவி அரச அதிபர் பிரிவில் உள்ள மேலும் சில கிராமங்களில் மக்கள் மீள்குடியமர்த்தப்படவுள்ளனர் என்று மாவட்ட அரச அதிபர் அ.பத்திநாதன் தெரிவித்தார்.

உடையார்கட்டு வடக்கு, உடையார்கட்டு தெற்கு, கோம்பாவில், இரணைப்பாலை ஆகிய பகுதிகளிலேயே மக்கள் மீளக் குடியமர்த்தப்படவுள்ளனர்.

தற்போது இந்தப் பகுதிகளில் மிதிவெடி அகற்றும் செயற்பாடு துரித கதியில் இடம் பெற்றுவருகிறது. அந்தப் பணி இன்னும் சில தினங்களில் நிறைவு பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அவ்வாறு மிதிவெடி அகற்றப்பட்டதற்கான சான்றிதழ் கிடைக்கப் பெற்றதும் மக்களை மீளக் குடியமர்த்த முடியும். இன்னமும் இரண்டு வார கால அவகாசத்தில் மக்கள் மீளக் குடியமர்த்தப்படுவார்கள் எனத் தான் நம்புவதாகவும் மாவட்ட அரச அதிபர் மேலும் தெரிவித்தார். (க-14)

# முல்லைத்தீவு போட்டி முடிவுகள்

அளம்பில், ஜூன் 21

பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற முல்லைத்தீவு மாவட்ட மட்டப் பெரு விளையாட்டுக்களின் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

ஒவ்வொரு விளையாட்டினதும் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப்பிடித்த பாடசாலை அணிகள் மகாண மட்ட விளையாட்டுப் போட்டிகளுக்குத் தகுதி பெற்றுள்ளன. அவற்றின் தொடர்ச்சி வருமாறு:

**உதைபந்து**

**19 வயது - பெண்கள்பிரிவு**

வித்தியானந்தாக் கல்லூரி, கற்சிலைமடு அ.த.க.பாடசாலை, செம்மலை ம.வி.

**துடுப்பாட்டம்**

**19 வயது - ஆண்கள் பிரிவு**

முல்லைத்தீவு ம.வி, கதிர்காமர் வித்தியாலயம், வித்தியானந்தாக் கல்லூரி.

**19 வயது - பெண்கள் பிரிவு**

குமுழமுனை ம.வி, வித்தியானந்தாக் கல்லூரி, கதிர்காமர் வித்தியாலயம்.

**எல்லே**

**19 வயது - ஆண்கள் பிரிவு**

முல்லைத்தீவு ம.வி, செம்மலை ம.வி, வற்றாப்பளை ம.வி.

**19 வயது - பெண்கள் பிரிவு**

செம்மலை ம.வி, கற்சிலைமடு அ.த.க.பாடசாலை, பாலி நகர் ம.வி.

**கபடி**

**19 வயது - ஆண்கள் பிரிவு**

முல்லைத்தீவு ம.வி, பாலி நகர் ம.வி, வன்னிவிளாங்குளம் அ.த.க.பாடசாலை.

**கபடி**

**19 வயது - பெண்கள் பிரிவு**

முத்தையன்கட்டு வலது கரை அ.த.க, பாலி நகர் ம.வி, கற்சிலைமடு அ.த.க.

(க-[illegible])

# மாகாண மட்ட எழுத்தாக்கப் போட்டியில் கிளிநொச்சிக்கு ஒன்பது இடங்கள்

கிளிநொச்சி, ஜூன் 21

வடமாகாண மட்ட பாடசாலை மாணவர்களிடையேயான தமிழ் மொழித்தின எழுத்தாக்கப் போட்டியில் கிளிநொச்சி கல்வி வலயத்துக்கு 9 இடங்கள் கிடைத்துள்ளன. வெற்றி பெற்ற மாணவர்களது விவரம் வருமாறு:-

**கட்டுரை வரைதல்**

**பிரிவு - 2**

முதலாமிடம் - க. அபிஷா (முருகானந்த ம.வி).

**பிரிவு - 3**

இரண்டாமிடம் -ந. சாமந்தி ( திருவையாறு ம.வி).

**தமிழியற் கட்டுரை வரைதல்**

**இலக்கியம் நயத்தல்**

**பிரிவு - 5**

மூன்றாமிடம் - ம.கேசவன் (கிளிநொச்சி இந்துக் கல்லூரி).

**இலக்கணப் போட்டி**

**பிரிவு - 4**

மூன்றாமிடம் - [illegible] (கிளிநொச்சி மத்திய கல்லூரி).

**திறனாய்வுப் போட்டி**

**பிரிவு - 5**

இரண்டாமிடம் - தி.நிரோஷா (கிளிநொச்சி மத்திய கல்லூரி).

**குறுநாடக ஆக்கம்**

**பிரிவு - 4**

முதலாமிடம் - பா.அஜித்தா (கிளிநொச்சி மத்திய கல்லூரி).

**கவிதை ஆக்கம்**

**பிரிவு - 5**

இரண்டாமிடம் - கு.சக்தீனா (வேரவில் இந்து ம.வி.)

**சிறுகதை ஆக்கம்**

**பிரிவு - 4**

முதலாமிடம் - மு. கயல்விழி (கிளிநொச்சி மத்திய கல்லூரி).

**குறுநாடக ஆக்கம்**

**பிரிவு - 5**

இரண்டாமிடம் - ஜெ. கோகிலா (கிளிநொச்சி மத்திய கல்லூரி).

(க-405)

# உதைபந்தாட்ட லீக்கினால் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

கிளிநொச்சி, ஜூன் 21

கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக் கடந்த சில வருடங்களின் பின்னர் இயங்கத் தொடங்கியதைத் தொடர்ந்து உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியொன்றை நடத்துகின்றது.

இன்று பிற்பகல் 3 மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள போட்டியில் கிளிநொச்சி குறிஞ்சி விளையாட்டுக் கழகமும், இளம்பறவைகள் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

லீக் முறையில் நடைபெறவுள்ள இந்தப் போட்டியில் 13 கழகங்கள் கலந்து கொள்ளவுள்ளன. (க-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார அபிவிருத்தி அமைச்சால் வடமாகாணங்களில் கட்டுமான வேலைகள்

கிளிநொச்சி, ஜூன் 21

பொருளாதார அபிவிருத்தி அமைச்சு வடமாகாண சபையின் ஊடாகப் பல கட்டுமானங்களை மேற்கொள்ளவுள்ளது.

முரண்பாடுகளால் பாதிப்புற்ற பிரதேசங்களுக்கான அவசரகாலக் கருத்திட்டத்தின்கீழ் இலங்கை அரசினதும், ஆசிய அபிவிருத்தி வங்கியினதும் நிதியின் மூலம் இந்தக் கட்டுமானங்கள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

ஜூலை மாதம் 16 ஆம் திகதிக்கு முன்னர் இவற்றுக்கான கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் நல்லூர் உவநீர்த் தடுப்பு அணை 3 லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளது.

வவுனியா மாவட்டத்தில் மாளிகைக்குளம் நீர்ப்பாசன அணைக்கட்டு 2 லட்சம் ரூபா செலவிலும், இதன் வாய்க்கால்கள் 2 லட்சம் ரூபா செலவிலும், சேமமடுக்குளம் நீர்ப்பாசன வாய்க்கால் வேலைகள் 3 லட்சம் ரூபா செலவிலும் இந்தக் குளத்தின் நீர்ப்பாசன வாய்க்கால் வேலை 5 லட்சம் ரூபா செலவிலும் புனரமைக்கப்படவுள்ளன.

(க-121)

# திருட்டுப் போனது யுவதியின் சைக்கிள்

கிளிநொச்சி, ஜூன் 21

மனித உரிமைகள் பாதுகாவலர் பயிற்சி நெறிக்குச் சென்ற யுவதியின் சைக்கிள் கடந்த 16 ஆம் திகதி வியாழக்கிழமை காணாமற் போயுள்ளது.

கிளிநொச்சி கருணா நிலையத்தில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவால் நடத்தப்படும் மனித உரிமைகள் பாதுகாவலர் பயிற்சி நெறிக்குச் சென்ற செல்வாநகரைச் சேர்ந்த யுவதி ஒருவரது சைக்கிள் நிறுத்தி வைக்கப்பட்ட இடத்தில் இருந்து காணமற் போயுள்ளது.

மேற்படி யுவதி தனது சைக்கிளை கருணா நிலைய வளாகத்தினுள் நிறுத்திப் பூட்டி விட்டு மனித உரிமைப் பாதுகாவலருக்கான வகுப்பில் கலந்து கொண்டிருந்தார். மதியபோசனத்துக்காக இடைவேளையின் போது இவர் சென்று பூட்டி விட்ட தனது சைக்கிளைப் பார்த்த போதே காணாமல் போயுள்ளமை தெரிய வந்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக மனித உரிமைகள் வகுப்பை நடத்திய அதிகாரிகளுக்கும் யுவதியால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-426)

# முல்லைத்தீவு மாவட்டத்தில் இதுவரை 24 ஆயிரம் குடும்பங்கள் மீள்குடியமர்வு

வவுனியா, ஜூன் 21

வவுனியா இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருந்த 24 ஆயிரம் குடும்பங்கள் முல்லைத்தீவு மாவட்டத்தில் இதுவரை மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளதாக மாவட்ட அரச அதிபர் அ.பத்திநாதன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஐந்து உதவி அரச அதிபர் பணிமனைகளிலும் இந்த மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர். வன்னிப் பகுதியில் இடம்பெற்ற இறுதி யுத்தததின்போது இடம்பெயர்ந்த நிலையில் சரணடைந்த மக்கள் வவுனியாவிலுள்ள 10 இக்கும் மேற்பட்ட இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருந்தனர். அவர்களில் 24 ஆயிரத்து 240 குடும்பங்களைச் சேர்ந்த 73 ஆயிரத்து 318 அங்கத்தவர்கள் முல்லைத்தீவு மாவட்டத்தில் மீளக்குடியமர்த்தப் பட்டுள்ளனர் என்று முல்லைத்தீவு அரச அதிபர் மேலும் தெரிவித்தார்.

(க-14)

# நல்லின விதைகளை பெற முடியாத நிலை

முல்லைத்தீவு, ஜூன் 21

கடந்த காலத்தில் ஏற்பட்ட கடுமையான மழை காரணமாக நல்லின விதைகளைப் பெற முடியாத நிலை தோன்றியுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட விவசாயப் பணிப்பாளர் தெரிவித்தார்.

தற்போது வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் விதை உற்பத்தித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(க-500)

**காலத்தில் செய்யும் உதவி...**




தேவையுடையோருக்கு உதவிகள்: முல்லைத்தீவு மாவட்டம் மாந்தை கிழக்கு உதவி அரச அதிபர் பிரிவைச் சேர்ந்த செல்வபுரம், கரும்புள்ளியான், பல்லப்பாணி, பூவரசன்குளம், பாலிநகர் ஆகிய கிராமங்களில் மீள்குடியமர்ந்த மக்களுக்கு சோஆ நிறுவனம் 45 லட்சம் ரூபா பெறுமதியான பல்வேறு உதவிகளை வழங்குகின்றது.

## தொலைபேசி அழைப்புக்களை தேடியோடும் பாவனையாளர்

முல்லைத்தீவில் போதிய தொலைபேசிக் கோபுரங்கள் அமைக்கப்படாததால் மக்கள் தொலைபேசி அழைப்புக்களைப் பெறுவதில் அதிக சிரமங்களுக்கு முகம் கொடுத்து வருவதாகத் தெரிய வருகின்றது.

தமது தொலைபேசித் தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு இங்குள்ள மக்கள் வெவ்வேறு இடங்களுக்கு ஓடித்திரிவதைக் காணமுடிகின்றது. ஆனாலும் அவர்களின் தேவைக்கேற்றவாறு இணைப்புக்களைப் பெற முடியவில்லை.

இதுதொடர்பாகத் தற்போது இங்கு இயங்கி வரும் தொலைபேசி நிறுவனங்களின் முகவர்களிடம் முறைப்பாடு தெரிவித்த போதிலும் பயன் எதுவும் கிட்டவில்லை. அத்துடன் புதிது புதிதாகத் தொலைபேசி நிறுவனங்கள் இந்த மாவட்டத்தில் வேரூன்ற ஆரம்பித்துள்ளன.

எது எவ்வாறு இருந்த போதிலும் தமக்கு ஒழுங்கான தொலைபேசிச் சேவைகள் கிடைக்க வேண்டுமென இங்குள்ள மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

(க-500)

# புதூர் நாகதம்பிரான் ஆலயத்தின் பொங்கல் உற்சவம் 27 ஆம் திகதி

கிளிநொச்சி, ஜூன் 21

புதூர் நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் விழா உற்சவம் அடுத்த வாரம் நடைபெறவுள்ளது.

வவுனியா, புளியங்குளம் புதூர் நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் விழா உற்சவம் எதிர்வரும் 27ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

இந்தக் கோயிலில் எதிர்வரும் 26ஆம் திகதி 18 சங்காபிசேகம் இடம்பெற்று இரவு பண்டம் எடுத்து பொங்கல் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

வன்னிப்பகுதியில் உள்ள ஆலயங்களில் புதூர் நாகதம்பிரான் ஆலயமும் புதுமை மிக்கதாகப் போற்றப்பட்டு பொங்கல் விழாக்காலத்தில் நாட்டின் பல பாகங்களில் இருந்தும் பெருமளவு பக்தர்கள் வருகை தந்து வழிபடுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

நாட்டில் யுத்தம் முடிவுற்ற நிலையில் இந்தமுறை இந்த ஆலயத்துக்கு யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா போன்ற இடங்களில் இருந்தும் கிழக்கு மாகாணத்தில் இருந்தும் மலையகப் பகுதியில் இருந்தும் நாட்டின் ஏனைய பகுதிகளில் இருந்தும் பெருமளவான பக்தர்கள் வருகைதந்து நேர்த்திக்கடன் நிறைவேற்றுதல் போன்ற வழிபாடுகளில் ஈடுபடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆலய சூழலின் சுகாதார வசதிகள், பாதுகாப்பு போன்றவற்றை நிலைநாட்ட ஆலய நிர்வாகம் உரியவர்களுடன் தொடர்பு கொண்டுள்ளதாகவும் பல பாகங்களில் இருந்துவரும் பக்தர்களின் நன்மை கருதி போக்குவரத்து வசதிகள் ஆலயம் வரை செய்யப்பட்டுள்ளதாகவும் அறியக்கூடியதாக வுள்ளது.

புதூர் நாகதம்பிரான் ஆலயத்துக்கு வருகைதரும் பக்தர்கள் தமது நீண்டநாள் நேர்த்திக்கடன்களை நிறைவேற்றி நாகதம்பிரானுக்குப் பொங்கல் பொங்கி வழிபடுகின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

பாற்செம்புகள், கற்பூரச்சட்டிகள், தீமிதிப்பு, காவடிகள், தூக்குக் காவடிகள் போன்ற நேர்த்திக் கடன் வழிபாடுகளை பக்த அடியார்கள் நிறைவேற்றி வழிபடும் புதுமைமிக்க சிறப்புப் பொருந்திய ஆலயமாக இந்த ஆலயம் விளங்குகின்றது.

இந்த ஆலயத்தில் விடிய விடிய அன்னதான நிகழ்வுகளும் இடம்பெறுவதுடன் ஏலம் கூவி பொருள் விற்கும் நிகழ்வுகளும் இடம்பெறுவது வழமையாகும்.

(க-426)

# நாட்டின் பேரினவாத சக்திகளுக்குத் துணைபோகும் தமிழ் அரசியல் தலைமைகளை நிராகரித்து ஒதுக்குங்கள்

## செல்வம் எம்.பி. வேண்டுகோள்

மன்னார், ஜூன் 21

தமிழ் மக்கள் பேரினவாத சக்திகளுக்குத் துணைபோகும் தமிழ் அரசியல் தலைமைத்துவங்களை முற்றாக நிராகரித்துத் தமது தனித்துவத்தை வெளிக்காட்ட ஒருபோதும் பின்னிற்கக் கூடாது.

இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார் தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவரும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமாகிய செல்வம் அடைக்கலநாதன்.

வடக்கில் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் ஒத்திவைக்கப்பட்ட உள்ளூராட்சித் தேர்தல்கள் நடைபெறவுள்ளன. அண்மையில் நடைபெற்று முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மிகப் பெரும் வெற்றியைப் பெற்று தமிழ் மக்களின் தனித்துவமான சக்தி என்பதை எமது நாட்டு அரசியலில் மட்டுமன்றி சர்வதேச சமூகத்துக்கும் தெளிவாக மீண்டும் வெளிப்படுத்தியுள்ளது.

இந்த நிலைமையை மாற்றியமைக்க ஆட்சியிலுள்ளவர்களுக்கும் பேரினவாத சக்திகளுக்கும் துணைபோகும் சில அரசியல் சக்திகளைப் பயன்படுத்தும் நிலை அண்மைக் காலமாக அதிகரித்துக் காணப்படுகிறது. கொழும்பில் சுகபோகம் அனுபவித்து வாழ்ந்த சிலர், எமது மக்களின் துயரங்களைத் துளியளவும் அறிந்திராது கடந்த உள்ளூராட்சித் தேர்தலின் போது இறக்குமதி செய்யப்பட்டுத் தேர்தல்களத்தில் குதித்து இருந்த இடம் தெரியாமல் ஓடி ஒளிந்து கொண்டனர்.

இவர்கள் எதிர்காலத்திலும் எமது மக்களின் துயரங்களைத் தமக்குச் சாதகமாக்கிக் கொண்டு அரசியல் இலாபம் தேடுவதற்கு முயற்சி செய்வார்கள். இந்தச் சந்தர்ப்பவாதிகளை மக்கள் இனம் காண்பதுடன் உதறித் தள்ளவும் வேண்டும்.

எனவே மக்கள் அரசியல் உரிமைகளை வென்றெடுக்கும் பலம் பொருந்திய சக்தியாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைக் கட்டியெழுப்ப வேண்டும். எதிர்காலத்தில் வடக்கு, கிழக்குத் தமிழர் தாயகப் பிரதேசத்தில் எதிர்கொள்ளப்படும் எந்தவொரு தேர்தலிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மக்கள் ஆதரிக்க வேண்டும்.

எமது மக்களின் அரசியல் உரிமைகளை வென்றெடுக்கும் ஜனநாயக அரசியல் செயற்பாடுகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுதியாகச் செயற்படும் என்று மேலும் தெரிவித்தார் செல்வம். அடைக்கலநாதன் எம்.பி.

(க-601)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணினியில் மென்பொருளை அகற்றுவதற்கு

எம்முடைய பயன்பாட்டுக்கு ஏற்றவாறு கணினியில் மென்பொருள்களை நிறுவிப் பயன்படுத்துவோம். நாளடைவில் குறிப்பிட்ட சில மென்பொருள்களை பயன்படுத்துவதையே நிறுத்திவிடுவோம்.

அவ்வாறு கணினியில் அதிகமான மென்பொருள்கள் இருக்கும். மேலும் ஒரே பயன்பாட்டுக்கு ஒன்றுக்கும் மேற்பட்ட மென்பொருள்களை நிறுவிப் பயன்படுத்துவோம்.

அவ்வாறு இருக்கும் மென்பொருள்களால் கணினியின் இயக்கம் தடைப்படும். இவ்வாறு கணினியில் தேவையில்லாமல் இருக்கும் மென் பொருள்களை கணினியை விட்டு நீக்குவதற்கு விண்டோஸ் ஓபரேட்டிங் சிஸ்டத்தில் வழி உள்ளது.

ஆனால் அது ஒரு சில மென்பொருள்களைச் சரியாக கணினியை விட்டு நீக்கம் செய்யாது. இவ்வாறு கணினியை விட்டு நீக்க முடியாத மென்பொருள்களை கணினியை விட்டு நீக்கம் செய்ய மூன்றாம் தர மென்பொருளின் உதவியுடன் நீக்கம் செய்ய முடியும். அந்த வகையில் எமக்கு உதவி செய்யும் மென்பொருள் தான் Ainvo Uninstall Manager.

மென்பொருளை இணையத்தில் இருந்து பதிவிறக்கி கணினியில் நிறுவிக்கொள்ளவும். அதன்பின் ஒருமுறை கணினியை மறுதொடக்கம் செய்து கொள்ளவும். பின் அந்த அப்ளிகேஷனை 'ஓப்பின்' செய்யவும். பின் Find Programs என்னும் சுட்டியை அழுத்தி கணினியில் நிறுவப்பட்ட மென்பொருள்களை ஆராயவும். Remove Programs என்னும் சுட்டியை அழுத்தவும்.

அடுத்ததாகத் தோன்றும் விண்டோவில் தேவையில்லாத அப்ளிகேஷன்களை தேர்வு செய்து பின் Uninstall என்னும் சுட்டியை அழுத்தி கணினியை விட்டு அப்ளி கேஷனை நீக்கி கொள்ள முடியும். இந்த மென்பொருள் இலவச மென்பொருள் ஆகும். விண்டோஸ் இயங்கு தளத்தால் நீக்க முடியாத மென்பொருள்களையும் இந்த மென் பொருள் மூலமாக நீக்கம் செய்ய முடியும். http://www.ainvo.com/en/product.php?path=data/products/un/ என்னும் இணையத்தளத்தில் பதிவிறக்கிக் கொள்ளலாம்.

# பதிலீடுகளைத் தேடித் தரும் இணையத்தளம்

இந்த உலகத்தில் எல்லா பொருள் களுக்கும், சேவைகளுக்கும் பதிலீட்டு பொருள்களும், சேவைகளும் இருக் கின்றன. அதனால் தான் வர்த்தக நிறுவனங்களிடையே போட்டித்தன் மைகள் காணப்படுகின்றன.




இத்தகைய பதிலீட்டு பொருள் கள், சேவைகள் போன்றவற்றை இந்தத் தேடுதளங்கள் மூலம் பெற லாம்.

* DOOBLET.COM: இந்தத் தளமானது நீங்கள் தேடும் பொருளுக்கோ அல்லது கணினி சார்ந்த மென்பொருள்கள் சேவை கள் எதுவாயினும் நீங்கள் தேடிய சொல்லின் பதிலீடுகளை அவற்றின் பதிலீட்டு தன்மைக்கு ஏற்றால் போல பட்டியலிடுகின்றது. அத்துடன் சில படங்களையும் உங்களுக்கு தருகிறது.

* ALTERNATIVE TO .NET: இந்தத் தளம் முற்றிலும் கணினி மற்றும் தொலைபேசி போன்ற தொழில்நுட்ப சேவைகளுக்கான பதிலீடுகளைப் பட்டியல் படுத்துகின்றது.

# உங்களின் திறமைகளை பரிசோதிப்பதற்கு

உலகில் உள்ள அனைவருக்கும் ஒவ்வொரு திறமைகள் இருக்கும். உங்கள் திறமைகளைப் பரிசோதிப்பதற்காக ஒரு இணையத்தளம் உள்ளது.

நாம் எந்த விடயங்களில் நிபுணர் என்பதை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ள வழி செய்வதுதான் இந்தத் தளத்தின் நோக்கம். நிபுணர் என்றவுடன் ஏதோ டாக்டர் பட்டம் வாங்கி ஆய்வு கட்டுரை எல்லாம் சம்ர்ப்பித்திருக்க வேண்டும் என்று நினைத்து மிரண்டுவிட வேண்டாம்.

எல்லோருக்குமே ஏதாவது ஒரு விடயத்தில் அதிகப்படியான அனுபவமும் விடய ஞானமும் இருக்கும் அல்லவா? அந்த விடயம் தொடர்பான திறனையே இந்தத் தளம் நிபுணத்துவமாகக் கருதுகிறது.

உதாரணமாக ஒருவர் வருமான வரி எப்படிச் செலுத்த வேண்டும் என்பதில் கில்லாடியாக இருப்பார். இன்னொருவர் இணையத்தில் புதிய தகவல்களைக் கண்டுபிடிப்பதில் விஷேட திறன் பெற்றிருப்பார்.

சச்சின் சாதனை பட்டியலை விரல் நுனியில் வைத்திருப்பவர், ரெயில்களின் நேரம் மற்றும் அவற்றின் பாதைகளை அறிந்திருப்பவர், இளையராஜா பாட்டுக்களை வரிசையாக அறிந்திருப்பவர் என்று இப்படி சொல்லிக் கொண்டே போகலாம்.

எமது நண்பர்களிலேயே இத்தகைய நிபுணர்களை நாம் அடையாளம் காணலாம். கையடக்கத்தொலைபேசியில் புதிய சேவை கண்ணாமூச்சி காட்டுகிறதா, இது போன்ற விடயங்கள் எல்லாம் அவருக்குத்தான் சரியானது என்று கைத்தொலைபேசிப் புலியாக விளங்கும் நண்பரை நாடிச்செல்வோம் அல்லவா? சில நேரங்களில் நாம் கூட இந்த விடயம் எல்லாம் எனக்குத் தெரியும் என்று நாமறிந்த தலைப்புக் குறித்து பெருமைப்பட்டு கொள்வதுண்டு.

இத்தகை நிபுணத்துவத்தை பகிர்ந்து கொள்ளும் வாய்ப்பை தான் ஸ்மார்ட்டரர் ஏற்படுத்தி தருகிறது. நீங்கள் எவற்றில் சிறந்தவர் என்பதை இந்தத் தளத்தின் மூலம் இணைய உலகுக்கு அறிவிக்கலாம்.

இந்த இடத்தில் ஒரு விடயத்தைக் கவனிக்க வேண்டும். நீங்கள் நிபுணர் என்று மட்டும் அறிவித்துக் கொண்டால் போதாது. அதற்கான ஆதாரம் வேண்டும். அதாவது நீங்கள் நிபுணர்தான் என்ற சான்றிதழ் பெற வேண்டும்.

சான்றிதழுக்கு எங்கே போவது என குழம்ப வேண்டாம். இந்தத் தளமே அத்தகைய சான்றிதழையும் வழங்குகிறது. ஆனால் அந்த சான்றிதழைப் பெற நீங்கள் உங்களை பரிசோதனைக்கு உட்படுத்திக் கொண்டு திறமையை நிரூபிக்க வேண்டும். இது தான் இந்தத் தளத்தை சுவாரஸ்யம் மிக்கதாகவும் பயனுள்ளதாகவும் ஆக்குகிறது.




அதாவது நீங்கள் எந்தத் துறை அல்லது தலைப்பில் திறன் உள்ளவர் என்று கருதுகிறீர்களோ அவை தொடர்பான கேள்விகளுக்கு பதில் அளிக்க வேண்டும். சரியான பதில்களுக்கு ஏற்ப மதிப்பெண் வழங்கப்படும். அந்த மதிப்பெண் சான்றிதழோடு உங்கள் நிபுணத் துவத்தை நீங்கள் பகிர்ந்து கொள்ளலாம். இதைத் தான் புத்திசாலி என்று நினைக்கிறீர்களா, கேள்விகளுக் குப் பதில் சொல்லி அதை நிரூபித்து உலகோடு பகிர்ந்து கொள்ளுங்கள் என்று அழைப்பு விடுக்கும் இந்தத் தளம் அதை சுவையாக நிறைவேற்றித் தருகி றது. இதில் கவனிக்க வேண்டிய இன் னொரு விடயம் என்னவென்றால் இந்த கேள்விகள் தயாரிக்கப்பட்டவை அல்ல. அவை இணையவாசிகளால் உருவாக்கப் பட்டவை. இணையவாசிகள் தங்களுக்குப் பரிட்சயமான தலைப்பு அல் லது துறைகளின் கீழ் கேள்வி, பதில்களை சமர்ப்பிக்கலாம். அந்த கேள்விகள் தான் திறமையை நிரூபிக்க விரும்புகிறவர்களிடம் கேட்கப்படுகின்றன.

இப்படி இணையவாசிகள் கேள்விகளைச் சமர்ப்பிப்பதால் கேள்விகள் ஒரே மாதிரியாக இல்லாமால் புதுப்பிக்கப்பட்டு கொண்டேயிருக்கும். அடிப்படையில் கூட்டத்தின் அறிவை பயன்படுத்திக் கொள்வதால் கேள்விகள் அமையும்.

கேள்விகளை எதிர்கொள்வதும் ஈடுபாட்டை ஏற்படுத்தக் கூடிய வகையில் அமைந்துள்ளது. கேள்விகளுக்கு பதில் அளிக்க விரும்புகிறவர்கள் முதலில் தங்களுக்கான தலைப்பைத் தெரிவு செய்து கொள்ள வேண்டும். அதன் பிறகு மாதிரி கேள்வி ஒன்று கேட்கப்படுகிறது. அதற்கு பதில் அளித்து விட்டு மதிப்பெண் களுக்கான கேள்விகளை எதிர்கொள்ளலாம்.

அதன் பிறகு மதிப்பெண்களைப் பார்த்து விட்டு உங்கள் நிபுணத்துவத்தை உலகுடன் பகிர்ந்து கொள்ளலாம். இந்த பெருமையை பேஸ்புக், டுவிட்டர், வலைப்பதிவு போன்றவற் றின் மூலமாகவும் நண்பர்களோடு பகிர்ந்து கொள்ளலாம்.

முதல் சுற்றில் மதிப்பெண் குறைவாக இருந்தால் கவலையே வேண்டாம், மீண்டும் ஒரு முறை முயற்சி செய்யலாம் அல்லது இன்னும் மேம்படுத்தி கொள்ள விரும்பினாலும் மீண்டும் புதிய கேள்விகளை முயற்சிக்கலாம். தங்கள் பங்குக்கு கேள்விகளையும் சேர்க்கலாம். புதிய தலைப்புகளையும் பரிந்துரைக்கலாம். இவையெல்லாம் இதில் ஒருவர் உருவாக்கிக் கொள்ளும் உறுப்பினர் பக்கத்தில் பிரதிபலிக்கும். http://www.ainvo.com/en/product.php?path=data/products/un/ என்னும் இணையத் தளத்தினூடாக மேற்கண்ட பயனைப் பெற முடியும்.

# விண்டோஸ் 7 ஐ பேக் அப் எடுக்க

விண்டோஸ்7 இயங்கு தளத்தை நிறுவும்போது கூடவே அனுமதித் திறப்பையும் சேர்த்தே நிறுவுவோம். இல்லையெனில் நிறுவிய பின் தனியாக விண்டோஸ்7 ஐ செயற்படச் செய்வோம்.

இவ்வாறு நாம் ஒவ்வொரு முறையும் ஓபரேட்டிங் சிஸ்ட்டதை நிறுவும் போது செயற்படச் செய்வோம். ஆனால் குறிப்பிட்ட அளவு மட்டுமே இணையச் செயற்பாட்டின் அளவு இருக்கும்.

இதனால் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் எம்மால் செயற்படுத்த இயலாது. இதனை சரி செய்யவும் ஒருவழி உள்ளது. ஏற்கனவே எம்முடைய கணினியில் நிறுவியிருக்கும் இயங்கச் செய்யும் திறப்பை பேக்அப் செய்து மீண்டும் நிறுவிக்கொள்ள முடியும்.

இதனால் நாம் ஒவ்வொரு முறையும் தனித்தனியே இணையச் செயற்பாட்டைச் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. நாம் பேக்அப் செய்த அனுமதித்திறப்பை எத்தனை முறை வேண்டுமானாலும் நிறுவிக்கொள்ள முடியும். மென்பொருளை இணையத்தில் இருந்து பதிவிறக்கிய பின் நுழையவும். பின் Backup என்னும் பொத்தானை அழுத்தி பேக்அப் செய்யவும். பேக்அப் செய்த கோப்பான்து, பேக்அப் கோப்பறையில் சேமிக்கப்பட்டிருக்கும். பின் அதை வேண்டும் போது மீண்டும் நிறுவிக்கொள்ள முடியும்.



இவ்வாறு பேக்அப் செய்வதால் உங்களுடைய இயங்கு தளத்துக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது. நுழைவுச்சீட்டு, அனுமதி அனைத்தையுமே பேக்அப் செய்ய எளியவழி ஆகும்.

**http:http://forums.mydigitallife.info/threads/27341-7Tokens-Manager-The-Activation-Backup-Solution** என்னும் இணையத் தளத்துக்குச் செல்வதன் மூலம் இந்த பயனைப் பெற்றுக்கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழியர்களின் ஒய்வூதியத் திட்டத்தை பாதுகாக்கவே கைவிரல் அடையாளம்

## பிரதியமைச்சர் முத்து சிவலிங்கம் விளக்கம்

நுவரெலியா,ஜூன் 21

தோட்டத் தொழிலாளர்களின் ஊழியர் சேமலாப நிதியைப் பாதுகாப்பாகவும் இலகுவாகவும் மீளப்பெற்றுக்கொள்ளவே தொழிலாளர்களின் கைவிரல் அடையாளமும், தேசிய அடையாள அட்டை இலக்கங்களும் பெறப்படுகின்றன - என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும், பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சருமான முத்து சிவலிங்கம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது,

தோட்டத் தொழிலாளர்களுக்கு இந்த நடைமுறை ஆரம்பத்தில் இருக்கவில்லை.

இதனால் ஊழியர் சேமலாப நிதியைத் தோட்டத் தொழிலாளர்கள் பெறுவதில் பலமுறைகேடுகள் இடம்பெற்றன. பலர் ஏமாற்றப்பட்டுள்ளனர்.

தொழிலாளர்களுக்கு நன்மை தரும் இந்த முறையை சிலர் எதிரானதாகச் சித்திரித்து பிரசாரம் செய்து வருகின்றனர். இதனை தொழிலாளர்கள் கருத்தில் கொள்ள வேண்டும் - என்றார். (ச)

# ஆறு ஆசிரியர்களுக்கு உடனடி இடமாற்றம்

மட்டக்களப்பு,ஜூன் 21

அக்கரைப்பற்று கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலையொன்றின் 6 ஆசிரியர்களுக்கு உடனடியாக இடமாற்றக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அட்டாளைச்சேனைக் கோட்டக் கல்விப்பணிப்பாளர் என்.கே.எம்.இப்றாஹிம் கடந்த வாரம் இந்தப் பாடசாலைக்கு சென்றிருந்தபோது, அந்தப் பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள் எவரும் உரிய நேரத்துக்குச் சமுகமளிக்காமை தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கையின் காரணமாகவே இந்த ஆசிரியர்களுக்கான இடமாற்றங்களும், புதிய அதிபர் நியமனமும் இடம்பெற்றுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பாடசாலையில் 258 மாணவர்கள் கல்வி பயிலும் அதேவேளை, 17 ஆசிரியர்கள் உள்ளனர். ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கு இந்தப் பாடசாலை மாணவர்கள் இவ்வருடம் முதன் முறையாகத் தோற்றவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

# நுவரெலியாவில் போஞ்சி விதை உற்பத்தி


நுவரெலியா,ஜூன் 21

மத்திய மாகாணத்துக்குத் தேவையான போஞ்சி விதைகளை நுவரெலியா மாவட்டத்தில் உற்பத்தி செய்ய மத்திய மாகாண விவசாயத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

தேசிய மட்டத்தில் போஞ்சியைப் பயிரிடுவதற்கு இரண்டு லட்சம் கிலோ போஞ்சி விதைகள் தேவை. தற்போது 18 ஆயிரம் கிலோ போஞ்சி விதைகள் கையிருப்பில் உள்ளன. நுவரெலியா மாவட்டத்தில் போஞ்சி உற்பத்தியைப் பெருக்கி அதில் இருந்து விவசாயிகளுக்கு விதைகளைப் பெற்றுக்கொடுக்க முடியும் என மத்திய மாகாண விவசாய அமைச்சர் நிமல் பியதிஸ்ஸ தெரிவித்தார்.

அத்துடன் கடந்த காலங்களை விட இவ்வருடம் மத்திய மாகாணத்திலுள்ள விவசாயிகளிடமிருந்து விதைகள் சந்தைப் படுத்தப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ச)



ஜப்பானிய நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படும் ஜெயிக்கா வீதி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் காத்தான்குடிப் பிரதேச செயலாளர் பிரிவில் புனரமைக்கப்படவுள்ள வீதி அபிவிருத்தி வேலைகள் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பிக்கப்பட்டன. இந்த வீதி அபிவிருத்தி வேலைகளை கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் மற்றும் பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா, கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சர் எம்.எஸ்.உதுமாலெவ்வை, கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள் உட்படப் பல அதிகாரிகள் கலந்துகொண்டு ஆரம்பித்துவைத்துள்ளனர். (ச)

# குழப்பகரமான இடமாற்றத் திட்டம் உடனடியாக கைவிடப்பட வேண்டும்

## முஸ்லிம் சுதந்திர முன்னணி வலியுறுத்து

அம்பாறை, ஜூன் 21

கிழக்கு மாகாணத்தில் கல்விச் சமூகத்தினர் மத்தியில் பெரும் குழப்பகரமான சூழ் நிலையைத் தோற்றுவித்திருக்கும் ஆசிரியர் இடமாற்றத்திட்டத்தை உடனடியாகக் கைவிட வேண்டும் என முஸ்லிம் சுதந்திர முன்னணி வலியுறுத்தியுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக ஜனாதிபதி, கிழக்கு மாகாண ஆளுநர், முதலமைச்சர், மாகாணக்கல்விப் பணிப்பாளர் ஆகியோருக்கு முஸ்லிம் சுதந்திர முன்னணியின் செயலாளர் எஸ்.எம்.அஸ்வான் கையொப்பமிட்டு மகஜரை அனுப்பிவைத்துள்ளார்.

அந்தக் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஆசிரியர் இடமாற்ற விவகாரம் காரணமாக கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் கல்விச் சமூகத்தினரும் பெற்றோரும் குழம்பிப்போயுள்ளனர். கல்வி நிர்வாக நடவடிக்கைகளும் சீர்குலைந்துள்ளன.

கிழக்கு மாகாணப் பாடசாலைகள் யாவும் இன்று அசாதாரண சூழ்நிலைக்குள் தள்ளப்பட்டிருக்கின்றன. நாளாந்தம் ஆர்ப்பாட்டங்களும் மறியல் போராட்டங்களும் பாடசாலைப் பகிஷ்கரிப்பு நடவடிக்கைகளும் இடம்பெற்று வருகின்றன.

சில தீய சக்திகள் இத்தகைய சந்தர்ப்பங்களில் மாணவர்களை வன்முறைகளுக்கும் தூண்டிவிடுகின்றன. இந்த ஆசிரியர் இடமாற்றத் திட்டத்தின் மூலம் மாகாணக் கல்வித் திணைக்களம் எதிர்பார்க்கும் இலக்கை ஒருபோதும் அடைய முடியாது'- இவ்வாறு அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# சாரதிகளுக்கு வினைத் திறமைகாண் பரீட்சை

மூதூர், ஜூன் 21

கிழக்குமாகாண அரச சேவையில் பணிபுரியும் சாரதிகளுக்கு வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை நடத்தப்படவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு மேற்கொண்டுள்ளது.

தகுதியான உத்தியோகத்தர்களிடமிருந்து இதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன என கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளர் அறிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண பொதுச் சேவையில் சாரதிகள் சேவையைச் சேர்ந்த முதலாம் வகுப்பைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள், இரண்டாம் வகுப்பின் தரம்-அ மற்றும் தரம் -ஆ பிரிவைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு இந்த வினைத்திறமை காண் தடைப் பரீட்சை நடத்தப் படவுள்ளது.

(ச)

# படகுப் பாதை போக்குவரத்துச் சேவை மீண்டும் நேற்றுமுதல் ஆரம்பம்

மட்டக்களப்பு,ஜூன் 21

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை மற்றும் கொக்கட்டிச் சோலை வாவியை இணைக்கும் நீர்வழிப் படகுப் பாதை போக்குவரத்துச் சேவை நேற்றுத் திங்கட்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரனின் இணைப்புச் செயலாளர் கே.ரவீந்திரன் தெரிவித்துள்ளார்.

நெடுஞ்சாலைகள் அமைச்சின் வழிகாட்டலில் வீதி அபிவிருத்தித் திணைக்களத்தினால் இலவசமாக நடத்தப்பட்டுவரும் இந்தப் படகுப்பாதைச் சேவை யுத்த காலங்களில் அடிக்கடி இடைநிறுத்தப்பட்டு வந்துள்ளது.

தற்போதைய அமைதிச் சூழலில் இந்தச்சேவையை ஆரம்பிக்குமாறு பொதுமக்கள் விடுத்த வேண்டுகோளையடுத்து,இந்தச் சேவை நேற்று முதல் அதிகாலை 4.30 மணி தொடக்கம் இரவு 10 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக பிரதியமைச்சரின் இணைப்பாளர் மேலும் தெரிவித்தார்.(ச)

# வாகரை ஆலங்குளப் பகுதியில் பால் சேகரிப்பு நிலையம்

## 250 குடும்பங்களின் வருவாய் அதிகரிப்பு

மட்டக்களப்பு, ஜூன் 21

யுத்தம் காரணமாக கிழக்கில் பாதிப்படைந்துள்ள பால் உற்பத்தி நடவடிக்கைகளை மீளக்கட்டியெழுப்பும் நடவடிக்கைகள் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் வழிகாட்டலில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்தத்திட்டத்தின்கீழ் யுத்தத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்ட வாகரை பிரதேசத்தில் சுயதொழில் நடவடிக்கைகளை விருத்தி செய்ய கால்நடை அபிவிருத்தி அமைச்சு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இதன் ஒரு கட்டமாக வாகரை ஆலங்குளம் பகுதியில் ஒரு கோடி ரூபா செலவில் பால் சேகரிப்பு நிலையம் அமெரிக்க யு.எஸ். எயிட். நிறுவன நிதி ஒதுக்கீட்டில் கடந்த வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பால் சேகரிப்பு நிலையத்தினூடாக சுமார் 250 குடும்பங்களின் நாளாந்த வருமானம் அதிகரித்துள்ளது. அத்துடன் ஆலங்குளம், மாங்கேணி, காயங்கேணி, மதுரங்குளம், ஓமடியாமடு, குஞ்சாங்குளம், ஊரியன்மடு ஆகிய 8 கிராமங்கள் இதனால் நன்மையடையவுள்ளன என்று நிலையத்தின் முகாமையாளர் கனகராஜா தெரிவித்தார். இந்தநிகழ்வில் பால் சேகரிப்பாளர்களுக்குக் கொள்கலன்களும் வழங்கப்பட்டன. (ச-21)

# ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அலுவலகம் திறப்பு

மட்டக்களப்பு,ஜூன் 21

யுத்தம் காரணமாகப் பெரிதும் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஒரேயொரு சிங்களக் கிராமமான மங்களகமவில் 30 வருடங்களின் பின்னர் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கிளை அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது.

கல்குடா தொகுதியின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதம அமைப்பாளர் எச்.டி.சந்திரபால பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கட்சியின் அலுவலகத்தைத் திறந்து வைத்தார.

(ச-21)

# டெங்கு ஒழிப்பு வாரம் மட்டக்களப்பில் ஆரம்பம்

தேசிய டெங்கு ஒழிப்பு வாரத்தின் வேலைத்திட்டங்கள் நேற்று திங்கட்கிழமை காலை மட்டக்களப்பு மாவட்டத்திலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதன் ஆரம்ப நிகழ்வு மட்டக்களப்பு பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிமனையினால் முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு சுகாதார வைத்தியதிகாரி டாக்டர் திருமதி ரஞ்சன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், 233ஆவது படைப் பிரிவு இராணுவ உயர் அதிகாரிகள், பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். டெங்கு நுளம்புகள் பரவும் இடங்களென அடையாளப்படுத்தப்பட்டுள்ள பல இடங்கள் இதன் போது சோதனைக்கு உட்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(ச-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:**
தொழில் ரீதியாக பரபரப்பாகச் செயற்படலாம். மற்றவர்கள் பெருமையாக நினைக்க வேண்டும் என்பதற்காக, சில காரியங்களைச் செய்வீர்கள். மனைவி, குழந்தைகளின் விருப்பங்களை நிறைவேற்றி வைப்பீர்கள். உங்களின் திறமையைப் பார்த்து மற்றவர்கள் வியப்படைவர். பல நாள்களாகச் செல்லாத உறவினர் ஒருவரின் வீட்டிற்குச் செல்லலாம்.



**இடபம்:**
புதியவர்கள் சிலரின் சந்திப்பு நிகழும். கையிலிருக்கும் பணத்தை யாருக்காவது கொடுத்து விட்டு, உங்களின் தேவைக்கு பிறரிடம் கடன் வாங்கலாம். நண்பர் ஒருவருக்காக வெளியிடங்களில் காத்திருக்கலாம். நீங்கள் கேட்ட உதவி ஒன்றைச் செய்ய மனம் இல்லாமல் உறவினர்கள் கையை விரிக்கலாம். வயிறு, வாயு உபாதை ஏற்படலாம்.



**மிதுனம்:**
வீண் பிடிவாதங்களையும் கோபத்தையும் தவிர்த்து விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டிய நாள். சிலருடன் வேண்டாத பேச்சுக்கள் பேசி நேரத்தை வீணடித்து விட்டு, பின்னர் அவசரமாக செயற்படுவீர்கள். சக ஊழியர்கள் ஏட்டிக்குப் போட்டியாக நடந்து எரிச்சல் உண்டாக்கலாம். சில வேலைகளுக்காக நீண்ட நேரம் காத்திருக்கலாம்.



**கடகம்:**
வரவேண்டிய பணவரவு ஒன்றை கேட்டு வாங்குவீர்கள். நண்பர்கள் சிலர் மூலம் உங்களின் தேவைகள் நிறைவேறலாம். மற்றவர்கள் செய்யத் தயங்கும் சில வேலைகளை நீங்கள் துணிச்சலாகச் செய்வீர்கள். தாய் வழியில் பெருமைப்படும் வகையிலான உதவிகள் கிடைக்கலாம். உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறுவர்.



**சிங்கம்:**
தந்திரமாகச் செயற்பட்டு சில வேலைகளை சுலபமாக முடிப்பீர்கள். நாடி வந்த ஒருவருக்கு இல்லை என சொல்லாமல் உதவி செய்வீர்கள். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக முடியும். தம்பதியர் இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். உறவுப் பெண்கள் வழியில் உதவி கிடைக்கலாம்.



**கன்னி:**
அயலார் சிலர் ஏட்டிக்குப் போட்டியாக நடந்து எரிச்சல் உண்டாக்கலாம். சில பொருள்களை எங்காவது வைத்து விட்டு, தேட நேரிடலாம். உடல் உபாதைகளால் உற்சாகம், தெம்பு குறையலாம். பணிபுரிவோர் நிர்வாகத்தினர் இட்ட கட்டளைகளை நிறைவேற்றாமல் அதிருப்திக்கு ஆளாகலாம். கேளிக்கை, கொண்டாட்டம் உண்டு.



**துலாம்:**
கடனாக வாங்கிய பணம் ஒன்றை திருப்பிக் கொடுப்பீர்கள். உறவினர்கள் சிலர் உங்களுக்கு நல்ல யோசனை சொல்லலாம். எளிதில் முடிந்து விடும் என நினைத்த வேலை ஒன்று, நீண்ட நேரத்திற்கு இழுத்தடிக்கலாம். வீடு, வாகனங்கள் வழியில் திடீர் செலவுகள் ஏற்படலாம். மற்றொருவரின் ரகசியம் ஒன்றை அறிந்து கொள்வீர்கள்.



**விருச்சிகம்:**
உழைப்பிற்கு ஏற்ற பலன் கிடைக்கும் நாள். மற்றவர்கள் செய்யும் விமர்சனங்களையும் அறிவுரையாக ஏற்றுக் கொள்வீர்கள். மருந்துப் பொருள்கள் வாங்க கணிசமான பணத்தைச் செலவிடலாம். உறவினர் ஒருவர் கேட்ட உதவியை மறுக்காமல் செய்வீர்கள். நாளை சந்திக்க நினைத்த ஒருவரை இன்றே சந்திக்கும் வாய்ப்பு உருவாகலாம்.



**தனுசு:**
ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்பட்டு குடும்ப உறுப்பினர்களின் அதிருப்திக்கு ஆளாகலாம். சிக்கனமாக இருக்க நினைத்தாலும் ஏதாவது ஒரு வழியில் செலவுகளைச் சந்திக்கலாம். பெரிய மனிதர்கள் சிலரின் சொல்லுக்குக் கட்டுப்பட்டு நடக்கலாம். வழக்கத்திற்கு மாறாக கூடுதல் நேரம் தூங்குவீர்கள். வீட்டைச் சீரமைப்பதில் நாட்டம் செல்லும்.



**மகரம்:**
தொழில் ரீதியான சில வேலைகளை முடிக்க கடும் பிரயத்தனம் மேற்கொள்ளலாம். எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். சண்டை போட்ட ஒருவரிடம் சமாதானமாகச் செல்வீர்கள். வியாபாரிகள் புதிய வாடிக்கையாளர்களைப் பெறலாம். உங்களின் குடும்பப் பெருமை பற்றி மற்றவர்களிடம் பேசுவீர்கள். மாமன், மைத்துனர் உதவி கிடைக்கும்.



**கும்பம்:**
பல நாள்களாக தொலைபேசியில் மட்டும் பேசிக் கொண்டிருந்த ஒருவரை நேரில் சந்திக்கலாம். தேக ஆரோக்கியக் குறைபாடுகளை எதிர்கொள்ளலாம். நீங்கள் பெரிய அளவில் மதித்த ஒருவர் அற்பத்தனமாக நடந்து கொள்ளலாம். சக ஊழியர்கள் தொடர்பான விடயங்களில் பட் டும் படாமல் நடந்து கொள்ளலாம். எதிர்ப்பு, போட்டிகளைச் சந்திக்கலாம்.



**மீனம்:**
நீண்ட நாள்களாக வராத உறவினர் ஒருவர் உங்களின் வீட்டிற்கு வரலாம். நண்பர்களுக்குத் தெரிந்த ஒருவர் உங்களுக்கும் அறிமுகமாகலாம். சில விடயங்களில் மற்றவர்களுக்கு நல்ல ஆலோசனை சொல்வீர்கள். வெளியூர் பயணங்களால் சந்தோஷம், மகிழ்ச்சி அடைவீர்கள். நிலம், பூமி வாங்கப் போட்ட திட்டங்களில் முன்னேற்றம் உண்டு.

# ராஜீவ் படுகொ அதிரும் உண்மை

முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி படுகொலை செய்யப்பட்டு 20 வருடங்கள் ஆகிவிட்டன. படுகொலை தொடர்பாக விடுதலைப் புலிகளைக் குற்றவாளிகளாகக் கைது செய்து அவர்கள் தண்டனை அனுபவித்து வருகிறார்கள். ஆனால், அதில் இன்னும் மர்மங்கள் தீராமல் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றன.

### புதிது புதிதாக வெளியாகும் தகவல்கள்

உண்மையில் அந்தக் கொடூரம் யாரால் நடத்தப் பட்டது? என்பது பற்றி இன்றுவரை தெளிவான பதில்கள் இல்லை. இருபது வருடங்களாக புதிது புதிதாகத் தகவல்களும், புத்தகங்களும் வெளியாகியபடியே இருக்கின்றன.

உண்மையில் நடந்தது என்ன? நடப்பவை என்ன? என்ற சந்தேகங்களோடு ராஜீவ்காந்தி படுகொலை குறித்து ஜெயின் கமிஷனில் நேர் நின்று பல உண்மைகளை அம்பலப்படுத்திய திருச்சி வேலுசாமியை சந்தித்தோம். அவர் கூறிய பதில்கள் எம்மை ஒரு கணம் அதிர வைத்தன.

கே: என்ன நோக்கத்துக்காக ஜெயின் கமிஷன் சென்றீர்கள்?

ப: 1991- மே 21 ஆம் திகதி இரவு ராஜீவ் படுகொலை நடக்கிறது. அன்று இரவு பத்து மணிக்கு நான் டில்லியில் இருந்த சுப்ரமணிய சுவாமியைத் தொடர்பு கொண்டேன்.

அப்போது நான் ஜனதா கட்சியில் இருந்தேன். தேர்தல் பிரசார உச்சக் கட்ட நேரம். அடுத்த நாள் மதுரையில் நடக்க இருக்கும் பொதுக் கூட்டத்துக்கு அவர் வரவேண்டியிருந்தது. அது பற்றிப் பேசுவதற்காக இரவு 10.25 மணிக்குத் தொடர்பு கொண்டேன். எடுத்த எடுப்பிலேயே என்ன ராஜீவ்காந்தி செத்துட்டாரு. அதைத்தானே சொல்ல வரே... தெரியுமே.." என்றார்.

எனக்கு ஒன்றுமே புரியவில்லை. அப்போது தகவல் தொடர்பு வசதி ஏதும் இல்லை. பதட்டமடைந்த நான், திருச்சியில் உள்ள உளவுத்துறை அதிகாரிகளிடம் தகவலை உறுதிப்படுத்திக் கொள்ளக் கேட்டேன். அப்படி ஏதும் தெரியவில்லையே என்றார்கள்.

அந்த நேரத்துக்கெல்லாம் ராஜீவ்காந்தி இறந்தாரா இல்லையா என்பதையே உறுதிப்படுத்த முடியவில்லை. இரவு 10.10 மணிக்குக் குண்டு வெடிக்கிறது. பெரும் புகை மூட்டம். கூச்சல்.. குழப்பம்.. கொஞ்ச நேரம் கழித்து ஜெயந்தி நடராஜன்தான் தனியே கிடந்த ராஜீவ் காலைப் பார்க்கிறார். மூப்பனாரிடம் சொல்லிகத்துகிறார். அவர் வந்து மற்ற சடலங்களுக்கு இடையே தேடுகிறார். கடைசியில் ராஜீவின் எல்லாப் பாகங்களையும் பார்த்து உறுதிப்படுத்தவே அரை மணி நேரம் ஆனது என்று அடுத்த நாள் மாலை நாளேட்டுக்குப் பேட்டி கொடுத்தார். ஆக 10.40 மணிக்குத்தான் படுகொலையான தகவலை உறுதிப்படுத்த முடிந்தது.

### சுப்ரமணியசுவாமிக்கு எப்படி முன்னரே தெரிந்தது

அப்படியிருக்கும்போது சுப்ரமணிய சுவாமிக்கு மட்டும் எப்படி முன்பாகவே தெரியும்? யார் சொன்னார்கள்? முதன் முதலாக அவர்தான் ஊடகங்களுக்கு விடுதலைப் புலிகள்தான் இந்தப் படுகொலையை செய்தார்கள் என்று செய்தி தருகிறார்.

அடுத்த நாள்தான் விசாரணையே தொடங்குகிறது. திடீரென்று புலிகள் மீது ஏன் பழி போட வேண்டும்? இதெல்லாம் என்னை சந்தேகிக்க வைத்தன. அது மட்டுமின்றி அந்தப் படுகொலை சம்பவத்துக்கு முன்னும் பின்னுமாகப் பார்த்தால் சுவாமியின் நடவடிக்கைகளில் பல சந்தேகம்... மர்மம்... அதிர்ச்சி... இதுவெல்லாமும்தான் என்னை ஜெயின் கமிஷனுக்கு போக வைத்தது.

கே: சுப்பிரமணிய சுவாமி மேல் சந்தேகித்து மனு கொடுத்ததை ஏற்றுக் கொண்டார்களா?

ப: நான் எதிர்த்து நிற்பது சாதாரண ஆள்களை அல்ல என்பது எனக்கு நன்றாகத் தெரியும். இருந்தாலும், துணிந்து ஜெயின் கமிஷன் முன்பு நின்றேன். எனது மனுவை வாங்கிப் பார்த்த கமிஷனின் செயலாளர் மனோகர் லால் என்னை மேலும் கீழுமாக பார்த்தார்.

படித்துவிட்டு நிமிர்ந்தவர் முகத்தில் கடுகடுப்பு. " சுப்ரமணிய சுவாமி மீதா குற்றம் சொல்கிறீர்கள். சந்தேகிக்கிறீர்கள்? " என்றார். "ஆமாம் " என்றேன். அந்த மனுவை அப்படியே மேசை மீது போட்டுவிட்டு, "நாளை வாருங்கள்.. பார்க்கலாம் " என்றார். என்னுடைய மனுவை ஏற்கமாட்டார்கள் என்று எனக்குச் சந்தேகம்.

பெரிய மன உளைச்சல். என்னுடைய பாதுகாப்புக் காரணம் கருதி, சாதாரணமான விடுதியில் வேறு பெயரில் தங்கினேன். அந்த நேரத்தில்தான் மூத்த காங்கிரஸ் எம்.பியான ரஜினி ரஞ்சன் சாகு என்னை சந்திப்பதற்காகத் தேடி அலைந்திருக்கிறார். இவர் சோனியாவின் குடும்பத்துக்கு நெருக்கமானவர். இது பற்றி எனது தஞ்சை நண்பர் என்னிடம் சொன்னார்.

நானே ரஜினி ரஞ்சன் வீட்டுக்கு நேராகச் சென்றேன். "உங்களைச் சந்திக்க வேண்டும் என்று சோனியாஜி வீட்டில் தேடுகிறார்கள் " என்றார். பிறகு, அங்கிருந்து ரஜினி ரஞ்சனுடன் சோனியாவின் வீட்டுக்குச் சென்றேன். அவர் அங்கு இல்லை என்று என் பெயரைச் சொன்னதும் பதட்டமாய் சொன்னார்கள். [illegible] வருவதாக சொல்லித் திரும்பினேன்.

### சோனியாவுடனான சந்திப்பு

கே: அதன் பிறகு சோனியா காந்தியை சந்தித்தீர்களா?

ப.: இதுவரை எந்த ஊடகத்துக்கும் சொல்லாத செய்தியை உங்களிடம் கூறுகிறேன்... அடுத்த நாள் நான் சோனியாவைச் சந்தித்தேன். அந்த வீடே ஒரு[illegible]த நிசப்தமாக இருந்தது. இப்போதும் அங்கே இருககும் மாதவன், பிள்ளை என்ற சோனியாவின் உதவியாளர்கள் என்னை உள்ளே அழைத்துச் சென்றார்கள்.

ஜெயின் கமிஷனில் நான் அறிக்கை தாக்கல் செய்யப் போவதைப் பற்றிக் கேட்டார்கள். படுகொலைக்கான சந்தேகம் யார் மீது? அதற்கான பின்னணி? வேறு பல சந்தேகம்? என்று ஒவ்வொன்றையும் கேட்டார்கள். மாதவனும், பிள்ளையும்தான் நான் பேசியதை சோனியாவுக்கு மொழி பெயர்த்தார்கள். நான் பேசப் பேச குறிப்பெடுத்துக்கொண்டே இருந்தார்.

மூன்று மணி நேர சந்திப்புக்குப் பின், "இதில் உங்களுக்கு என்ன ஆர்வம்? கட்சியிடம் இருந்து ஏதாவது எதிர்பார்க்கிறீர்களா? எதிர்பார்ப்பு ஏதுமில்லாமல் இதை நீங்கள் ஏன் செய்ய வேண்டும்? " என்றெல்லாம் கேட்டார். எனக்கு எந்த எதிர்பார்ப்பும் இல்லை. உண்மை வெளிவந்தால் போதும் என்பதை விளக்கினேன்.

வாசல்வரை வந்துவிட்டு, மிகவும் தயங்கியபடியே அவரைப் பார்த்தேன். "உங்களுக்கு என்ன உதவி வேண்டும் என்றாலும் தயங்காமல் கேளுங்கள் " என்றார்.

" என் முயற்சி எல்லாம் வீணாகிவிடுமோ என்று அசசமாக இருக்கிறது. நேற்று மனுக் கொடுத்த போதே கமிஷனின் செயலாளர் ஒரு மாதிரியாகத்தான் பார்த்தார். அந்த மனு ஏற்கப்பட்டால்தான் நான் என் தரப்புக் கேள்விகளை எழுப்ப முடியும். பல உண்மைகளை வெளிக்கொண்டுவர முடியும். அதற்கு ஏதாவது நீங்கள் உதவ முடியுமா?" என்றேன்.

" என்றைக்கு உங்கள் மனு ஏற்பு விசாரணை வருகிறது?" என்று கேட்டார். நான் திகதியைச் சொன்னேன். குறித்துக்கொண்டு சரி போய் வாருங்கள் என்றார்.

சட்டென்று என்ன நினைத்தாரோ தெரியவில்லை. அங்கே இருந்த குறிப்பேட்டின் ஒரு தாளைக் கிழித்து பென்சிலால் அந்த வீட்டில் இருந்த ஐந்து தொலைபேசி இலக்கங்களை எழுதி, எப்போது வேண்டுமானாலும், எங்கிருந்தாலும் சரி, எந்தவிமான அவசரம் என்றாலும், உதவி என்றாலும் கேளுங்கள் என்று கூறியபடியே அந்த தாளை நீட்டினார். வாங்கி வைத்துக்கொண்டேன்.

அதோடு சரி. அதன் பிறகு நான் அவரைச் சந்திக்கவே இல்லை. இருபது ஆண்டுகள் ஓடிவிட்டன. அவர்களிடம் உதவி வேண்டித்தான் அல்லது ஏதாவது பதவியை வேண்டித்தான் நான் இந்தக் காரியத்தைச் செய்தேன் என்று தவறாக நினைத்துவிடக்கூடாது. அந்த ஒரே காரணத்துக்காகத் தொலைபேசியில்கூட பேசாமல் விட்டுவிட்டேன்.

### பிரியங்கா செய்திருந்த உதவி

கே: சோனியாவிடம் என்ன பேசினீர்கள்என்பதைச் சொல்லவில்லையே? அதன்பிறகு டில்லியில் என்ன நடந்தது?

ப: அதை எந்தக் காலத்திலும் சொல்ல மாட்டேன். அது நாகரிகமாக இருக்காது. ஆனால், அதன் பிறகு என்ன மாதிரியான உதவி கிடைத்தது என்பதையும் சொல்ல வேண்டும். என்னுடைய மனுவை விசாரணைக்கு ஏற்றுக் கொள்வதா? வேண்டாமா? என்ற குழப்பம் வந்த நாளில் திடீரென்று பார்த்தால் அந்த பகுதியே பெரும் பரபரப்பானது. அதிரடிப்படை பொலிஸாரின் பதற்றம். கறுப்புப் பூனை பாதுகாப்பு வீரர்கள் சூழ பிரியங்கா உள்ளே வந்து கொண்டிருந்தார். வந்தவர் அமைதியாக உட்கார்ந்து கொண்டார். என் மனு மீதான விசாரணை வந்தது.

நான் என்னுடைய காரணங்களைச் சொன்னேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ாலை..
# ம்
# மைகள்!

**இந்தப் படுகொலையை விடுதலைப் புலிகள் செய்யவில்லை. அந்தளவுக்கு அது முட்டாள் தனமான இயக்கமும் அல்ல. அதை செய்தது வேறு ஒரு போராளிக் குழு. அந்தக் குழுவுக்குத்தான் வெளிநாட்டு சதித் தொடர்பு இருக்கிறது.**

ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதோடு சரி. பிரியங்கா என்னைப் பார்த்துச் சிரித்தபடியே கிளம்பிவிட்டார். எனக்குச் செய்த ஒரே உதவி அதுதான்.

பிறகு, நான் சுப்ரமணியசுவாமியை குறுக்கு விசாரணை செய்த மூன்று நாள்கள் பிரியங்கா மீண்டும் நேரில் வந்திருந்தார். அந்த மூன்று நாள்களும் நடப்பவற்றைக் குறிப்பெடுத்துக் கொண்டிருந்தார். புறப்படும் போது என்னைப் பார்த்துச் சிரித்தபடியே போவார்.

**கே:** சுப்ரமணிய சுவாமியிடம் நடந்த அந்தக் குறுக்கு விசாரணை எப்படி அமைந்தது?

**ப:** ராஜீவ் படுகொலை உங்களுக்கு மட்டும் எப்படி முன் கூட்டியே தெரிந்தது.? கொலை செய்தது விடுதலைப் புலிகள்தான் என்று எதை வைத்துச் சொன்னீர்கள்? லண்டனில் இருந்து புலிகள் சார்பாக அறிக்கை கொடுத்த கிட்டு கொலைக்குக் காரணம் புலிகள் இயக்கம் இல்லை என்ற போது நீங்கள் விடுதலைப் புலிகள்தான் காரணம் என ஊடகங்களுக்குச் செய்தி கொடுக்கக் காரணம் என்ன? என்றெல்லாம் கேட்டேன். சுப்ரமணிய சுவாமியோ எனக்கு இலங்கையில் இருந்து தகவல் வந்தது.- என்றார்.

சம்பவ இடத்தில் இருந்த அதிகாரிகளால் உறுதிப்படுத்த முடியவில்லை. தமிழகப் பொலிஸார் உறுதியாகச் சொல்லவில்லை. மத்திய அரசும் உறுதியாகத் தகவலைப்பெறவில்லை.

அப்படியிருக்கும்போது இலங்கைக்குத் தெரிகிறதென்றால் யார் அந்த நபர்? என்றேன். திருதிருவென முழித்தார். அதே போன்று ராஜீவ் படுகொலை நாளான மே-21 இற்கு அடுத்த நாள் சுவாமிக்கு மதுரையில் ஒரு பொதுக்கூட்டம் இருந்தது. மாலை பத்திரிகைகளில் பெரிய விளம்பரம் எல்லாம் கொடுத்திருந்தார்கள்.

**இரு சாமிகளதும் அட்டகாசம்**

மதுரைப் பொதுக் கூட்டத்துக்கு நீங்கள் வருவதற்கு விமானத்துக்கு முன்பதிவு செய்த 'டிக்கெட்' எங்கே? என்று கேட்டதும் அவருக்கு வியர்த்துக் கொட்டத் தொடங் கியது. அது தேர்தல் காலம். விமான 'டிக்கெட்' எல்லாமே முன்பதிவு செய்யப்பட்டிருக்கும். சுவாமி அப் படி ஒரு விமான 'டிக்கெட்'டைப் பதிவு செய்யவே இல்லை. காரணம், ராஜீவ் படுகொலை திட்டம் அவருக்கு தெரிந்திருக்கிறது. அசம்பாவிதம் நடக்கப் போகிறது. எதற்குப் போகவேண்டும்? என்று நினைத்திருக்கிறார்.

அது மட்டுமல்ல. மே-21 இற்கு முன்பாகத் தமிழக பிரசாரத்தில்தான் இருந்தார் சுவாமி. நான்தான் அவருக்கு மொழி பெயர்ப்பாளர். அப்போது அவருக்குத் தமிழ் தெரியாது. படுகொலைக்கு முதல் நாள் 20 ஆம் திகதி சேலத்தில் தங்கியிருந்தோம். கட்சி செலவுக்கு பணம் இன்னும் வரவில்லையே? என்று நிர்வாகிகள் கேட்டார்கள். அதற்கு சுவாமி தேர்தல் நடந்தால் பார்த்துக்கொள்ளலாம். என்ன அவசரம்? என்று சொன்னார். அதைப் பற்றிக் கேட்டும் பதில் இல்லை.

அதைவிட முக்கியம், அன்று இரவு ஒரு மணிக்கு சேலம் ஆத்தூரில் கூட்டம். முடிந்தவுடன் அவசர வேலை, டில்லிக்குப் போக வேண்டும் என்று சென்னைக்குப் பறந்தார். இது திடீரென்று நடந்தது. அந்த நேரத்துக்கு விமானம் இல்லையே என்றபோது பரவாயில்லை நான் பார்த்துக்கொள்கிறேன் என காரில் பறந்தார். அவருக்குப் பின்னால் வந்த நிர்வாகிகளின் கார் அச்சிரப்பாக்கம் அருகே விபத்தில் சிக்கியது. முன்னாள் எம்.எல்.ஏ. குருமூர்த்தி சேலம் மாவட்ட ரத்தினவேல், காஞ்சிபுரம் ஏகம்பரம் ஆகியோருக்குப் படுகாயம். சுவாமி அதைக்கூடப் பொருட்படுத்தாமலே சென்னைக்கு ஓடினார்.

இதைப்பற்றிக் கேட்பதற்கு நான் டில்லிக்குப் போன் செய்தேன். காலை விமானத்தில் சுவாமி சென்றிருந்தால் ஒரு ஒன்பது மணிக்குள்ளாக வீட்டில் இருக்க வேண்டும். அதை மனதில் வைத்துப் பேசினேன். சுவாமியின் மனைவிக்கு என்னை நன்கு தெரியும். அவரது குடும்பத்தில் ஒருவராகப் பார்த்தார். என்ன வேலுசாமி.. அவர் அங்கதானே இருக்கிறார்.. இங்கு கேட்கிறீர்களே? என்றார்.

எனக்கு குழப்பம். உடனே அவரது அலுவலகத்துக்குப் பேசினேன். அங்கிருந்தும் அதே பதில் தான். சென்னையில்தான் இருக்கிறாரோ என்று சென்னைக்குப் பேசினேன். சுவாமிக்கு வேண்டிய நண்பர்களிடம் எல்லாம் பேசினேன். எல்லோரும் அவர் டில்லியில் இருப்பதாகச் சொன்னார்கள். சுவாமி அப்போது மத்திய அமைச்சராக இருந்தார்.

தினசரி 'மூவ்மெண்ட் ரிப்போர்ட் பைல்' என்பது அமைச்சர்களுக்கு கட்டாயம் உண்டு. அது எங்கே என்று கேட்டால் தொலைந்துவிட்டது என்றார். என்னவென்றால் அன்றைய தினம் சுவாமி டில்லிக்கே போகவில்லை. சென்னையில் உள்ள பிரபலமான மருத்துவமனை அருகில் இருக்கும் ஒரு விடுதியில் சந்திராசாமி பதிவு ஏதும் செய்யாமல் இரகசியமாகத் தங்கியிருந்தார். அவரோடுதான் சுவாமியும் இருந்துள்ளார். அங்கிருந்து காரிலேயே பெங்களூருக்குச் சென்றிருக்கிறார்கள்.

ராஜீவ் படுகொலைக்கு ஒரு நாள் முன்பு அந்த இரண்டு சாமிகளின் நடவடிக்கைகளும் மர்மமாகவே இருந்தன. இந்தக் கேள்விகளுக்கு எல்லாம் சுப்பிரமணிய சுவாமியிடம் பதிலே இல்லை. அவரது சட்டையெல்லாம் நனைந்து, வேர்வை கொட்டியது. அமைதி என்றால் அப்படி ஒரு அமைதி அங்கே. பிரியங்கா என்னையும் பார்க்கிறார். சாமியையும் பார்க்கிறார். பிரியங்காவின் முகத்தில் அப்படி ஒரு ஆவேசம். கோபம். நீதிபதி ஜெயின், சுவாமியையே உற்றுப் பார்த்தபடி நீதிமன்றம் கலைகிறது என்றுகூட சொல்லாமல் எழுந்து போய்விட்டார்.

**விடுதலைப்புலிகள் முட்டாள்கள் அல்ல**

**கே:** ராஜீவ் படுகொலையைச் செய்தது விடுதலைப் புலிகள்தான் என்று சி.பி.ஐ. அதிகாரி கார்த்திகேயன், ரகோத்தமன் கூறியிருக்கிறார்களே?

**ப:** அதை மறுக்கின்றேன். என்னுடைய வாக்கு மூலத்தின் அடிப்படையில்தான் சந்திராசாமி, சுப்ரமணியசுவாமி ஆகியோரை ஜெயின் கமிஷன் விசாரிக்க வேண்டியிருக்கிறது. அவர்கள் போதிய ஒத்துழைப்பைத் தரவில்லை என்றது. அதை ஏற்று பல்முனைநோக்கு புலன் விசாரணைக்குழு போட்டார்கள். அந்தக் குழு சுப்ரமணியசுவாமியையும், சந்திரா சுவாமியையும் 20 வருடங்கள் ஓடியும் இன்றுவரை அழைத்து விசாரிக்கவே இல்லை.

சுப்ரமணிய சுவாமியுடன் எப்போதும் ஒரு பெண் இருப்பார். சுவாமி போகும் பொதுக் கூட்டங்களில் அந்த பெண்ணும் இருப்பார். அவர் ஈழத்தைச் சேர்ந்த புலிகளின் எதிர்ப்புக் குழுவைச் சேர்ந்தவர். அந்தப் பெண் ராஜீவ் படுகொலைக்குப் பிறகு சுவாமியுடன் இல்லை. எங்கு போனார் என்றே யாருக்கும் தெரிய வில்லை. அதற்கான புகைப்பட ஆதாரத்தை நான் பல் முனைநோக்கு புலன் விசாரணைக் குழுவிடம் கொடுத்தேன். சி.பி.ஐ. அதிகாரி கார்த்திகேயனும், சி.பி.ஐ. விசாரணை அதிகாரியான ரகோத்தமனும் எழுதி வெளியிட்ட புத்தகம் எல்லாம் சி.பி.ஐ. தயாரித்த ஆவணங்களை வைத்துத்தான் எழுதப்பட்டன. அது அவர்களே உருவாக்கியது.

என்னுடைய வாக்குமூலம், என்னுடைய சந்தேகம், அதற்கான ஆதாரங்கள் எல்லாம் சொல்வது இந்த படுகொலையை விடுதலைப் புலிகள் செய்யவில்லை. அந்தளவுக்கு அது முட்டாள் தனமான இயக்கமும் அல்ல. அதை செய்தது வேறு ஒரு போராளிக் குழு. அந்தக் குழுவுக்குதான் வெளிநாட்டு சதித் தொடர்பு இருக்கிறது. அவர்களை இங்கே வழிநடத்தியது எல்லாம் இரண்டு சாமிகளும்தான் என்பதே என் கருத்து.

(நன்றி: ஜூனியர்விகடன்)

# தர்மம் நுட்பமானது....!



இராமயண காலத்துக்கும் மகாபாரத காலத்துக்கும் என்ன வித்தியாசம். அவை உணர்த்தும் நீதி களில் என்ன வித்தியாசம் என்று மக்களில் பலர் கேள்வி கேட்டகத் தான் செய்கின்றனர்.

அந்த வகையில் தனு பிடித்துச் சண்டையிட வேண்டிய சத்திரிய வம்சத்தில் தோன்றிய விஸ்வாமித் திரர் சத்திரிய வம்சத்தில் தோன்றிய தர்ப்பை பிடிக்கும் பிராமண வசிட்டரைப் போல பிரம்மரிஷி ஆக வேண்டி வில்லை எறிந்து கமண்டலம் ஏந்தியகாலம் இராமாயணம்.

தர்ப்பைப்புல்லை ஏந்தி உலக ரட்சகம் செய்யவேண்டிய பிராமண தர்மத்தில் இருந்து விலகி மூங்கில் வில்லை ஏந்தி கொலைப் போரில் குதித்த துரோணர் காலம் மகாபாரதகாலம். சமூக தர்மங்களை குழம்பி, கலகலத்துப்போய் அதர்மங்கள் தர்மங்களாக வேடமிட்ட காலம் மகாபாரத காலம் என்று சொல்லப்படுகிறது.

அதர்மத்தை அழிக்க நினைப்பவர்கள் தர்மத்துடன் நின்று போராட வேண்டும் என்கிறது இராமாயணம். நிராயுத பாணியாக நின்ற எதிரி இராவணனைப் பார்த்து 'இன்று போய் போருக்கு நாளை வா' என்கிற யுத்த தர்மத்தை இராமாயணம் சொல்கிறது.

நிராயுதபாணியாக நின்ற வீர அபிமன்யுவை துரோணர் தலைமையில் கர்ணன், சல்லியன் என்று ஆறுபேர் சேர்ந்து கொலை செய்த அக்கிரமம் நிறைந்த காலம் மகாபாரத காலம் ஆகும்.

எனவே அதர்மத்தை தர்மத்தால் அழிக்கும் இராமா யணக்கதை மகாபாரதத்தில் எடுபடாது. குறைந்தபட்ச அதர்மத்தைப் பயன்படுத்தியாவது அதிகபட்ச அதர்மத்தை அழித்தாகவேண்டும் என்பதுதான் பாரதக்கதை யின் சாராம்சம். இதற்கு எடுத்துக்காட்டாக ஓர் உதாரணத்தை எடுத்துக் கூறலாம்.

மகாபாரதத்திலே தர்மத்திலிருந்து விலகிப்போன துரோணர் ஒரு பேய் போல போர் செய்கிறார். பாண்டவர் படையை பஞ்சு போல் எரிக்கிறார். அவரை வெல்வதோ - கொல்வதோ சுலபமானதல்ல. ஒரேயொரு வழி மட்டும் உண்டு. அவர் தமது மகனான அச்வத்தாமன் மீது அபிரிமிதமான பாசவெறி உடையவர். அவனுக்கு ஏதாவது நேர்ந்து விட்டது என்பதால் அவரது உலகப்பற்று விடுபட்டுப் போய்விடும்.

எனவே அஸ்வத்தாமன் இறந்ததாக அவர் கேள்விப்பட் டால் அவர் தளர்ந்து போரில் இருந்து விலகக் கூடும். ஆனால் அஸ்வத்தாமன் இறந்ததாகக் கண்ணன் சொன்னால் துரோணர் நம்பமாட்டார். கண்ணன் வார்த்தையில் அவ்வளவு நம்பிக்கை அவருக்கு. தர்மர் சொன்னால் நிச்சயம் நம்புவார்.

அஸ்வத்தாமன் இறந்து போனதாகத் தருமரைச் சொல்லச் சொன்னான் கண்ணன். தருமரோ அது பொய் என்பதால் சொல்ல மறுத்தார். உடனே அஸ்வத்தாமன் என்று பெய ருடைய யானையை விட்டு பீமனைக் கொல்லச் செய்தான் கண்ணன். தருமரைப் பார்த்து அஸ்வத்தாமன் என்ற யானைக்கு பீமன் எமனானான் என்று சொல்லச் சொன்னான்.

தருமன் அப்படிச் சொல்லும்போது 'யானைக்கு' என்றபோது சங்கினை ஊதி துரோணர் காதில் விழாமல் செய்தான். யார் யாருக்கு எவ்வப்போது சங்கு ஊத வேண்டும் என்று அவனுக்குத் தெரியாதா? அஸ்வர்த்தாமா ஹத: குஞ்சா என்று சொல்லும் போது குஞ்சரம் என்று சொன்னபோது அங்கு ஊதினான் என்கிறது வியாச பாரதம்.

எப்படியோ இப்படித் தருமன் (பொய்) சொன்னதும் அதுவரை தரையைத் தொடாமல் ஓடிய தருமரது ரதம் தரையில் பட்டது என்பார்கள். மேலும் தருமர் இறந்து மேல் உலகம் போகும் போது யமனின் தூதர்கள் நரகத்துக்கு அழைத்துப் போனார்களாம். ''எனக்கு நரகமா?'' என்று தருமர் கேட்டதும் 'பொய் சொன்ன பாவத்துக்காக நரகத்தின் வழியாகச் சொர்க்கம் போவாய்' என்றார்கள் என்றும் ஒரு கதை உண்டு.

அதர்வமே வடிவாய் துரோண வெறியே அழிக்கக் கையாண்ட உபாயம் தவறானதா? நரகம் புகுத்தியதா? இல்லை.

தர்மனுக்கு ஏன் இந்தத் தண்டனை முற்றிலும் வேறான காரணம் சொல்லட்டுமா? கிருஷ்ணன் அறியாத தர்மமா? நீதியா? நியாயமா? பாண்டவர் பொருட்டு சகல அவமானங் களையும் சுமந்து தன்னைத் தாழவிட்டுப் பரிமாறிய கருணைக் கடல் 'இதைச் சொல்' என்று உத்தரவிட்டபோது அதை எதிர்த்து தான் பெரிய தர்மவான் போல் பேசிய அகம்பாவத் துக்கு தண்டனை வேண்டாமா.

கண்ணனைவிட தான்பெரிய தர்மவான் என்பதாகக் காட்டிக்கொண்ட தர்மனுடைய தலைக்கனத்துக்குத் தண் டனை வேண்டாமோ? கண்ணனை எதிர்த்த அந்தப் பாவத் துக்குத்தான் நரகவழி சொர்க்கம். இது கிருஷ்ணபக்தர் ஸ்ரீ கிருஷ்ணப்பிரேமி சுவாமிகளின் விளக்கம். தர்மம் நுட்ப மானது. அது இறைவனை அடிப்படையாக உடையது. மேலோட்டமாகப் பார்த்துவிட்டு உளறக் கூடாது.

சுகி.சிவம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி மாணவர்கள் அண்மையில் கல்விச் சுற்றுலாவை மேற்கொண்டிருந்தனர். அப்போது 'உதயனுக்கும்' வருகை தந்திருந்தினர். (ம)

# பெண்களுக்கெதிரான வன்முறைகளைக் கட்டுப்படுத்த அனைவரும் ஒன்றுபடவேண்டும்

## யாழ். மாவட்ட அரச அதிபர்

யாழ்ப்பாணம், ஜூன் 21

பெண்களுக்கு எதிரான வன் முறைகள் பண்பற்ற சமுதாயத் தால் எல்லைமீறிக் கட்டவிழ்த்து விடப்படுகின்றது. இந்தச் சமு தாயச் சீரழிவைக் கட்டுப்படுத்த அனைத்துத்தரப்பினரும் முன் வரவேண்டும்.

யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

யாழ்.கல்வி வலய ஓய்வு நிலைக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயத்தின் மணி விழா நிகழ்வுகள் யாழ்.இந்துக் கல்லூரியில் இடம்பெற்றபோது உரையாற்றிய அரச அதிபர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரி வித்தவை வருமாறு:

போரின் கொடுமைக்கு மத்தி யிலும் கல்வி கட்டிப் பாதுகாக் கப்பட்டு வளர்க்கப்பட்டது. அது இன்று பெரும் விருட்ச மாக வளர்ந்திருக்கின்றது. யாழ். மாவட்ட கல்வி நிலை உல கெங்கும் வியாபித்து இருக் கிறது. உலகெங்கும் யாழ்.மாவட் டத்தில் கல்வி கற்றவர்கள் கல் விப் புகழைப் பரப்பிக் கொண்டி ருக்கிறார்கள்.

நம் இந்த மண்ணில் சாதிக்க வேண்டும். மக்களை வழிநடத் தவல்ல மதிநுட்பம் வாய்ந்தவர் களை உருவாக்க வேண்டும்.

இன்றை சூழலில் யாழ்ப் பாணத்தில் பெண்களுக்கெதி ரான வன்முறை பண்பற்ற ஒரு சமுதாயத்தால் எல்லைமீறி கட்டவிழ்த்து விடப்பட்டுள் ளது. இதைத்தடுக்க, இந்தச் சமுதாயச் சீரழிவைத் தடுத்து நிறுத்த அனைவரும் முன்வர வேண்டும். வன்முறை அற்ற சமுதாயத்தை உருவாக்க வேண்டும்.- என்றார்.

இந்நிகழ்வில் யாழ்பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரி யர் வசந்தி அரசரட்ணம், வட மாகாண பிரதம செயலாளர் ஆசிவ சுவாமி, வடமாகாணக் கல்விப் பண்பாட்டு விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (ம-319)

# பண்பாடு,கலாசாரத்தைப் பேணும் வகையில் இலக்கியப் படைப்புக்கள் வெளிவரவேண்டும்

## யாக்கோபு ஆலய அருட்தந்தை

யாழ்ப்பாணம், ஜூன் 21

இலக்கியம் என்பது காலத் தின் கண்ணாடி என்பார்கள். அந்த வகையில் இலக்கியங்கள் காலங்களைப் பிரதிபலிப்பவை யாக வெளியிடப்பட வேண் டும். அதன் வரலாறுகள், தன் மைகள் என்பவற்றை எழுத்துக் களின் ஆழத்தின் மூலமே காணக் கூடியதாக இருக்கவேண்டும்.

இவ்வாறுதெரிவித்தார் நல் லூர் தூய யாக்கோபு ஆலத் தின் அருட்தந்தை ஜ.டா.டிக் சன்,

யாழ்.இலக்கிய வட்டம், இலங்கை இலக்கியப் பேரவை யின் ஏற்பாட்டில் 2008-2009 ஆம் ஆண்டுகளில் வெளிவந்த சிறந்த நூல்களுக்கான விருது வழங்கும் நிகழ்வு நல்லை ஞான சம்பந்தர் ஆதீன மண்டபத்தில் கலாநிதி க.குணராசா தலைமை யில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரி வித்தார்.

அவர்தொடர்ந்து உரையாற் றுகையில் தெரிவித்த தா வது:

இன்றைய சமூகத்தில் இருக் கும் தமிழ் மக்களின் மத்தியில் இலக்கிய நூல்கள் வெளிவர வேண்டும். இருக்கும் சவால் கள், எதிர்ப்புகள் போன்றன இலக்கியப் படைப்புகளாக வெளிவரவேண்டும்.

இவ்வாறான இலக்கியங்கள் படைக்கப்பட்டால்தான் எதிர் கால சந்ததியினர் எமது பண் பாடு, கலாசாரங்களை அறிந்து கொள்ளமுடியும்.

இவ்வாறான செயற்பாடுகள் உரிய வகையில் மேற்கொள்ளப் படாது விட்டால் தமிழினத்தின் வரலாறு என்பது அழிக்கப் பட்டுவிடும்.

தற்கால எழுத்தாளர்கள் அரசி யல், பொருளாதாரம் கலாசாரங் கள் என்பவற்றைத் தழுவிய தாகத் தமது படைப்புக்களை ஆக்கவேண்டும்.

அப்போதுதான் தமிழ் மக் கள் எவ்வாறான சூழ்நிலையில் பிரச்சினைகளுக்கு மத்தியில் எவ்வாறு வழ்ந்தார்கள் என்பது பதியப்படும். நினைவு படுத்தப்படும் .

கட்டுரைகள், ஆக்கங்கள் வெறும் இன்பத்தை மட்டும் ஊட்டுவனவாக அமையாது இயற்கை வளங்களோடும் அரசி யல் கலாசாரத்தோடும் பின் னிப் பிணைந்திருக்க வேண் டும்.

சங்ககாலம், சங்கம் மருவிய கால இலக்கியங்கள் அந்தக் காலத்தில் உள்ள காதல் உணர்வு கள்,போர்கள், வீரங்கள் என்ப வற்றை உணர்வு பூர்வமாக பிரதிபலிப்பன. அதேபோன்று தற்காலத்தில் தமிழ் மக்களின் உணர்வுகளையும் அரசியல் பொருளாதார நிலைமைகளை யும் எதிர்கால சந்ததியினர் அறியக்கூடிய வகையில் இருக்க வேண்டும்.

தடைகளை எதிர்கொண்டு இலக்கியங்களைப் பிரசவிப்பதே ஒவ்வொரு இலக்கிய வாதி யினதும் பொறுப்பாக அமை கின்றது.- என்றார். (ம-311-7)

# தொழிற்பயிற்சிக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 21

இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகார சபையால் அரச தொழிற் பயிற்சிக் கற்கைகளுக்கான இரண்டாம் கல்வியாண்டுக் கான விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன.

இதில் தகவல் தொழில் நுட்ப தேசிய சான்றிதழ் கற்கை நெறி, தலை அலங்காரமும் முக அலங்காரமும் கற்கை நெறி, மோட் டார் சைக்கிள் திருத்துதல் கற்கை நெறி ஆகியன யாழ்ப்பாண நிலையத்தில் இடம்பெறவுள்ளன.

கணினி வன்பொருள், தக வல் தொழில்நுட்பம், கட்டட நிர் மாணம் நீர்க்குழாய் பொருத்து தல், வெல்டிங், மரப்பொறிநுட் பம், தையல் ஆகிய கற்றைநெறி கள் தென்மராட்சி கைதடி நிலை யத்தில் இடம்பெறவுள்ளன.

காரைநகர் நிலையம், சுன் னாகம் நிலையம் போன்ற வற்றிலும் பயிற்சிகள் வழங்கப் படவுள்ளன. ஆர்வமுள்ளவர் களை விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.(ம-313)

# அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றியவருக்கு ரூ.10ஆயிரம் அபராதம்

யாழ்ப்பாணம், ஜூன் 21

அனு மதிப்பத்தி ர மின்றி மணல் ஏற்றிச்சென்ற உரும்பி ராய் வாசிக்கு யாழ். நீதிமன்றம் 10ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது.

அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றிக் கொண்டு இரு பாலை வீதியூடாகச் சென்று கொண்டிருக்கும் போது இவர் கோப்பாய் பொலிஸாரால் பிடிக் கப்பட்டு வழக்குப் பதிவு செய் யப்பட்டு யாழ். நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த நீதிபதி ஏ.ஆனந்தராஜா பிரஸ்தாப நப ருக்கு 10ஆயிரம் ரூபாவை அப ராதமாக விதித்தார். அபராதம் செலுத்தத் தவறின் ஒரு மாத கால சிறைத் தண்டனை வழங்க உத்தரவிட்டார். (எ-4)

# ஹாட்லிக் கல்லூரியின் சைக்கிள் தரிப்பிடத்துக்கு 2 லட்சம் ரூபா

வடமராட்சி, ஜூன் 21

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்கு துவிச்சக்கர வண்டி தரிப்பிடம் அமைக்கவென பன் முகப்படுத்தப்பட்ட வரவு செல வுத் திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.ஸ்ரீ தரன் இரண்டு லட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளார்.(த-236)

# நல்லூர் செயலக கலாசாரப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 21

நல்லூர் பிரதேச செயலக கலா சார பேரவை நடத்திய இசை, நடனம், பேச்சு, கவிதை, நாட கம், நாட்டுக்கூத்து போட்டிகளின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

அவற்றின் விவரங்கள் பின் வருமாறு:

**தனிப்பாடல்**

**கனிஷ்ட பிரிவு**

ரவிச்சந்திரன் ஸகிஸ்ண (நல்லூர்),விஜயகுமார் வத்சாங் கித சர்மா (இந்துக் கல்லூரி), தில்லைநாதன் வருண்யா (இந்து மகளிர் கல்லூரி).

**சிரேஷ்ட பிரிவு**

பேரானந்தராஜா டினேஷன் (இந்துக் கல்லூரி), மனோகரன் சரண்ணியா (இந்து மகளிர் கல்லூரி), குகனேஸ்வரன் மயூ ரதி (இந்து மகளிர் கல்லூரி).

**திறந்த பிரிவு**

சிவராசா சிவதர்சிகா (நல் லூர்), நாகேந்திரநாதன் பகீரதி (கோண்டாவில் மேற்கு),

**குழுப்பாடல்**

**கனிஷ்ட பிரிவு**

யாழ்.இந்து மகளிர் கல்லூரி, முத்துத்தம்பி மகாவித்தியாலயம்.

**சிரேஷ்ட பிரிவு**

இந்து மகளிர்கல்லூரி, கனகரத் தினம் மத்திய மகாவித்தியால யம், கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்.

**தனி நடனம்**

**கனிஷ்ட பிரிவு**

தனபாலராஜா சர்விகா (கோண் டாவில் இந்து மகாவித்தியா லயம்), சரவணபவானந்த மூர்த்தி துவாரகா (இந்துமகளிர் கல் லூரி), மதியரசு பிரசாந்தி(இந்து மகளிர் கல்லூரி)

**சிரேஷ்டபிரிவு**

ஜெயதீஸ்வரன்நர்மதா (இந்து மகளிர் கல்லூரி), இராஜரட் ணம் பகீரத்திகா (இந்து மகளிர் கல்லூரி), தருமு அம்சத்வனி (கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்).

**குழு நடனம்**

இந்து மகளிர் கல்லூரி.

**கிராமிய நடனம்**

இந்து மகளிர் கல்லூரி, முத்துத்தம்பி மகாவித்தியால யம், கொக்குவில் கிழக்கு நாம கள் வித்தியாலயம்,

**பேச்சு**

**கனிஷ்ட பிரிவு**

சிவகோணேஸன் சிவாம் ஸன் (இந்து ஆரம்பப் பாட சாலை), சந்திரமோகன் கனிஸ் ரன் (இளையதம்பி இந்து வித்தியாலயம்) முரளிதான் சோகன்தாஸ் (இளைய தம்பி இந்து வித்தியாலயம்), ஜெய காந்தன் அபிஷா (கோண்டா வில் இந்து மகாவித்தியால யம்),

**மத்தியபிரிவு**

பவளகாந்தன் பிரதீஸ் (இந் துக் கல்லூரி), தவசீலன் டினேஷா (முத்துத்தம்பி மகாவித்தியால யம்), இராமலிங்கம் தனறோ ஜினி (இந்துமகளிர் கல்லூரி).

**சிரேஷ்டபிரிவு**

சச்சிதானந்தம் சுதாஜினி (இந்துமகளிர் கல்லூரி), இராஜ மனோகரன் சாமந்தி (கொக்கு வில் இந்துக்கல்லூரி), சிவலோக ராஜா ஜெயகௌரி (இந்து மகளிர் கல்லூரி), சுந்தரசபா நாயகம் சஞ்சீவன் (கோண்டா வில் இந்து மகாவித்தியால யம்). (ம-7)

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனக்குத் தனக்கு என்றால்...!

## கோப்பாய் சண்முகம்

கதையோடு செய்தி

எமது ஊரின் அபிவிருத்திக்கு முக்கியமாக விளங்குவது மின்சாரம். பாருங்கோ அந்த மின்சாரத்தைப் பெற முடியாமல் பல ஊர்கள் இன்னும் இருளில் மூழ்கி இருக்கின்றன. அந்த ஊர் மக்கள் தமது ஊருக்கும் மின்சாரம் வழங்கக் கோரி மின்சார சபையிடம் கோரிக்கைகளை விட்டபடியே இருக்கினம். மின்சார சபையோ அந்த ஊருக்கு மின்சாரம் வழங்க முடியாத காரணத்தை மட்டுமே சொல்லிக் கொண்டு இருக்கிறது. ஆனால் இன்றுவரை ஏன் வழங்க முடியாது என்று கூறுகிறார்கள் என்பது தெரியவில்லை. அது தொடர்பாக அவர்கள் ஒரு துளி கூட சிந்திப்பதாகத் தெரியவில்லை.

மின்சார சபையால் என்ன செய்ய முடியும். கடும் தொணியில் மேலிடத்தில் பேசி அப்பகுதி மக்களுக்கு மின்சாரத்தைப் பெற்றுக்கொடுக்க முடியுமோ? அப்படிப் பேசக்கூடிய தைரியம் இருந்தால் எப்பவோ பேசி அந்த ஊர்களுக்கு மின்சாரத்தை வழங்கி இருப்பார்கள்.

தென்னிலங்கை யில் இருந்து வந்து 'கள்ளக் கரண்ட்' எடுப்பவர்களைப் பிடித்துப் பணம் கறக்கிறவர்களுக்குத் துணைபோவதைத் தவிர இவர்களால் என்ன செய்ய முடியும்? இவர்களே இந்த நடவடிக்கையில் ஈடுபடலாம் தானே. மேலிடம் சொல்கிற காரணத்தை அப்படியே கேட்டு விட்டு எமது ஊர் மக்களின் காரணத்தை குப்பையில் போட்டு விடுவார்கள். ஏனெனில் அவர்கள் சம்பளம் பெறுவது அந்த மேலிடத்தில்தானே.

இது இவ்வாறு இருக்க, மின்சார சபையில் உயர் பதவியில் இருப்பவர்களின் ஊரில் மின்சாரம் மூலை முடுக்கெல்லாம் ஒளிரும் பாருங்கோ. வடமராட்சிப் பகுதியொன்றில் உள்ள முருகன் கோயில் மண்டபத்தில் ஒரு நாள் இரவு இலக்கிய விழா நடை பெற்றது. அந்த விழாவுக்கு எனக்கும் அழைப்புக் கிடைத்தது. அந்த அழைப்பை ஏற்று நானும் அந்த இலக்கிய விழாவுக்கு பஸ்ஸில் புறப்பட்டேன். இரவு 7 மணி இருக்கும் அந்த ஊர்ச் சந்தியில் பஸ்ஸில் இருந்து இறங்கி முருகன் கோயில் மண்டபத்துக்கு நடந்து சென்றேன். வீதிகள் தோறும் மின்குமிழ்களால் அலங்கரிக்கப்பட்டு ஒளிர்ந்த வண்ணம் இருந்தன.

இந்த இலக்கிய விழாவுக்குத்தான் இந்த மின் குமிழ்கள் வீதிகளில் ஒளிர்கின்றன என எண்ணிக்கொண்டு நடந்து செல்கிறேன். அங்கே அந்த இலக்கிய விழாவுக்குத் தலைவராக இருப்பவர் என்னை வரவேற்று அந்த மணிமண்டபத்துக்குள் அழைத்துச் சென்றார். அந்த மண்டபத்தில் ஒரு கதிரையில் என்னை இருத்தினார்.

எனக்குப் பக்கத்தில் இருந்தவரிடம் கதையைத் தொடுத்தேன். நீங்கள் இந்த ஊரா என்று கேட்டேன். ஆமா... என்று சென்னார் .வலுவிமரிசையாக இந்த இலக்கிய விழா மின்னொளியில் நடை பெறுகிறதே, யார் ஏற்பாடு என்று கேட்டேன். அதற்கு அவரோ இந்த விழாவுக்குப் போட்ட மின்குமிழ்கள் அல்ல அவை. ஒவ்வொருநாளும் இப்படித்தான் இந்த ஊர் வெளிச்சமாக இருக்கும் என்றார். எப்படி என்று கேட்டேன். இந்த ஊர்காரர் தான் மின்சாரசபையில் உயர் பதவியில் இருக்கிறார் என்றார்.

பாத்தியளா? தனது ஊருக்கு மின்சாரத்தை முழுமையாக வழங்கியுள்ளவர் தனது ஊரைப்போல் ஏனைய ஊர்களையும் பார்க்கத் தவறிவிட்டாரே? இப்படித்தான் பாருங்கோ கிளிநொச்சியிலும் இப்பொழுது வடக்கின் வசந்தத்தில் மின்சாரம் வழங்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கிளிநொச்சியில் பல ஊர்களுக்கு மின்சாரக் கம்பங்களை நட்டு விட்டு இதோ மின்சாரம் வருகுது மின்சாரம் வருகுது என மக்களை எமாற்றிக் கொண்டு இருக்கினம். கிளிநொச்சி போரால் பாதிக்கப்பட்ட ஊர் என்ற படியால் மின்சார இணைப்பு வழங்கியதில் இருந்து ஆறு மாதங்களுக்கு மின்சாரம் இல வசம் என மின்சார சபை அறிவித்தது. எனது நண்பன் கணேசன் உடனடியாக தனது வீட்டுக்கு மின்சாரத்தைப் பதிவுசெய்து பெற்றுக் கொண்டான். ஆனால் கணேசனோ 6 மாதங்களுக்கு மின்சார பில் வராது என்ற நினைப்பில் இருந்தான். என்ன நடந்தது பார்த்தியளா மின்சாரத்தை பாவித்த முதல் மாதத்து பில்லே கணேசனுக்கு வந்துவிட்டது. உடனடியாக கணேசன் பக்கத்து வீட்டுக்காரர்களிடம் இதைப் பற்றிக் கேட்டான். அவர்களும் தங்களுக்கும் பில் வந்ததாகவும் தாங்கள் கொண்டு போய் பாங்கில் பணத்தைக் கட்டிவிட்டோம் என்றும் சொன்னார்கள்.

கணேசனுக்கோ என்ன செய்ய வேண்டும் என்று ஒன்றுமே புரியாமல் மின்சார சபைக்கே சென்றுவிட்டான். அங்கே இதைப்பற்றி ஓர் அதிகாரியிடம் கேட்டான். அவரோ கணேசனைப் பார்த்து நீங்கள் பாவித்த மின்சார கணக்கு பில் உங்கள் வீட்டுக்கு வரும். அதை நீங்கள் எடுத்து வைத்திருக்கவும் ஆனால் பணத்தை ஆறு மாதத்துக்குக் கட்ட வேண்டாம். அது ஒரு கணக்கு நடைமுறை என்று சொன்னார். பல பேர் மின்சார பில் பணத்தை பாங்கில் கட்டி விட்டார்கள் என்று கணேசன் அவரிடம் சொன்னார். அதற்கு அந்த அதிகாரி நான் என்ன செய்ய முடியும் என்று சொன்னார்.

பாவம் அந்த மக்களுக்கு மின்சார சபையினரால் விளக்கமாக சொல்லப் படாததால் இலவச மின்சார இணைப்பைப் பெற்று மின்சார பில் பணத்தைக் கட்டுகிறார்கள். இந்த நடைமுறையை அறிந்துகொண்டதும் பணத்தை மீளப்பெற முடியாமல் அவஸ்தைப்படுகிறார்கள்.

வடக்கின் வசந்தம் திட்டத்தில் அங்கு மின்சாரம் வழங்கப்படுவதாகக் கூறி அந்தப் பகுதிக்கு மின்சாரத்தைக் கொடுக்க மின்சார சபை இணங்கியது. அப்பகுதியில் 2/3 பங்குக்கு மேற்பட்ட மக்களுக்கு இன்றும் மின்சாரம் கிடைக்கவில்லை பாருங்கோ. கிளிநொச்சியில் இருந்து உருத்திரபுரம்வரை இலவச மின்சார இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. அதாவது கிளிநொச்சி நகரில் இரு பக்கமும் 110 மீற்றர் தூரத்துக்கு இரண்டு காணிக்கு இடையில் இலவச மின்சார இணைப்பு வழங்கப்படுகிறது. உருத்திரபுரத்தில் 110 மீற்றர் தூரத்துக்கு ஒரு காணிக்கு இடையில் இலவச மின்சார இணைப்பு வழங்கப்படுகிறது. அடுத்த படியாக வட்டக்கச்சிவரை மின்கம்பங்கள் நடப்பட்டு 7 மாதங்கள் ஆகிவிட்டன இதுவரை மின்சார இணைப்பு வழங்கப்படவில்லை.

ஏனென்று தெரியாமல் அப்பகுதி மக்கள் இருக்கின்றனர். மின்சார சபையினர் கூட இதற்கான காரணத்தைக் கூற முடியாமல் தவிக்கின்றனர். அப்பாடா இத்தனையும் சொல்லிக் களைந்து விட்டேன். மின்கம்பங்கள் போட்டது வரையான பகுதிக்காவது உடனே மின்சார இணைப்பை வழங்கலாம்தானே.

கிளிநொச்சி நகருக்கு மின்சார இணைப்பை வழங்கிவிட்டு கிளிநொச்சி மாவட்டத்துக்கு மின்சார இணைப்பு வழங்கியதாக கருத முடியாது. உந்த மின்சார சபையின் உயர் பதவியில் இருப்பவர்கள் எமது ஊருக்கு மின்குமிழ் ஒளிர வேண்டும் என ஒவ்வொரு நாளும் கனவு காண வேண்டும். அப் துல்கலாம் சொன்னது போல் கனவு காணுங் கள். அப்பொழுது தான் நாம் ஒருஇலக்கை அடைய முடி யும். அதேபோல் மின்சார சபையின ரும் எமது ஊருக்கு மின்சார இணைப்பை ஏற்படுத்த கனவு காண வேண்டும் - பகல் கனவு அல்ல.


## வாங்கி விட்டீர்களா? வாசித்து விட்டீர்களா?

### கவர்ச்சிகரமான பரிசில்கள்!

உங்களுக்கு காத்திருக்கின்றன

1. ஓசாமா பின்லேடன் தங்கியிருந்த வீட்டை முற்றுகையிட்ட அமெரிக்கப் படையினரின் விசேடத் தாக்குதல் அணிக்கு இடப்பட்ட பெயர் என்ன?
2. இனிது இனிது இதழில் வெளிவந்த 'கஸல்' கவிதைகளில் உங்களுக்கு பிடித்த வரிகள் ...?
3. '2012' ஆங்கிலத் திரைப்படத்தை இயக்கியவரின் பெயர் என்ன?
4. மர்லின் மன்றோ பிறந்த இடம்..?
5. புதுமைப்பித்தனின் படைப்புக்களை எந்த ஆண்டு தமிழக அரசு நாட்டுடமையாக்கியது?

நீங்கள் செய்ய வேண்டியது
இது தான். மேலே உள்ள
ஐந்து கேள்விகளுக்கும்
விடை எழுதி அனுப்பி வையுங்கள்.
இக்கேள்விக்கான விடைகள்
இனிது இனிது இதழில் உள்ளன.




கேள்விகளுக்கான விடைகளை
எழுதி எதிர்வரும் 30-06-2011 இற்கு
முன்பாக கீழ் காணும் விலாசத்திற்கு
அனுப்பி வையுங்கள்.

எல்லா பிரதேசங்களிலும் இப்போது பரபரப்பாக விற்பனையாகிறது

ஆசிரியர்,
இனிது இனிது
உதயன் வெளியீட்டகம்,
361. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

inithumagazine@uthayan.com

## துள்ளிக் குதிக்கும் பள்ளிச் சிறுவர்களே !

எதிர்காலம் மேன்மையுற•
ஆற்றல்களை வளர்க்க•
ஆக்கங்களுக்கு இடந்தர•
ஆளுமையை விருத்தி செய்ய•

வாங்குங்கள் !
வாசியுங்கள் !!
எழுதுங்கள் !!!




சிறுவர்களுக்கான மாத இதழ்

எல்லா பிரதேசங்களிலும் இப்போது பரபரப்பாக விற்பனையாகிறது

அர்ச்சுனா
உதயன் வெளியீட்டகம்,
361. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

archunamagazine@uthayan.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவசரகால கருத்திட்டத்தின் கீழ் உவர் நீர் தடுப்பணைகள் புனரமைப்பு

நாவற்குழி, ஜூன் 21

வடமாகாண சபை பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் முரண்பாடுகளால் பாதிப்புற்ற பிரதேசங்களுக்கான அவசரகாலக் கருத்திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணத்தின் 3 இடங்களில் உவர் நீர் தடுப்பணைகளின் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது.

இலங்கை அரசினதும் ஆசிய அபிவிருத்தி வங்கியினதும் நிதியின் மூலம் இந்தப் புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

அராலி. பொன்னாலை உவர்நீர் தடுப்பணை 3 லட்சம் ரூபா செலவிலும், வேணணை உவர்நீர் தடுப்பணை 3 லட்சம் ரூபா செலவிலும், புங்குடுதீவு மட்டத்து வெளி உவர்நீர் தடுப்பணை ஒன்றரை லட்சம் ரூபா செலவிலும் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

(எ -121)

# பருத்தித்துறையில் நடமாடும் சேவை

யாழ்ப்பாணம் ஜூன் 21

டி.ஆர்.சி.நிறுவனத்தால் பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் நடமாடும் சேவை எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு இடம் பெறவுள்ளது.

இந்த நடமாடும் சேவையில் பிறப்பு, இறப்பு, விவாகம் தொடர்பான பதிவுகள் மேற்கொள்ளப்படவுள்ளதால் பிரதேச மக்கள் ஆவணங்களுடன் வருகை தருமாறும் மேலதிக விவரங்களைப் பிரதேச கிராமசேவகரிடம் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளுமாறும் பருத்தித்துறைப் பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

(ம-313)

## குத்தகைக்கு

ஆரியகுளம் சந்தி புத்த விகாரைக்கு முன்பாகவுள்ள அரிவுபட்டறை குத்தகைக்கு கொடுக்கப்படும்.
தொ.பே: 0778175926

## பெயர் மாற்றம்

வளத்தம்பரை அம்மன் கோயிலடி தொல்புரத்தைச் சேர்ந்த அம்பிகாபதி அம்பாள் ஆகிய நான் எனது பெயரை அம்பிகாபதி அபிராமி என பெயர் மாற்றி இன்று முதல் சகல ஆவணங்களிலும் கையொப்பமிடுவேன் என அறியத்தருகிறேன்.

அம்பிகாபதி அபிராமி



## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம் ஜூன் 21

ஏழாலை மயிலங்காடு ஞானவைரவர் ஆலயத்தின் அலங்காரத் திருவிழா நாளை புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறவுள்ளன.

தினமும் விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று சுவாமி வீதியுலா வருவார்.

திருவிழாக் காலங்களில் தினமும் மாலை 6 மணிக்கு கானகதா வாரிதி பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்த சர்மா பெரியபுராணம் தொடர்பாக தெய்வீகத் தொடர் இசைப் பேருரை நிகழ்த்துவார்.

(ற)

***

யாழ்ப்பாணம் ஜூன் 21

நாவற்குழி சித்திர வேலாயுதர் ஆலயத்தின் மணவாளக் கோலவிழா இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 8 மணிக்கு சங்காபிஷேகமும் பிற்பகல் 3 மணிக்கு வள்ளி, தேவசேனா சமேத முத்துக் குமார சுவாமிக்குத் திருக்கல்யாணம் நடைபெற்று மாலை 5 மணிக்கு சுவாமி வீதியுலா வருவார்.

(ற)

***

யாழ்ப்பாணம் ஜூன் 21

சங்கானை, அரசடி வைரவப் பெருமான் ஆலயத்தின் அலங்காரத் திருவிழா எதிர்வரும் 28ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 6ஆம் திகதி புதன் கிழமை பிற்பகல் 3 மணிக்கு சுவாமி வீதியுலாவும் மறுநாள் வியாழக்கிழமை காலை நடேசர் அபிஷேகமும் பிற்பகல் 3 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

திருவிழா பூசைகளை சிவஸ்ரீ வே.சண்முகராசக் குருக்கள் நிகழ்த்து வார். (ற)

***

யாழ்ப்பாணம் ஜூன் 21

இருபாலை, கட்டப்பிராய் முத்துமாரி அம்மன் ஆலயத்தின் பெருந்திருவிழா அடுத்தமாதம் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 16 தினங்கள் நடைபெறவுள்ளன.

அடுத்த மாதம் 14ஆம் திகதி வியாழக் கிழமை காலை 7.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் 9 மணிக்கு தேர்த் திருவிழாவும் இடம்பெறும்.

மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும்.

திருவிழாக்கால பூசைகளை பிரம் மஸ்ரீ சிவாகம சிரோன்மணி பொ.வரதராஜக் குருக்கள் நிகழ்த்துவார். (ற)

# சோடா என எண்ணி மண்ணெண்ணெயைக் குடித்தது குழந்தை

தென்மராட்சி, ஜூன்21

சோடாப் போத்தலினுள் வைக்கப் பட்டிருந்த மண்ணெண்ணெயைக் குடித்த 15 மாதக்குழந்தைக்குப் புரையேறி மூச்சுத்திணறியது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் காலை வடமராட்சி கிழக்கு வத்திராயன் பகுதியில் இடம்பெற்றது

இதே இடத்தைச் சேர்ந்த தசிகரன் தணிகா எனும் குழந்தை மூச்சுத் திணறிய நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

(ம-313-207)

## காணி விற்பனைக்குண்டு

புலோலி தெற்கு, புலோலியில் உள்ள இரண்டு பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
மேலதிக தகவலுக்கு: ஆர். மகேந்திரா
0212240103, 0750492181

## மூன்றாம் வருட நினைவலைகள்

தோற்றம் 26.12.1937

மறைவு 24.06.2008



திருமதி

**சுப்பிரமணியம் சிவபாக்கியம்**

திதி: ஆனிமாதம் அபரபக்கம் சஷ்டி
(21.06.2011 செவ்வாய்க்கிழமை)

அன்பெனும் கருவி கொண்டு எம்மை வளர்த்து
வாழ்வாங்கு வாழவைத்துத் தெய்வமாகிய அன்னையே
என்றும் எம் நினைவிலிருந்தகலாத உமது
ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கிறோம்.
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கிளுவானை ஒழுங்கை,
கோப்பாய் மத்தி, கோப்பாய்.

குடும்பத்தினர்

# சைக்கிள் திருடன் நையப்புடைப்பு

கைதடி, ஜூன் 21

வீதியின் ஓரத்தில் கடையில் நின்ற புத்தம் புதிய சைக்கிளைப் பூட்டுடைத்து திருடிச் சென்ற திருடன் கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டு நையப்புடைக்கப்பட்ட பின் விடுவிக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் கடந்த வாரம் கைதடிச் சந்தியில் இடம்பெற்றுள்ளது. சைக்கிளின் உரிமையாளர் தனது சைக்கிளை வீதியின் ஒரு பக்கத்தில் விட்டு விட்டுக் கடையின் உள்ளே சென்றுள்ளார். திரும்பி வந்து பார்த்தபோதே சைக்கிள் திருடப்பட்ட விடயம் தெரியவந்தது.

அங்கு நின்ற ஒருவர் மீது சந்தேகம் வர சைக்கிள் உரிமையாளரும் வேறு சிலரும் சல்லடை போட்டுத் தேடினர்.

குறித்த சைக்கிள் திருடன் திருமண வீடொன்றில் நின்றதைக் கண்டு கொண்டனர்.

சற்றுத் தொலைவில் இருந்து அவதானித்தபோது அவர் குறித்த சைக்கிளை எடுத்துக் கொண்டுபுறப்பட்டார்.

அப்போது அந்தத் திருடன் சைக்கிள் உரிமையாளரிடம் கையும் மெய்யுமாகப் பிடிபட்டார்.

அவரிடமிருந்து சைக்கிளைப் பறிமுதல் செய்ததுடன் குறித்த நபரை நையப்புடைத்தனர் என்றும் கூறப்பட்டது. (ம-288)

## பிறந்தநாள் வாழ்த்தும் சேவை நலன் பாராட்டும்



இலங்கை வங்கியில் 30 வருடங்களுக்கு மேல் சிறந்த சேவையாற்றி கனிஷ்ட நிறைவேற்று உத்தியோகத்தராகக் கடமையாற்றி இன்று மணிவிழாக் கண்டு ஓய்வு பெற்றுச் செல்லும், சுழிபுரத்தைச் சேர்ந்த

**திரு.ஆசை யோகராஜா**

*ஒய்வுக் காலத்தில் சகல சௌபாக்கியங்களும் பெற்று சிறப்புடன் வாழவேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.*

(49,27,25)

முகாமையாளரும் சக ஊழியர்களும்,
இலங்கை வங்கி 2ஆம் மேற்தரக்கிளை, யாழ்ப்பாணம்.

## அந்தியேட்டி அழைப்பு

**அருணாசலம் நல்லதம்பி**



தோற்றம்: 02.04.1928
மறைவு : 22.05.2011

கடந்த 22.05.2011 ஞாயிற்றுக் கிழமை சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் இன்று (21.06.2011) செவ்வாய்க்கிழமை மு.ப.10.30 மணியளவில் எங்கள் இல்லத் தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடை பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

ஆதிகோயிலடி,
வல்வெட்டித்துறை.
T.P: 0775787287.

(49,27,25)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்
பூட்டப்பிள்ளைகள்.

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து




தயாகரன் - மாலினி தம்பதியரின்
செல்வப் புதல்வி *ரம்மியா* தனது முதலாவது பிறந்தநாளை இன்று (21.06.2011) செவ்வாய்க்கிழமை மூளாய்வீதி, வட்டுக்கோட்டையில் உள்ள அவரது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

அவரை வாழ்க வளமுடன் என வாழ்த்துவோர்:
அன்பு அப்பா, அம்மா,
அப்பப்பா, தாத்தா, அம்மம்மா,
சின்னப்பப்பா, பெரியப்பாமார்,
பெரியம்மாமார், மாமாமார், மாமிமார்,
அக்கா, அண்ணாமார், மச்சாள்மார்.

(48,21,23)

மூளாய் வீதி, வட்டுக்கோட்டை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சில் ஓர் ஆலயம்!

(சென்றவாரத் தொடர்ச்சி)

கம்பீரமாகத் தோற்றமளிக்கும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்குள் நோயாளர்கள் உள் நுழைவதுக்கு மேற்படி வைத்தியசாலையின் மாதிரி வரைபடம் வழிகாட்டியாக அமைகின்றது. நோயாளர்களுக்கு அசௌகரிய உணர்வுக்கு இடமளிக்காது தொலைக்காட்சி வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

வெளிநோயாளர் பிரிவில் விசேட தேவை உடையோர் மற்றும் கர்ப்பிணிப் பெண்களுக்கான நெருக்கடிகளைத் தவிர்க்க இடது புறமாகத் தனியான அலகு ஒன்றும் இயங்கி வருகிறது. இதுவும் ஒரு பாராட்டப்பட வேண்டிய அத்தியாவசியமான பணியாகும்.

வெளிநோயாளர் பிரிவிலும் அத்தியாவசியமான அறைகளிலும் அலுவலகப் பகுதியிலும் விடுதிகளிலும் பெரும்பாலும் தரை மற்றும் சுவர் ஓடுகள் பதிக்கப்பட்டு பளிச்சென்று காட்சி அளிக்கின்றமை வருகின்றவர்களை உற்சாகமடையவே வைக்கும்.

அங்கு பணிபுரிபவர்களும் வருகை தருபவர்களும் இடத்துக்கு ஏற்ப தம்மை மாற்றி அமைக்க வேண்டிய நிலைமைக்கு ஆளாகின்றனர். ஒரு கை துடைக்கும் கடதாசியைத் தரையில் வீசக் கூச்சப்படும் அளவுக்கு சுத்தம் அங்கே பேணப்படுகிறது.

எனது இளமைக் காலத்தில் இந்த வைத்தியசாலையின் இருமாடிக் கட்டடம் பூர்த்தியான காலப்பகுதியில் வெளிநோயாளர் பிரிவில் காத்திருப்பவர்களால் வாங்குகளிலும் புதிய சுவர்களிலும் பெயர்கள் மற்றும் வாக்கியங்கள் பொறிக்கப்பட்டும் குடையப்பட்டும் இருப்பதை நான் கண்டிருக்கிறேன். இத்தகைய போக்குகள் தொடராமல் இவை எமது சொத்து என்கின்ற உணர்வு ஒவ்வொருவரிடமும் உருவாக வேண்டும்.


வெற்றிலை போடுகிறவர்கள் சுவர்களிலும் யன்னல் வழியாகவும் துப்புவதும் சுண்ணாம்பைச் சுவர்களிலும் தளபாடங்களிலும் தடவுவதும் தற்போது வெகுவாகக் குறைவடைந்து வருகின்றன. கழிவறைகள் சுத்தமாக இல்லை என்று கருதுவதனால் உள்ளே போக அருவருத்து வாசலிலேயே கடன் கழிக்கும் நிலைமைகளும் இப்போது முற்றாகக் குறைந்துவிட்டன என்றே கூறலாம்.

வைத்தியசாலைக்குச் சிகிச்சை பெற வருகின்ற நோயாளர்களின் பின்னணியைச் சற்று ஆராய்ந்து அவர்களுக்குச் சிறு சிறு வ்ழிகாட்டல்களை வழங்கி வந்தால் இந்த நிலைமையை மேலும் மேம்படுத்தலாம். வீட்டு மற்றும் கழிப்பறை வசதிகள் குறைந்த பிரதேசங்களிலிருந்து வருகை தருகிறவர்களின் அறியாமை அல்லது கூச்சம் அசுத்தமான நிலைமைக்கு இட்டுச் செல்லாமல் காக்க இந்த எச்சரிக்கை உணர்வு உதவும்.

மக்கள் காத்திருக்கும் இடங்களிலெல்லாம் இருக்கை வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருப்பது ஒரு சிறப்பம்சம். மகப்பேற்று விடுதியான 10ஆவது விடுதியில் காத்திருக்கும் பார்வையாளர்களுக்கே இருக்கை வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருப்பது பாராட்டைப் பெறுகிறது.

> **பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் சிறந்த சேவைக்காக வெள்ளி விருது கிடைத்தமையை ஒட்டி இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது.**

பார்வையாளர்களையும் நோயாளிகளைப் பராமரிப்பவர்களையும் விரோதிகளாக விரட்டும் அரச வைத்தியசாலை பண்பாட்டில் அவர்களையும் மனிதர்களாக மதித்து மனித நேயத்துடன் அணுகும் இந்த வைத்தியசாலையின் அணுகு முறை மெச்சத்தக்கது. அதனால் தானே பலரும் தமது சக்தியையும் மீறித் தனியார் வைத்தியசாலைகளை நாடுகிறார்கள்.



விடுதிகளில் பராமரிப்பாளர்கள் நோயாளரின் கட்டிலில் இருக்கவோ, படுக்கவோ கூடாது என்பது விதிமுறை. எனவே அவர்களுக்கென பிரத்தியேகமாகக் கதிரைகள் ஒதுக்கப்பட்டுள்ளன. இரவில் பராமரிப்பாளர்கள் தூங்க பிளாஸ்ரிக் பாய்கள் கொடுக்கப்படுகின்றன. இவற்றைவிட மனிதநேயம் வேறென்ன வேண்டும்?

விடுதிகளிலும் வழிகளிலும் மக்களுக்கு இலகுவில் விளங்கத்தக்க வகையில் அறிவுறுத்தல்கள் தெளிவாகத் தரப்பட்டிருக்கின்றன. இவை பெரும்பாலும் படங்களாகவும் குறியீடுகளாகவும் உள்ளமை படிக்க வாசிக்கத் தெரியாதவர்களுக்கும் பார்வை தெரியாதவர்களுக்கும் பெருமளவில் உதவியாக இருக்கும். மது அருந்துதல், புகைத்தல், வெற்றிலை சப்புதல், கைத்தொலைபேசி பாவித்தல் போன்றவற்றைத் தவிர்க்க அத்தகைய குறியீட்டு அறிவுறுத்தல்கள் கண்ணில் படுகின்றன.

நோயாளிகள் உடைகளைத் தோய்த்து உலரவிட பிரத்தியேகமாகப் பல உயர மட்டங்கள் கொண்ட ஸ்ரான்டுகள் அமைக்கப்பட்டுள்ளன.

இவைதவிர பணியாள்களின் வேலைகளை இலகுபடுத்தவும் நேரத்தைக் கணிசமாக மீதப்படுத்தவும் வழி வகைகள் குறியீடுகளாகத் தரப்பட்டுள்ளன. சக்கரநாற்காலி, படுக்கை ஊர்தி, செலைன் தாங்கி, ஒட்சிசன் சிலிண்டர் போன்ற பல வகை சாதனங்களுக்கான நிறுத்தும் இடங்கள் ஒவ்வொரு விடுதியிலும் படம் போட்டுக்காட்டப்பட்டுள்ளது. பெட்டிகளில் பேணப்படும் பொருள்களின் படங்களும் அளவுகளும் வெளியே ஒட்டப்பட்டுள்ளன. எதையும் தேடி அல்லது வாசித்து அறிய அல்லது நேரத்தை வீணடிக்க வேண்டிய அவசியம் எழமாட்டாது.

**மு.சிவநேசன்**

(தொடரும்)

# அன்னப் பணியுடன் அறிஞர்கள் கௌரவிப்பையும் மேற்கொண்டுவரும் சந்நிதியான் ஆச்சிரமம்

(07.06.2011 ஆம் திகதித் தொடர்ச்சி)

செல்வச்சந்நிதியில் அரசம்மா மடத்தில் இயங்கிவந்த சந்நிதியான் ஆச்சிரமம் இரண்டு ஆண்டுகளில் நித்திய அன்னதானப் பணியுடன் பல்வேறு பணிகளையும் மெல்ல மெல்ல ஆரம்பிக்கத் தொடங்கியது. சைவம், தமிழ், கலை, கலாசாரம், பண்பாடு, இயல் இசை, தெய்வீகம் போன்றவற்றை வளர்ப்பதற்காக இந்தப் பணிகள் ஆரம்பமாகத் தொடங்கின.

1992 ஆம் ஆண்டுக்கு முன்னர் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் செல்வச் சந்நிதி முருகன் கோயிலின் பின்புற பூவரச மரத்தடியில் முருகன் அடியவர்களான பக்தர்கள் பலரும் ஒன்று கூடி ஆர்மோனியம், மிருதங்கம்,கெஞ்சிரா, புல்லாங்குழல் சகிதம் பஜனை செய்வார்கள். இந்த பஜனை நிகழ்வுகளில் சந்நிதியான் ஆச்சிரம சுவாமிகளான செ.மோகனதாஸும் வேறு சில அடியார்களும் தவறாது கலந்து கொள்வார்கள். ஆனால் இந்த நிகழ்ச்சிக்கு இளம்தலைமுறையினர் அதிகம் ஆர்வம் காட்டாமையினால் படிப் படியாக இந்த நிகழ்வு நின்று போனது.

இந்தச் சம்பவம் மோகனதாஸ் சுவாமிகளின் மனதில் உறுத்தலை ஏற்படுத்தியது. சந்நிதி முருகன் ஆலயத்தில் உள்ள பிள்ளையார் கோயில் வாசலில் பிரதி வெள்ளிக் கிழமை தோறும் பஜனை நடத்த ஏற்பாடாகியது. அதுவும் சில காலங்களில் தடைப்பட்டது.

இந்த நிலையில் அறிஞர்களதும், ஆன்மீக வாதிகளதும் ஆலோசனையைப் பெற்றுக் கொண்ட சுவாமிகள் சந்நிதியான் ஆச்சிரமத்தின் சந்திப்பில் வாராந்த ஆன்மீக நிகழ்வுகளை ஆச்சிர மத்திலேயே நடத்தத் திட்டமிட்டார். இந்தத்திட்டத்துக்கமைய 27.09.1992 அன்று சந்நிதியான் ஆச்சிரமத்தின் சார்பாக ஒரு செயற்குழு தெரிவு செய்யப்பட்டு அதுவே சைவ கலை பண்பாட்டு பேரவையாகத் தோற்றம் பெற்றது.

இந்தப் பேரவையே ஆச்சிரமத்தில் வெள்ளி ஆன்மீக நிகழ்வுகளை திட்டமிட்டு வாரந்தோறும் செய்து வருகின்றது. சைவ கலை பண்பாட்டுப் பேரவைக்கு 1993 இல் நிரந்தர செயற்குழு தெரிவு செய்யப்பட்டதுடன் இற்றை வரை நான்கு செயற்குழுவின் முறைப்படியானதெரிவுகளும் இடம்பெற்றுள்ளன.

வெள்ளிக்கிழமைகளில் இடம்பெற்று வரும் வாராந்த ஆன்மீக நிகழ்வுகளில் பஜனை,பண்ணிசை,வில்லுப்பாட்டு, சொற்பொழிவுகள் இடம்பெற்று வருகின்றன. மாதந்தோறும் கடைசி வெள்ளியன்று வெளியாகும் பேரவையின் 'ஞானச்சுடர்' ஆன்மீக சஞ்சிகையின் வெளியீடு நடைபெற்று வருகின்றது.

சந்நிதியான் ஆச்சிரமத்தினால் மற்றொரு பணியாக கடந்த 16.05.1993 தொடக்கம் பிரதி வருடமும் வைகாசி விசாக தினத்தன்று வைகாசிப் பெருவிழா ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. ஆச்சிரமத்தின் சிறப்பு நிகழ்வான வைகாசிப் பெருவிழாவில் அறிஞர்கள் பலரது சொற்பொழிவுகளும் பாடசாலை மாணவர்களது கலைநிகழ்ச்சிகள், பண்ணிசைகள், வில்லுப்பாட்டு என்பன இடம் பெற்று வருவது வழக்கமாகும்.

வைகாசிப் பெருவிழாக் காலங்களில் சொற்பொழிவுகள்,பண்ணிசைகள் வேறுநிகழ்ச்சிகளுடன் பல்துறை சார்ந்த சமூகப்பிரமுகர்களும் கற்றறிந்த பெரியோர்களும் விசேடமாகக் கௌரவிக்கப்படுகின்றனர். கௌரவம் பெறுவோர் பென்னாடை போர்த்தப்பட்டு அவரவர் பட்டம் பொறிக்கப்பட்ட விருதுகள் வழங்கப்பட்டு மதிப்பளிக்கப்படுகின்றனர். கடந்த காலங்களில் பட்டங்களுடன் கூடிய விருதுகளைப் பெற்றோர் விவரம் வருமாறு:

16.05.1993அன்று அமரர் பண்டிதர் முத்துவேலுக்கு ''ஞானபண்டித இளவரசு'', அமரர் க.தணிகாசலத்துக்கு "ஞான பண்டித ஆய்வரசு'',எஸ்.குமாரசாமிக்கு ''ஞானபண்டித இசையரசு'' 22.05.1994 ஆம் ஆண்டு பேராசிரியர் அ. சண்முகதாஸுக்கு ''ஞானபண்டித தமிழ் குருசில்'' 14.06.1998 அன்று அமரர் செல்வி தங்கம்மா அப்பாக் குட்டிக்கு ''ஞான பண்டித கலாவித்தகி'' 29.05.1999 அன்று டாக்டர் சி.கதிரவேல் பிள்ளைக்கு ''ஞானபண்டித சேவாசுரபி'', 03.06.2001 அன்று அமரர் அருட்கவி சி.விநாசித்தம்பிக்கு ''ஞானபண்டித அமுத சுரபி'', 24.05.2002 அன்று என்.பஞ்சாட்சரத்துக்கு "ஞானபண்டித விமலதாசன்", 30.05.2004 அன்று வை.வேலும்மயிலுவுக்கு "ஞான பண்டித சேவா ஜோதி", 09.06.2006 அன்று கு.கங்கை வேணியனுக்கு "ஞான பண்டித ஆன்மீகச் செம்மல்" ஆகிய விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

உள்நாட்டில் சொற்பொழிவுகளை மேற்கொள்ளும் போதும் தனது வெளிநாட்டு ஆன்மீகச் சுற்றுலா வேளைகளிலும் வேறு எங்கு சென்றாலும் அங்கெல்லாம் சந்நிதியான் ஆச்சிரமத்து பணிகள் பற்றி அனைவரும் அறியும் வண்ணம் கருத்து வழங்கி வரும் தெல்லிப்பழை துர்க்கா தேவஸ்தான தலைவரும், ஆன்மீக சொற்பொழிவாளருமான செந்சொற்செல்வர் ஆறு. திருமுருகனுக்குச் சந்நிதியான் ஆச்சிரமத்தினால் 09.10.1999 அன்று தனியான மதிப்பளித்து கௌரவிக்கும் நிகழ்வு ஒன்று நடைபெற்றது. சந்நிதியான் ஆச்சிரமத்தின் குருநாதரான ஆனந்தா ஆச்சிரமத்தின் நிர்வாகியாக இருந்து நீண்ட காலம் அன்னப் பணியாற்றி மறைந்த மயில்வாகனம் சுவாமிகளின் குரு பூசை வருடந்தோறும் ஆடிச் சித்திரை தினத்தன்று சந்நிதியான் ஆச்சிரமம் ஆரம்பிக்கப்பட்ட காலம்முதல் விசேட பூசை ஆராதனைகளுடன் நடைபெற்று வருகின்றன.

அன்றைய தினத்தில் மாணவர்களுக்கான பேச்சுப் போட்டி நடைபெற்று வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பெறுமதியான பரிசில்களும் வழங்கப்படுகின்றன. அத்துடன் பங்கு பற்றிய அனைவருக்கும் பரிசில்கள் வழங்கப்படுவது சிறப்பம்சமாகும்.

**மாலவன்**

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓரிருவர் உண்ணா நோன்பு; வேறுசிலர் ஒன்றாக விருந்துபசாரம்

# அரசுக்கு நிலையான கொள்கை இல்லை; ஏளனம் செய்கிறார் விஜித ஹேரத்

கொழும்பு, ஜூன் 21

இந்த அரசுக்கென்று நிலையான கொள்கை ஏதுமில்லை. தூரதிருஷ்டியுடன் சிந்தித்துச் செயற்படுமளவுக்கு அறிவார்ந்த ஆலோசனைகள் வழங்கக் கூடியவர்களும் அரசில் இல்லை. நிபுணர்குழு அறிக்கைக்கு எதிராக ஒரு தரப்பினர் உண்ணாவிரதம் இருக்க இன்னொரு தரப்பினர் ஐக்கியநாடுகள் சபைச் செயலாளர் நாயகத்துடன் ஒன்றாக அமர்ந்து விருந்துபசாரம் மேற்கொள்ளும் நிலைதான் அரசின் கொள்கை நிலைப்பாடு- இவ்வாறு ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.



கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாடொன்றில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:

அரசின் கொள்கையைப் பொறுத்தவரை ஆதிக்க சக்திகளுக்கு வளைந்து கொடுப்பதில் வல்லவர்களாக விளங்குகின்றனர். தற்போது இந்தியாவுக்கு முன்னால் வளைந்து கொடுத்துள்ளனர்- என்றார். (ச)



சுகாதார அமைச்சினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள டெங்கு ஒழிப்பு வாரம் நாடு முழுவதிலும் அமுல்படுத்தப்படுகின்றது. இதன் ஆரம்ப நிகழ்வுநேற்று திங்கட்கிழமை நுகேகொடை பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

# இரத்ததானம் செய்பவர்களுக்கு நவீன இலத்திரனியல் அட்டை

## சுகாதார அமைச்சு நடவடிக்கை

கொழும்பு,ஜூன் 21

இரத்ததானம் செய்பவர்களுக்கு இதுவரை வழங்கப்பட்டு வந்த சிறிய புத்தகத்துக்குப் பதிலாக நவீன இலத்திரனியல் அட்டைகளை வழங்க சுகாதார அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

ஒருவர் எத்தனை தடவை இரத்ததானம் செய்துள்ளார் என்பதற்கமைய இந்த அட்டைகள் வேறுபடும். அதன் அடிப்படையில் 1-20 தடவைகள் தானம் செய்தவருக்கு வெள்ளி அட்டையும், 20-60 தடவைகள் தானம் செய்தவருக்கு தங்க அட்டையும், 60 இற்கு மேற்பட்ட தானம் செய்பவருக்கு பிளாட்டினம் அட்டையும் வழங்கப்படும்.

கடந்த வெள்ளிக்கிழமை நூறாவது தடவையாக இரத்ததானம் செய்த அத்துல விஜேவீர என்பவருக்கு சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவால் பிளாட்டினம் அட்டை வழங்கப்பட்டது.

நாரஹேன்பிட்டி தேசிய இரத்த வங்கி மத்திய நிலையத்தில் நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர், உயிர் காக்கும் அற்புதமான செயல் இரத்ததானமே எனவும் அவ்வாறான தியாகங்களை செய்பவர்களைக் கவனிக்கவே இந்த நவீன அட்டைகள் வழங்கப்படுவதாகவும் கூறினார். நாடெங்கும் மேலும் 50 இரத்த வங்கிகள் நிறுவப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-5)

# இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு கூடுதலான அதிகாரங்கள் வழங்கல்

கொழும்பு, ஜூன் 21

இலஞ்ச ஊழல் மற்றும் துஷ்பிரயோகம் பற்றிய விசாரணை ஆணைக்குழுவின் அதிகாரங்கள் மேலும் நீடிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய ஊழல்கள், துஷ்பிரயோகங்கள் அதிகமாக நடக்கும் திணைக்களங்கள், அரச நிறுவனங்கள், கூட்டுத்தாபனங்கள் ஆகியவற்றிற்கு எதிரான முறைப்பாடுகள் இல்லாமலே விசாரணைகளை நடத்த முடியுமென தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் ஆணைக்குழுவின் தலைவரான ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்ற நீதியரசர் டீ.ஜே.எஸ்.டி.பாலபடபெந்தியிடம் வினவியபோது, இது பற்றிய பிரேரணையொன்று அரச உயர் பீடத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

தற்சமயம் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் படி முறைப்பாடொன்றின் அடிப்படையிலேயே விசாரணைகளை மேற்கொள்ள முடியும். இந்தச் சட்டம் திருத்தப்பட்டு ஆணைக்குழுவுக்கு மேலதிக அதிகாரங்கள் வழங்கப்பட்ட பின் ஊழல் மோசடிகள் அதிகமாக நடக்கும் திணைக்களங்கள், அரச நிறுவனங்கள், கூட்டுத்தாபனங்கள் ஆகியவற்றின் மீது அதிரடிச் சோதனைகளை மேற்கொள்ள முடியுமென அரச உயர்மட்ட அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். (ச-5)

# வீதிப்புனரமைப்புக்கு நிதி ஒதுக்கீடு

கொழும்பு, ஜூன.21

கொழும்பு மாவட்டத்தின் அவிசாவளை பிரதேசத்தில் பழுதடைந்துள்ள வீதிகளின் புனரமைப்புக்கு இரண்டரைக் கோடி ரூபா நிதியை ஒதுக்குவதற்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ இணக்கம் தெரிவித்துள்ளார். இந்த நிதி மூலம் சுமார் 25 கிலோ மீற்றர் நீளமான வீதிகள் செப்பனிடப்படவுள்ளன. அவிசாவளை தேர்தல் தொகுதியின் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் அங்கத்தவரான சுமித் விஜே முனி சொய்ஸா விடுத்த வேண்டுகோளை ஏற்று சேதமடைந்த வீதிகளுக்கு காப்பெற் இட்டு சீர் செய்ய அமைச்சர் சம்மதித்துள்ளார். (ச-5)

# சப்ரகமுவ பல்கலையின் பரீட்சைகள் ஒத்திவைப்பு

கொழும்பு, ஜூன் 21

சப்ரகமுவ பல்கலையில் நேற்று ஆரம்பமாக இருந்த சமூகவிஞ்ஞானம் மற்றும் மொழி பீடங்களின் முதலாவது அரையாண்டுப் பரீட்சைகள் மறு அறிவித்தல் வரை ஒத்திவைக்கப்பட்டதாக அந்தப் பீடங்களின் பீடாதிபதி பேராசிரியர்எச்.எம். எஸ்.பிரியநாத் தெரிவித்துள்ளார்.

நேற்று இந்தப் பரீட்சையை நடத்த நான் முழு முயற்சிகளையும் மேற்கொண்டிருந்த போதும் விரிவுரையாளர்களின் தொழிற்சங்கப் போராட்டம் காரணமாக வினாப் பத்திரங்களைத் தயாரிக்க முடியாது போனமை, அவ் வினாப்பத்திரங்களை பரீட்சைகள் பரிசோதனைச் சபைக்கு சமர்ப்பிக்க முடியாமை, தயாரிக்கப்பட்ட வினாப் பத்திரங்களின் தரத்தை உறுதிப்படுத்திக் கொள்ள முடியாமை போன்ற காரணங்களினால் இந்தப் பரீட்சைகள் மறு அறிவித்தல் வரை ஒத்திவைக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

அடுத்த வாரம் நடைபெறவிருந்த விவசாய பீடம் மற்றும் முகாமைத்துவப் பீடம் ஆகியவற்றின் பரீட்சைகளுக்கான நேர அட்டவணையும் இதே காரணத்துக்காக மாணவர்களுக்கு வழங்கப்படவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதன்காரணமாக இவ்விரு பீடங்களின் பரீட்சைகளும் ஒத்திவைக்கப்படும் என பல்கலை விரிவுரையாளர்கள் சங்கத்தின் தலைவர் கலாநிதி ஏ.டபிள்யூ. விஜேரத்ன தெரிவித்துள்ளார். (ச-5)

CSC® COMPUTER EDUCATION — INDIA —

ISO 9001 : 2000 CERTIFIED TRAINING CENTRE




மல்டிமீடியா, வீடியோ எடிடிங்

பயிற்சிகளுக்கு சிறப்புக் கட்டணச் சலுகை!

- 100% செயல்முறைப்பயிற்சி
- இலவச பாடநூல்கள்
- சர்வதேச தர சான்றிதழ்கள்
- தவணை முறை கட்டண வசதி
- மாணவர் விரும்பிய பயிற்சி நேரங்கள்
- அனுபவம் மிக்க விரிவுரையாளர்கள்

ASIAN COMPUTER EDUCATION

2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் T.P : 021-222 5677

கொடிகாமம் வீதி, நெல்லியடி T.P : 021-2262399

230,1ம் மாடி, கண்டி வீதி, சாவகச்சேரி T.P : 021-2270267

**நெஞ்சம் மகிழ அருள்வான் இணுவைக் கந்தன்**

தஞ்சமென்று உன்பதம் சரண் புகுந்தோர் - தினம்
நெஞ்சம் மகிழ அருள் புரியும் கந்தனே
வெஞ்சமரால் ஆணவமாகிய சூரர்குலம் வேரறுத்த
கஞ்சகத்தில் அவதரித்த சிவனுமை பாலனே

பஞ்சமின்றியேமை வாழ்விக்க வந்த வள்ளலே
விஞ்சும் அழகுடை இணுவைக் கந்தனே- உலகப் பெரு
மஞ்சத்தில் நீயமர்ந்து வருமழகை கண்டே
செந்தமிழ் கவியிலுனை போற்றி வாழ்த்திடவே - எம்
நெஞ்சம் மகிழ அருள் சிந்தும் கந்தா தருவாய்
தினம் உன் திருவருள்

*ஜெய் விருபாட்சன் சர்மா (கோவையூர் கவி)*

**தவறிவிட்டது**

சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம் தெற்கு, சுன்னாகம் எனும் முகவரியுடைய செல்வராசா சந்திரகுமார் என்பவரின் தே.அ.அ. [881222655 V] பேர்சுடன் சுன்னாகம், ஸ்ரேசன் வீதியில் 14/06 /2011அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியுடனோ அல்லது 0772536384 என்ற தொ.பே. இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளவும். (5040)

**நகைக் கடையின் தளபாடம் விற்பனைக்கு**

நகைக் கடையில் பாவித்த தளபாடங்கள் விற்பனைக்குண்டு.
விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.
T.P: 0771006961
2 G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(C7977)

**வேலைக்கு ஆள்கள் தேவை**

சுஜானாஸ் ரெக்ஸ்ரைல்ஸிற்கு வேலைக்கு ஆள்கள் தேவை. அனுபவமுள்ளோர்கள் மற்றும் பழக விரும்புவோர்களும் 18-24 வயதுக்குட்பட்ட ஆண்கள் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

சுஜானாஸ் ரெக்ஸ்ரைல்ஸ்
இல.24 A, மின்சார நிலைய வீதி,
நவீனசந்தை, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 5843
(5041)

## மரண அறிவித்தல்



### திருமதி செல்வராசா விமலாதேவி
(ராசாத்தி)

16/10, சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வராசா விமலாதேவி 18.06.2011 சனிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் - சிவக்கொழுந்து தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும் காலஞ்சென்ற செல்லத்துரை செல்வராசாவின் மனைவியும், நளினி, அருள்ராஜ், யுவனி ஆகியோரின் தாயும், சிவநாதன், டக்ஷினி, கணேசலிங்கம் ஆகியோரின் மாமியும், காலஞ்சென்ற கனகலிங்கம் மற்றும் சரோஜாதேவி, ஜெயராசலிங்கம், ஜெகதாம்பாள் சற்குணலிங்கம் ஆகியோரின் சகோதரியும் அபீஷன், ஹம்ஷாயினி, சரணாபவன், பிறமியா, அருஷன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (22.06.2011) புதன்கிழமை மு.ப 10.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையண் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

16/10, சீனியர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(5037) (53-25-45)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20 வருடங்களில் காஷ்மீரில் ஒரு லட்சம் மக்கள் தீவிரவாதிகளால் படுகொலை

காஷ்மீர், ஜூன்.21

ஜம்முகாஷ்மீர் மாநிலத்தில் கடந்த 20 ஆண்டுகளில் சுமார் ஒரு லட்சம் மக்கள் தீவிரவாதிகளால் கொல்லப் பட்டுள்ளதாகவும், மேலும் சுமார் 10 ஆயிரம் பேர் காணாமற் போயுள்ளதாக ஆய்வு ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

அந்த ஆய்வில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

காஷ்மீர் மாநிலம் தினந்தோறும் தீவிரவாத செயல்களினால் சிக்கித் திணறி வருகிறது. மாநில பொலிஸாரும், இந்திய ராணுவத்தினரும் இணைந்து தீவிரவாதிகளின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தினாலும் அவை புற்றுநோய் போல் மீண்டும் மீண்டும் துளிர்விடுகின்றன.

கடந்த 1990ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் 2011 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரையிலான காலகட்டங்களில் 43 ஆயிரத்து 460 பொதுமக்கள் தீவிரவாதிகளால் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் பாதுகாப்புப் படையினரால் சுமார் 3 ஆயிரத்து 642 பேர் பொதுமக்களும், 5 ஆயிரத்து 369 பொலிஸ்காரர்கள் தீவிரவாதிகளாலும், பாதுகாப்புப் படையினரால் சுமார் 21 ஆயிரத்து 323 வெளிநாட்டு தீவிரவாதிகள் மற்றும் மாநில தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடும் என்றும் தெரியவருகிறது. இதேவேளை பொதுமக்கள் அதிகளவில் கொல்லப்பட்டுள்ளனர் என்பதற்கு மாநில அரசு மறுப்புத் தெரிவித்துள்ளது. (வ)

# தி.மு.கவின் கூட்டணியை விட்டு காங்கிரஸ் விலகிவிடவேண்டும்

**இளங்கோவன் கருத்து**

சென்னை,ஜூன்.21

தி.மு.க கூட்டணியிலிருந்து காங்கிரஸ் விலகவேண்டும் என்பதே பெரும்பாலான காங்கிரஸ் தொண்டர்களின் விருப்பமாக உள்ளது என்று முன்னாள் மத்திய அமைச்சர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் தெரிவித்துள்ளார்.



இதுதொடர்பாக அவர் செய்தியாளர்களிடம் பேசுகையில்:

தி.மு.க கூட்டணியிலிருந்து காங்கிரஸ் உடனடியாக விலக வேண்டும் என்றே பெரும்பான்மையான தொண்டர்கள் நினைக்கின்றனர். வேறு கட்சிகளுடன் கூட்டணி என்று கட்சி மேலிடம் தெரிவிக்க வேண்டும். அவ்வாறு வேறு கட்சிகளுடன் கூட்டணி குறித்து மேலிடம் அறிவிக்கும் எந்த முடிவையும் ஏற்போம்.

தி.மு.க.விலிருந்து விலகி உள்ளூராட்சித் தேர்தலில் தனித்துப் போட்டியிட்டாலே காங்கிரஸ் பெரும்பான்மையான இடங்களைப் பெற்றுக்கொள்ள முடியும். விஜயகாந்த் ஆக்கபூர்வமான எதிர்க் கட்சித் தலைவராகச் செயற்பட வேண்டும் என்று மக்கள் எதிர்பார்க்கிறார்கள். எனவே மக்கள் நம்பிக்கைக்கு ஏற்ப விஜயகாந்த் செயற்பட வேண்டும்.

தமிழகத்தில் காங்கிரஸ் தலைவரை மாற்ற வேண்டும். கட்சி மேலிடம் யாரை நியமித்தாலும் நாம் ஏற்போம். கடந்த 2 மாதங்களில் தமிழக காங்கிரஸ் தலைவர் தங்கபாலு எடுத்த நடவடிக்கைகளுக்கு கட்சி மேலிடம் ஒப்புதல் அளிக்கவில்லை.

இதனால் அவர் நீக்கியதாக அறிவித்த நகர, ஒன்றிய, மாவட்ட நிர்வாகிகள் பதவியில் தொடர்ந்து பணியாற்ற முடியும்.- என்றார் அவர். (வ)

# மும்பைத் தாக்குதல் தீவிரவாதி தாவூத்தை இந்தியாவிடம் ஒப்படைக்கக் கோருவோம்

டில்லி, ஜூன்21



மும்பைத் தாக்குதலில் தொடர்புடைய தாவூத் இப்ராஹிமை இந்தியாவிடம் ஒப்படைக்க கோரி பாகிஸ்தானிடம் வலியுறுத்தப்படும் என்று எஸ்.எம். கிருஷ்ணா கூறியுள்ளார்.

மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.எம் கிருஷ்ணா நேற்று செய்தியாளர்களிடம் பேசுகையில்:

மும்பை தாக்குதல் தொடர்பான விசாரணையை பாகிஸ்தான் விரைந்து நடத்த வேண்டும் என்றார்.

இந்தியா-பாகிஸ்தான் இடையில் பயங்கரவாதம் ஒரு முக்கிய பிரச்சினையாக உள்ளது. இரு நாடுகள் இடையில் நடக்கவிருக்கும் பேச்சின் போது இந்தியாவின் முக்கிய கோரிக்கையான தாவூத் இப்ராகிமை ஒப்படைப்பது குறித்து வலியுறுத்தப்படும் - என்றார்.

ராணா நிலை குறித்தும் விவாதிப்போம். மும்பை தொடர்பான விசாரணையில் பாகிஸ்தான் தாமதம் காட்டுகிறது. விசாரணையை விரைந்து நடத்த வேண்டும். சூயஸ் கப்பல் கடத்தலில் பாகிஸ்தான் தலையீட்டிற்கு ஏற்கனவே இந்தியா தனது கண்டனம் தெரிவித்துள்ளது. (வ)

# அமெரிக்காவின் தேடப்படுவோர் பட்டியலில் இந்திய மருத்துவர்

இந்தியாவில் பிறந்த மருத்துவர் கௌதம் குப்தாவை அமெரிக்காவின் எப்.பி.ஐ தீவிரமாகத் தேடி வருகிறது. அவரைக் கைது செய்யுமாறு சர்வதேச பொலிஸையும் அமெரிக்கா உஷார் படுத்தியுள்ளது.

மருத்துவர் கௌதம் குப்தாவின் எடைக் குறைப்பு விளம்பரங்கள் மிகவும் பிரபலமானவை. அவர் கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக அமெரிக்க இன்சூரன்ஸ் நிறுவனங்களை 25 மில்லியன் டொலர் அளவுக்கு மோசடி செய்துள்ளதாக எப்.பி.ஐ குற்றம் சாட்டியுள்ளது.

புளூ கிராஸ், இல்லினாய்ஸ் புளூ ஷீல்ட் மற்றும் இல்லினாய்ஸ் மெடிகெய்ட் ஆகிய நிறுவனங்களில் அவர் போலியாக உரிமை கோரியதாக சிகாகோ டிரிபியூன் தெரிவிக்கிறது.

மோசடி செய்ததாக குப்தா மீது முறைப்பாடு வந்ததையடுத்து அவருடைய மருத்துவமனையின் முன்னாள், தற்போதைய ஊழியர்கள் மற்றும் நோயாளிகளிடம் எப்.பி.ஐ அதிகாரிகளும், இல்லினாய்ஸ் மாநில பொலிஸாரும் விசாரணை நடத்தினர்.

கௌதம் குப்தா தற்போது எங்கிருக்கிறார் என்று தெரியவில்லை என எப்.பி.ஐ செய்தித் தொடர்பாளர் ரோஸ் ரைஸ் தெரிவித்தார். குப்தாவின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச் சாட்டுகள் நிரூபிக்கப்பட்டால் அவருக்கு 35 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை கிடைக்கலாம் என சிகாகோ டிரிபியூன் தெரிவிக்கிறது.

குப்தா அமெரிக்காவில் இருந்து இந்தியாவுக்கு தப்பிச் சென்றிருக்கலாம் என ஸ்பிரிங்பீல்டு நீதிமன்றத்தில் அமெரிக்க பொலிஸார் தெரிவித்துள்ளனர். (வ)



திருச்சி, ஸ்ரீரங்கம் தொகுதி வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்க திருச்சி வந்த தமிழக முதல்வர் ஜெயலலிதா, ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோவிலில் சுவாமி தரிசனம் செய்தார். அப்போது, அங்கு திரண்டு நின்ற பக்தர்களை பார்த்து வணக்கம் தெரிவித்தார்.

# இந்தியா - பாகிஸ்தான் வெளியுறவுச் செயலர்கள் இஸ்லாமாபாத்தில் பேச்சு

இந்தியா-பாகிஸ்தான் வெளியுறவுச் செயலாளர்கள் மட்டத்திலான பேச்சு23 ஆம் 24ஆம் திகதிகளில் பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் இடம்பெறவுள்ளது.


இருநாடுகளுக்கும் இடையிலான இந்தப் பேச்சில் இந்திய வெளியுறவு செயலாளர் நிருபமாராவும், பாகிஸ்தான் வெளியுறவுச் செயலாளர் சல்மான் பஷிரும் பங்கேற்கவுள்ளனர்.

மேற்படி பேச்சின்போது பாகிஸ்தானில் நடைபெற்று வரும் மும்பை தாக்குதல் வழக்கை திருப்திகரமாக நிறைவு செய்யுமாறு இந்தியா கேட்கவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

மேலும் அணு ஆயுத விவகாரம் தொடர்பான நல்லெண்ண நடவடிக்கைகள், அமைதி, பாதுகாப்பு, காஷ்மீர் பிரச்சினை ஆகியவையும் பேச்சுக்களின்போது இடம்பெறவுள்ளன.

# 50 ஆண்டு சாதனையை 5 வருடங்களில் நிறைவேற்றியவர் கருணாநிதி - ஸ்டாலின்

சென்னை,ஜூன்21



ஐம்பது ஆண்டுகளில் செய்ய வேண்டிய சாதனையை தி.மு.க தலைவர் கருணாநிதி 5 ஆண்டுகளில் செய்துள்ளதாக முன்னாள் துணை முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கூறுகையில்:

சட்டசபையில் தி.மு.க இல்லா விட்டாலும், மக்கள் மன்றத்தில் தி.மு.க போராடும். ஆனால் ஆட்சிக்கு வந்த ஒரே மாதத்தில் அ.தி.மு.க அரசு அதிருப்தியை பெற்றுக்கொண்டுள்ளது.

50 ஆண்டுகளில் செய்ய வேண்டிய சாதனையை தி.மு.க தலைவர் கருணாநிதி 5 ஆண்டுகளில் செய்துள்ளார். அந்த வகையில் மக்கள் வரிப்பணத்தில் கட்டப்பட்ட தலைமைச் செயலகத்தை அ.தி.மு.க அரசு மாற்றியுள்ளது.

சமச்சீர் கல்வித் திட்டத்தில் ஆறாம் வகுப்புப் பாடத்தில் பெரும்பாலான பகுதிகள் நீக்கப்பட்டுள்ளன. நிபுணர் குழு எதுவும் அமைக்காமல் அரசு தன்னிச்சையாகச் செயற்படுகிறது.

தி.மு.க ஆட்சியில் கொண்டு வரப்பட்ட ஒரே காரணத்திற்காக சமச்சீர் கல்வி ரத்து செய்யப்பட்டுள்ளது என்றார்.

# இந்தியாவில் விரைவில் புல்லட் ரயில்கள் அறிமுகம்

இந்தியால் புல்லட் ரயில் சேவையை ஆரம்பிக்க ரயில்வேதுறை திட்டமிட்டுள்ளது. இந்தத் திட்டத்துக்குக்காக தேசிய அதி விரைவு ரயில்வே ஆணையம் ஒன்று ஏற்படுத்தப்பட உள்ளது. அதிவிரைவு ரயில் சேவையை இந்த ஆணையம் கண்காணிக்கும் என்று கூறப்படுகிறது.

இதேவேளை பிரான்ஸ் நாட்டில் புல்லட் ரயில்கள் இயக்கப்பட்டு சேவையில் ஈடுபடுகின்றன. இவை மணித்தியாலத்துக்கு 280 - 300 கிலோ மீற்றர் வேகத்தில் இயக்கப்படுகின்றன.

புல்லட் ரயில்களை இயக்க சில வழித்தடங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. அந்த வழித் தடங்களில் புல்லட் ரயில் இயக்கப்படுவதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து ஆலோசனை வழங்க உலகளாவிய ரீதியில் கேள்விக்கு விடப்பட இருக்கின்றன.

இதுதொடர்பாக ரயில்வே துறையின் மூத்த அதிகாரி ஒருவர் கூறுகையில்:

புல்லட் ரயில் திட்டங்களின் சாத்தியக் கூறுகளை ஆய்வு செய்யவும், உலகளாவிய ரீதியில் கேள்வி கோரப்பட இருக்கிறது. அதற்கான பணிகள் நடை பெற்று வருகின்றன என்றார்.

பிரான்ஸ் நாட்டில் இயக்கப் படும் புல்லட் ரயில் திட்டத் துக்கு டி.ஜி.வி என்று பெயர் வெளியிடப்பட்டுள்ளது. அது போல இந்தியாவில் செயற்படுத்தப்பட உள்ள புல்லட் ரயில் திட்டத்துக்கு டி.ஜி.எஸ் என்று பெயரிடப்படும் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் இந்தத் திட்டத்துக்கான பெயர் இன்னும் தெரிவுசெய்யப்படவில்லை என்று அதிகாரிகள் கூறினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொமர்ஷல் வங்கியின் பொற்கடன் சேவை

## குறைந்த வட்டியில் கூடிய பணம்

கொமர்ஷல் வங்கி நாடு முழுவதும் உள்ள அதன் கிளை வலைப்பின்னல்கள் ஊடாக பொற்கடன் சேவையைப் பரவலாக முன்னெடுத்துச் செல்ல உள்ளதாக அறிவித்துள்ளது. நாட்டின் மிகவும் ஸ்திரமான ஒரு நிதி நிறுவனத்தின் மூலம் மக்கள் தங்களுக்குத் தேவையான நிதியைத் திரட்டிக் கொள்ளத் தம்மிடம் உள்ள தங்கத்தைப் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய ஓர் அரிய சந்தர்பப்பத்தை வழங்குவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

இதற்குத் தேவையான அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை வங்கி ஏற்கனவே அதன் 108 கிளைகளுக்கு வழங்கியுள்ளது.

இங்கு பொற் கடன் வசதிகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்கக்கூடிய வகையில் பயிற்றுவிக்கப்பட்ட ஊழியர்கள் கடமைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். இவ்வாண்டு ஆகஸ்ட் மாதம் அளவில் கொமர்ஷல் வங்கி அதன் சுப்பர் மார்க்கெட் வங்கிச் சேவை நிலையங்களைத் தவிர்த்து நாடு முழுவதும் உள்ள ஏனைய எல்லாக் கிளைகள் ஊடாகவும் இந்தச் சேவையை விஸ்தரிக்கத் திட்டமிட்டுள்ளது.

இந்தப் பொற் கடன் திட்டத்தின் மூலம் மக்கள் தங்களிடமுள்ள தங்கத்தின் பெறுமதியில் 80 வீதத்தைக் கடனாகப் பெற்றுக் கொள்ள முடியும். தங்க நகைகள், தங்க பிஸ்கட்டுக்கள் மற்றும் தங்க பார்கள் என எதை வேண்டுமானாலும் மக்கள் இதற்குப் பயன்படுத்தலாம். இதற்கான வட்டி வீதம் சாதாரண வட்டி வீதத்திலும் பார்க்க மிகக் குறைவாக வருடாந்தம் 14 வீதமாக இருக்கும். (மாதம் 16 வீதமாகும்) என்று கொமர்ஷல் வங்கியின் (தனியார் வங்கிப் பிரிவின்) பொது முகாமையாளர் விமல் பெர்னாண்டோ கூறினார்.

பொற்கடன் சேவை வழங்கும் கிளைகளில் வாடிக்கையாளர்களின் இரகசியங்களைப் பேணும் வகையில் பிரத்தியேகமான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அத்தோடு தங்கத்தின் தரம், எடை என்பனவற்றைப் பரி சோதிப்பதற்கு மிக நவீனமான உபகரணங்களும் உள்ளன என்று பெர்னாண்டோ மேலும் விளக்கமளித்தார். நகைத் துறையில் நன்கு பயிற்றுவிக்கப்பட்ட ஊழியர்கள் இங்கு வாடிக்கையாளர்களுக்கு சேவைகளை வழங்கவும் ஆலோசனைகளை வழங்கவும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (த)

# 'ஹொல்சிம்' அறிமுக நிகழ்வு



ஹொல்சிம்' நிறுவனம் தனது முதல்தர உற்பத்தியான சிமெந்தை யாழ்ப்பாணத்தில் அறிமுகம் செய்யும் அறிமுக விழா கடந்த வெள்ளிக்கிழமை ஆவரங்கால் மத்தி சனசமூக நிலையத்தில் நடைபெற்றது.

இந்த நிறுவனத்தின் வடமாகாண பொறியியலாளர் எஸ்.சேரன் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் சிமெந்து உற்பத்தி, பயன்படுத்தப்படும் மூலப்பொருள், சிமெந்தின் தரம், பயன்படுத்துவதால் ஏற்படும் அனுகூலம் ஆகிய விடயங்கள் பற்றிக் கட்டுமானப் பணியாளர்களுக்கு விளக்கப்பட்டது.

'ஹொல்சிம்' நிறுவனமானது உலகத்தில் முதல் தரத்திலுள்ள சிமெந்து உற்பத்தி நிறுவனமென்பதுடன் அது இலங்கையிலும் புத்தளம், காலி போன்ற இடங்களில் சிமெந்து உற்பத்தித் தொழிற்சாலைகளை பல வருடங்களாக நிர்வகிப்பதன் மூலம் சிமெந்து உற்பத்தியில் கால் பதித்துள்ளது. இந்த நிறுவனமானது இரு வகையான தரங் களில் சிமெந்தை உற்பத்தி செய்து சந்தைப்படுத்துகிறது. இந்த இரு வகையான சிமெந்தும் இலங்கை தரநிர்ணய சபையின் அங்கீகாரம் பெற்றுள்ளதுடன் இதற்கு மேலாகச் சென்று ஐரோப்பிய தரச் சான்றிதழையும் பெற்றுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (த-72)



நேஷன் பொப்புலர் ரவல்ஸ் அன்ட் ரூவர்ஸ் நிறுவனத்தின் யாழ். கிளை அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. ஓய்வுபெற்ற நீதிபதிகளான மு. திருநாவுக்கரசு, பி.சுப்பிரமணியம் ஆகியோர் இணைந்து நாடாவைவெட்டிக் கிளையைத் திறந்து வைத்தனர். (த-313)



அபிருத்திக் கடன் திட்டத்தின் கீழ் சங்கானை வர்த்தக சங்கத்தின் அனுசரணையுடன் சங்கானை இலங்கை வங்கிக் கிளையினரால் பயனாளர் ஒருவருக்கு ஒரு இலட்சம் ரூபாவை வழங்கியுள்ளது. இதற்கான காசோலையை வங்கியின் பொறுப்பதிகாரி வழங்குகிறார். அருகில் மானிப்பாய் இலங்கை வங்கிக் கிளை முகாமையாளர் க.இலட்சுமண சர்மாவும் ஊழியர்களும் உள்ளனர். (த-100)

# Ford நிறுவனத்துக்கு இலங்கையில் உத்தியோகபூர்வ விநியோகஸ்தர்

இலங்கையில் பிரத்தியேகமான Ford விநியோகஸ்தராக Future Automobiles நிறுவனத்தை Ford அறிவித்துள்ளது. பிராந்தியத்தில் வர்த்தக ரீதியானதும் நிதி ரீதியானதுமான தனது ஈடுபாட்டை மீளவும் உறுதிசெய்யும் விதமாக ஐந்து முன்னணி வாகன மொடல்களை அறி முகப்படுத்தும் வேளையில் இந்த அறிவிப்பும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

விருதுகள் வென்ற மொடல்களான எவரெஸ்ட் (Everest), /வோக்கஸ் (Focus) றேஞ்ஞர் (Ranger) மற்றும் /பிகோ (Figo) போன்ற வாகன மொடல்கள் இலங்கை வாடிக்கையாளர்களின் வளர்ந்து வரும் பல்வேறுபட்ட தேவைகளையும் பூர்த்தி செய்யக்கூடியதாகவிருக்கும்.

''இலங்கையின் Ford வாகனங் களின் விற்பனையில் (Future Automobiles) உடன் கூட்டிணைவதில் நாம் மகிழ்ச்சியடைகிறோம்.

இந்த கூட்டுச் சேர்தலானது இலங்கை வாடிக்கையாளர்களுக்குத் தரமான சேவையை வழங்குவதுடன் மிகச் சிறந்த வாகனங்களையும் அறிமுகப்ப டுத்தக் கூடியதாக இருக்கும்.'' என்று Ford நிறுவனத்தின் ஆசிய பசுபிக் பிராந்திய ஏற்றுமதி நடவடிக்கை களின் பிராந்திய முகாமையாளரான டேவிட் வெஸ்டர்மன் தெரிவித்தார்.


''தென்கிழக்காசிய சந்தையில் Ford அண்மையில் அடைந்த வளர்ச்சிக்கு பிரதான பங்களிப்பை இலங்கை வழங்கி யுள்ளதாக Ford இனங்கண்டுள்ளது. இன்று இடம்பெறும் மாபெரும் ஆரம்பமானது இலங்கையின் அடுத்தக்கட்ட அபிவிருத்திக்கு Ford வழங்கும் பங்க ளிப்பை எடுத்துக்காட்டுகின்றது.

மிகவும் நவீனத்துவம் பொருந்திய உலகத் தரம் வாய்ந்த வாகனங்களை இலங்கைச் சந்தையில் அறிமுகப்படுத் துவது எமது அடுத்த இலக்காகும்'' என்று தொடர்ந்தார் வெஸ்டர்மன்.

''Ford Motor கம்பனிக்கும், இலங் கைக்கும் நாம் ஒரு தலை சிறந்த வாகன விநியோகஸ்தர்கள் என்பதை எடுத்துக் காட்ட வேண்டும். விற்பனை சேவை மற்றும் வாடிக்கையாளர் திருப்தி என்ற விடயங்களில் அதியுயர் மட்டத்தை அடை வதை நாம் குறிக்கோளாக கொண்டுள் ளோம்'' என்று Softlogi Holdings இன் முகாமைத்துவப் பணிப்பாளரான அசோக் பத்திரகே கூறுகிறார்.

# உடுவில் மகளிர் கல்லூரியில் தொழிநுட்பக் கூடம்

30 வருடகால போரின் கோரப் பிடியிலிருந்து விடுபட்டு முன்னேறிக் கொண்டிக்கும் யாழ்ப்பாணத்துக்கு வட கிழக்கில் 15 மைல் தூரத்தில் அமைந்திருப்பதான உடுவில் கிராமம் விரைவில் கணக்கியல் மற்றும் டேட்டா என்ட்றி சேவைகளை கொழும்பு நிறுவங்களின் மூலம் வழங்கவிருக்கின்றது.



இதற்குக் காரணமாக அமைந்திருப்பது உடுவில் மகளிர் கல்லூரியுடன் இணைந்து பல நிறுவனங்கள் மேற்கொண்டுள்ள முயற்சிகள் என்று கூறலாம். எப்.ஏ.ஆர்.ஓ (பவுன்டேஷன் போர் எட்வான்சிங் ரூரல் ஒப்போர்ச்சுனிட்டி) ஐ.சி.ரி.ஓ (இன்போர்மேஷன் அன்ட் கொமுயுனிகேஷன் ரெக்னோலோஜி ஏஜென்சி) ஹேலீஸ் குரூப் ஆகிய நிறுவனங் கள் இந்த கூட்டமைப்பில் இணைந்துள்ளன.

நாட்டில் 191 வருட கால கல்விச் சேவையில் முன்னணி வகிக்கும் தனியார் கல்வி நிறுவனமாக உடுவில் மகளிர் கல்லூரி வளாகத்துக்குள் இந்த சேவை களுக்கான வசதிகள் அமைந்திருக்கும். இந்தப் பணிகளை மேற்கொள்வதற்காக தெரிவுசெய்யப்படும் உடுவில் பகுதி இளைஞர்களிடம் செயற்பாட்டு உரிமைகளும் பொறுப்பும் கையளிக் கப்படும். வடமத்திய மாகாணத்தில் மகா வில்லச்சிய மற்றும் தெற்கில் கீனிகம ஆகிய கிராமங்களில் எப்.ஏ.ஆர்.ஓ நிறுனம் ஏனைய சக நிறுவனங்களுடன் இணைந்து நிறுவியுள்ள மாதிரியில் இந்த நிலையம் இயங்கவிருக்கின்றது.

… சேவை நிலையம் என்ற … இது ஆரம்பத்தில் 20 ஆசனங்களைக் கொண்டிருக்கும். தகவல் தொழில்நுட்பம், நவீன உட்கட்டுமான வசதிகள் மற்றும் தேவையான வசதிகளைக் கொண்டிருக்கும். வசதிகளை ஆயத்தப்படுத்துவதும் அலுவலர்களை நியமித்தல் மற்றும் அவர்களுக்குப் பயிற்சி அளித்தல் பணிகள் இந்த மாதமே (ஜூன்) ஆரம்பமாகவிருக்கின்றன. வருட முடிவுக்குள் முழுமையாக இயங்கத்தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. யாழ்ப்பாணம் உடுவில் பகுதியில் பொருளாதார வளர்ச்சிக்கு இந்த நிலையம் குறிப்பிடக்கூடிய மைல் கல்லாக அமையும் எனலாம். தொழில்துறைகளில் இளைஞர்கள் ஈடுபட்டுத் தமது சொந்த தொழில்களைத் தாமே இயக்கும் அனுபவத்தை இளைஞர்கள் பெறக்கூடிய வாய்ப்பைஇது வழங்கப்போகின்றது. புதிதாக அமைக்கப்பட்டிருக்கும் ப.வி.ஒ. சேவை நிலையத்தின் தோற்றத்தைப் படத்தில் காணலாம். (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தான் இராணுவத்தின் தில்லுமுல்லுகள் நான்கு சம்பவங்கள் மூலம் நிரூபணம்

## உஷார் நிலையில் அமெரிக்கா

வாஷிங்டன், ஜூன் 21

அல்குவைதா, தலிபான்கள் ஆகியோருக்கு எதிரான போரில் பாகிஸ்தானை முக்கிய கூட்டாளியாக அமெரிக்கா சேர்த்துக் கொண்டாலும் சமயம் பார்த்து உள்ளடி வேலையைத் தொடர்ந்து செய்து வருகிறது பாகிஸ்தான்.

இந்தச் சந்தேகம் அமெரிக்காவுக்கு இருந்தாலும் சமீபத்தில் 4 சம்பவங்களில் அதை சோதித்துப் பார்த்ததில் பாகிஸ்தான் நம்பகமான கூட்டாளி அல்ல என்பது நிரூபணமாகி விட்டது.

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்துக்கு அருகிலுள்ள அபோதாபாத் என்ற இடத்தில் ஒசாமா பின்லேடன் பதுங்கி வாழ்ந்து வந்தார். அவரை அமெரிக்காவின் சி.ஐ.ஏ. உதவியுடன் அதிரடிப்படையினர் சுட்டுக் கொன்றனர்.

பின்லேடன் உங்கள் நாட்டில்தான் பதுங்கி இருக்கிறார் என்று நாங்கள் பலமுறை கூறியபோது இல்லவே இல்லை என்று சாதித்தீர்களே இப்போது என்ன கூறுகிறீர்கள்? என்று அமெரிக்கா கேட்டபோது, எங்களுக்கே தெரியாமல் எப்படி வந்தார் என்று நாங்களே எங்களைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம் என்று பாகிஸ்தான் ராணுவத் தலைமையும் ஐ.எஸ்.ஐ. தலைமையும் பதில் அளித்தன. அமெரிக்கத் தலைமையும் அதை அப்படியே நம்பியது போல நடித்தது.

ஆனால் சமீபத்தில் பாகிஸ்தானின் வடமேற்கு மாகாணத்தில் பழங்குடிகள் பகுதியில் ஹக்கானி என்ற தீவிரவாத அமைப்பைச் சேர்ந்தவர்கள் வெடிகுண்டுகளைத் தயாரிக்கிறார்கள் என்ற தகவல் சி.ஐ.ஏ.வுக்குக் கிடைத்தது. இதை பாகிஸ்தான் ராணுவத்திடம் சொன்னால் என்ன நடக்கிறது என்று வேவுபார்க்க முடிவு செய்தது சி.ஐ.ஏ.

பாகிஸ்தான் ராணுவத்திடம் இந்த ரகசியத் தகவல் கூறப்பட்டதும், தாங்கள் ஏற்கெனவே கண்காணித்து வந்த ஹக்கானி குழுவினரின் முகாம்களை அமெரிக்க உளவுப்படை மேலும் தீவிரமாகக் கண்காணித்தது.

சில மணி நேரத்துக்கெல்லாம் ஹக்கானிகள் தங்களுடைய பொருள்களுடன் அந்த இடத்தை விட்டு, அங்கு தீவிரவாதிகள் தங்கியதற்கோ வெடிகுண்டுகளைத் தயார் செய்ததற்கோ தடயமே இல்லாமல் புறப்பட்டுப் போனார்கள். இதை வானில் சுற்றும் செயற்கைக் கோள் மூலமும் ஆள் இல்லாத விமானம் மூலமும் சி.ஐ.ஏ. கண்காணித்தது. பாகிஸ்தான் ராணுவம்தான் இப்படி எல்லா சந்தர்ப்பங்களிலும் தீவிரவாதிகளுக்கு முன் கூட்டியே எச்சரிக்கை செய்து காப்பாற்றுகிறது என்பது நிரூபணமாகிவிட்டது.

பழங்குடியினரின் பகுதியில் நீங்கள் புகுந்து தாக்குதல் நடத்திவிட்டால் அதன்பின் அவர்கள் கோபம் எல்லாம் எங்கள் மீது திரும்பிவிடும், எனவே தாக்குதல் நடத்துவதற்கு முன்னால் பழங்குடிகளின் தலைமைகளுக்கு நாங்கள் தகவல் கொடுத்தால் அப்பாவிகளை அவர்கள் வெளியேற்றி விடுவார்கள் என்றே பாகிஸ்தான் ராணுவம் கூறிவந்தது. ஆனால் அது உண்மையல்ல என்பது இப்போது தெரிந்துவிட்டது.

என்ன தெரிந்து என்ன பயன், பாகிஸ்தானைவிட்டால் அமெரிக்காவுக்குதீவிரவாத எதிர்ப்புக்கு நல்லதொரு முஸ்லிம் நாடு, ஆசிய நாடு கிடைக்கவில்லை. எனவே அவர்களோடு சேர்ந்துதான் தாக்க வேண்டியிருக்கிறது. இனி முக்கிய எதிரிகள் என்றால் பாகிஸ்தான் ராணுவத்திடம் சொல்லாமலேயே தாக்குவதுதான் சரியாக இருக்கும் என்ற முடிவுக்கு அமெரிக்க ராணுவத் தலைமை வந்திருக்கிறது.

## ஒபாமாவின் பிரசாரம் ஆரம்பம்

வாஷிங்டன், ஜூன் 21

அமெரிக்க அதிபர் தேர்தலில் மீண்டும் போட்டியிடும் பராக் ஒபாமா, பேஸ்புக், டுவிட்டர் இணையத்தளம் மூலம் பிரசாரத்தை ஆரம்பித்துள்ளார்.

அமெரிக்க அதிபராக கடந்த 2008 ஆம் ஆண்டு பராக் ஒபாமா தேர்ந்தெடுக்கப்பட்டார். அடுத்த ஆண்டு (2012) அதிபர் தேர்தல் நடைபெற உள்ளது. இந்தத் தேர்தலில் மீண்டும் போட்டியிட பராக் ஒபாமா முடிவு செய்துள்ளார்.


இந்த தேர்தலில் கடந்த 2008 ஆம் ஆண்டு கிடைத்த வெற்றியை போல் மீண்டும் வெற்றி பெறத் தனது பிரசாரத்தை சமூக இணையத்தளங்களான பேஸ்புக், டுவிட்டர் மூலம் ஆரம்பித்துள்ளார். டுவிட்டர் இணையத்தளத்தில் அவர் இனிமேல் தொடர்ந்து கருத்துக்களை கூறப்போவதாகத் தெரிவித்தார்.

இதேபோல் பேஸ்புக்கிலும் கூறியுள்ளார். இதனை 23000 பேர் வரவேற்றுள்ளனர். பேஸ்புக்கில் 4,000 பேர் தங்களது கருத்தைக் கூறியுள்ளனர்.

## மழையால் சீனாவில் 50 லட்சம் பேர் பாதிப்பு

சீனாவில் தொடர்மழையால் ஏற்பட்ட வெள்ளத்தினால் அதன் கிழக்குப் பகுதி முழுவதிலும் 50 லட்சம் பேர் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனைத் தொடர்ந்து அங்கு உணவுப்பொருள்களின் விலை கடுமையாக உயர்த்துள்ளதாக அங்கு வெளியாகும் செய்திகள் தெரிவிக்கின்றன. இதில் ஹூபெய் மற்றும் ஷெஜியாங் ஆகிய பகுதிகள் வெள்ளத்தால் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. மேலும் 7 ஆயிரம் வீடுகள் தரைமட்டமானதால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீட்டுச் செலவாக 930 மில்லியன் டொலர் தேவைப்படும் எனக் கருதப்படுகிறது.

சந்தோசம்...



மியான்மர் நாட்டின் முக்கிய எதிர்க்கட்சித் தலைவரும், நோபல் பரிசு பெற்றவருமான ஆங்சான் சூகி தனது 66 ஆவது பிறந்த நாளைத் தலைநகர் யோங்கோங் நகரில் தனது நண்பர்கள், உறவினர்களுடன் கேக் வெட்டிக் கொண்டாடினார்.

## பாக். கப்பலால் காப்பாற்றப்பட்ட சூயஸ் கப்பல் பணியாளர்கள்!

இஸ்லாமாபாத், ஜூன் 21

சோமாலிய கடற்கொள்ளையரால் பிடிக்கப்பட்டு, பின் விடுவிக்கப்பட்ட எம்.வி.சூயஸ் சரக்குக் கப்பல், ஓமன் நாட்டுக்கு வரும் வழியில் கடற்புயலில் சிக்கியதால், அதில் இருந்த ஆறு இந்தியர்கள் உள்ளிட்ட 22 கப்பல் பணியாளர்கள், பாகிஸ்தான் கப்பலுக்கு மாற்றப்பட்டு காப்பாற்றப்பட்டனர்.

எகிப்திய கப்பல் நிறுவனத்துக்குச் சொந்தமான எம்.வி. சூயஸ் சரக்குக் கப்பல், ஏடன் வளைகுடாவில் சென்று கொண்டிருந்த போது, கடந்த 2010 ஓகஸ்ட் 2 ஆம் திகதி சோமாலிய கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்டது. இதில், ஆறு இந்தியர்கள், 11 எகிப்தியர்கள், நான்கு பாகிஸ்தானியர்கள், இலங்கையைச் சேர்ந்த ஒருவர் என, மொத்தம் 22 பணியாளர்கள் இருந்தனர். இந்தியர்களில், இருவர் அரியானாவைச் சேர்ந்தவர்கள். இமாச்சலப் பிரதேசம் மற்றும் தமிழகம், காஷ்மீர் மற்றும் மும்பையைச் சேர்ந்தவர்கள் தலா ஒருவர்.

கப்பலை மீட்க, எகிப்திய நிறுவனம், ஒன்பது கோடி ரூபாவை கடற்கொள்ளையர்களிடம் அளித்தது.

இதையடுத்து, கப்பலை சமீபத்தில் கடற்கொள்ளையர்கள் விடுவித்தனர். விடுவிக்கப்பட்ட கப்பல், ஓமன் நாட்டின் சலாலா துறைமுகத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த போது, அதன் எரிபொருள் முற்றிலும் தீர்ந்து விட்டது.

அதேநேரம், கடலில் வீசிய சூறாவளியில் கப்பல் சிக்கிக் கொண்டது. கப்பல் கப்டன், பாகிஸ்தான் கடற்படைக்கு அளித்த தகவலின்படி, பாகிஸ்தானின் ப.என்.எஸ்.பாபர் கப்பலுக்கு கப்டன் உள்ளிட்ட 22 பணியாளர்களும் பத்திரமாக மாற்றப்பட்டனர்.

விரைவில் அவர்கள், பாகிஸ்தானின் கராச்சி அல்லது குவெட்டா துறை முகத்தை அடைவர் என்று பாகிஸ்தான் கடற்படை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்நிலையில், சூயஸ் கப்பலில் உள்ள ஆறு இந்தியர்கள் தவிர, இன்னும் 39 இந்தியர்கள், சோமாலிய கடற்கொள்ளையர்களிடம் சிக்கித் தவிக்கின்றனர். அவர்களை விரைவில் மீட்க, இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என, கோரிக்கைகள் எழுந்துள்ளன.

## ஒசாமா விசாரணைக்கு புதிய குழு நியமனம்

பாகிஸ்தானில், ஒசாமா பின்லேடன் கொல்லப்பட்டது குறித்து விசாரிக்க, ஏற்கனவே அமைக்கப்பட்ட குழு செயற்படுவதற்கு முன்பே, பல்வேறு சர்ச்சைகளுக்கு உள்ளானதால், புதிய குழு விரைவில் அமைக்கப்படும் என, அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

பின்லேடன், பாகிஸ்தானின் அபோதபாத் நகரில் பதுங்கியிருந்தது எப்படி, அவரைப் பற்றிய தகவல் எப்படி அமெரிக்காவுக்குக் கிடைத்தது, பாகிஸ்தான் அரசிடம் தெரிவிக்காமல் ஒசாமாவை அமெரிக்கா கொன்றது குறித்து தீர விசாரணைக்கு உயர் நீமன்ற நீதிபதி தலைமையில் ஐந்து பேர் கொண்ட விசாரணைக் குழுவை, பிரதமர் யூசுப் ரசா கிலானி சமீபத்தில் நியமித்தார்.

ஆனால், அக்குழுத் தலைவரும், இன்னொரு உறுப்பினரான உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதியும், தங்களிடம் இதுகுறித்து முறையாக கலந்து ஆலோசிக்காமல், தங்கள் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டதாகக் குற்றம்சாட்டினர். விசாரணைக் குழு நியமிக்கப்பட்டு செயற்படும் முன்பே சர்ச்சையில் சிக்கியதால், புதிய குழு விரைவில் அமைக்கப்படும் என, பாகிஸ்தான் சட்டத்துறை அமைச்சர் மவுலா பக்ஷ் சாண்டியோ, நேற்றுமுன் தினம் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

## மியான்மர் தலைவி ஆங்சான் சூகி 66 ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடினார்

யாங்கூன், ஜூன் 21

ஜனநாயக உரிமைகளுக்காகப் போராடும் உலக மக்களுக்கெல்லாம் இன்னமும் முன்மாதிரியாகத் திகழும் மியான்மர் நாட்டுத் தன்னிகரில்லாத் தலைவி ஆங்சான் சூகி தன்னுடைய 66 ஆவது பிறந்த நாளை ஞாயிற்றுக்கிழமை கொண்டாடினார்.

மியான்மர் ராணுவ அரசால் எப்போது பார்த்தாலும் சிறையிலும் வீட்டுச் சிறையிலும் அடைக்கப்பட்டு வந்த இந்தச் சிறைப் பறவை இந்த ஆண்டு தான் சுதந்திரமாக நடமாட அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

ஆயிரக்கணக்கான மியான்மர் மக்களையே தன்னுடைய குழந்தைகளாகப் பாவித்து அவர்களுடைய ஜனநாயக உரிமைகளுக்காக இடைவிடாமல் போராடியவர்.

பௌத்த பிக்குகளுக்கு வீட்டிலேயே விருந்து படைக்கிறார். பிறகு கட்சித் தலைமை அலுவலகத்தில் நிர்வாகிகள், தொண்டர்களின் வாழ்த்துகளை நேரில் பெற்றார். நெருங்கிய உறவினர்கள், நண்பர்களுக்கு தோட்டத்தில் எளிமையான விருந்து அளித்து மகிழ்ந்தார்.

உலக வரலாற்றில் நெல்சன் மன்டேலாவுக்கு அடுத்தபடியாக அடிக்கடி கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படும் ஒரே தலைவி ஆங்சான் சூகி என்றால் மிகையாகாது.

1962 ஆம் ஆண்டு முதல் மியான்மரில் ராணுவ ஆட்சிதான் நடக்கிறது. இந்த ஆட்சி எப்போது முடிவுக்கு வரும் என்று தெரியாது.

இந்த முறை நடந்த நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் ஆங்சான் சூகியின் கட்சி போட்டியிடவில்லை. அதனால் ஆட்சியாளர்கள் தேர்தல் முடிவுக்குப் பிறகு அவரை விடுதலை செய்துவிட்டனர்.

இந்த நிலையில் நாடு முழுக்க சுற்றுப்பயணம் செய்து தன்னுடைய கோரிக்கைகளுக்கு மக்களிடம் ஆதரவைத் திரட்ட ஆங்சான் சூகியி தீர்மானித்திருக்கிறார்.

ஆனால் ராணுவ ஆட்சியாளர்கள் அவரை அப்படி வெளியே போகவிடுவார்களா அல்லது மீண்டும் கைது செய்து வீட்டுச் சிறையில் அடைத்துவிடுவார்களா என்பது போகப்போகத் தான் தெரியும்.

அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா கேட்டுக்கொண்டார் என்பதற்காகவே அவரை இப்போது விடுதலை செய்திருக்கிறார்கள் என்று தலைநகர் வட்டாரங்கள் கூறுகின்றன. இது உண்மையாகவும் இருக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 102 புள்ளிகளை அள்ளி தெல்லிப்பழை சம்பியன்

யாழ்ப்பாணம், ஜூன் 21

யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையே நடைபெற்ற 2011 ஆம் ஆண்டுக்கான மெய்வன்மைப் போட்டியில் தெல்லிப்பழைப் பிரதேச செயலக அணி 102 புள்ளிகளைப்பெற்று மாவட்ட சம்பியனானது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இந்தப் போட்டிகள் யாழ். மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி திருமதி ஜே.எவ்.எ. ரூபசிங்கம் தலைமையில் நடைபெற்றன. இந்தப்போட்டிக்குப் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் இமெல்டா சுகுமார் கலந்து கொண்டார்.



இந்தப் போட்டியில் தெல்லிப்பழை பிரதேச செயலகம் 102 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தையும், நல்லூர் பிரதேச செயலகம் 51 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும், யாழ்ப்பாண பிரதேச செயலகம் 41 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தையும், உடுவில் பிரதேச செயலகம் 37 புள்ளிகளைப் பெற்று நான்காம் இடத்தையும், பருத்தித்துறை பிரதேச செயலகம் 27 புள்ளிகளைப்பெற்று ஐந்தாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன.

கரவெட்டிப் பிரதேச செயலகம் 24 புள்ளிகளைப்பெற்று ஆறாவது இடத்தையும், சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் 21 புள்ளிகளைப்பெற்று ஏழாவது இடத்தையும், கோப்பாய் பிரதேச செயலகம், சங்கானை பிரதேச செயலகம் ஆகியன 17 புள்ளிகளைப் பெற்று எட்டாவது இடத்தையும், சாவகச்சேரி பிரதேச செயலகம், மருதங்கேணி பிரதேச செயலகம் ஆகியன 10 புள்ளிகளைப் பெற்று ஒன்பதாவது இடத்தையும் பெற்றுள்ளன.

(த-23-86)

# றஜீகரன் புதிய சாதனை



யாழ்ப்பாணம், ஜூன் 21

யாழ். மாவட்ட பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையே நடைபெற்ற 2011ஆம் ஆண்டுக்கான மெய்வன்மைப் போட்டியில் ஆண்களுக்கான 1500 மீற்றர் ஓட்டப் போட்டியில் புதிய சாதனை நிலைநாட்டப்பட்டது.

மருதங்கேணியைச் சேர்ந்த ஆர்.றஜீகரன் இந்தச் சாதனையைப் படைத்தார்.

யாழ்.மாவட்டப் பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையில் 1975 ஆம் ஆண்டு இடம்பெற்ற மெய்வன்மைப் போட்டியில் ஆண்களுக்கான 1500 மீற்றர் தூரத்தை சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த இ.திருநாவுக்கரசு 4:20:2 என்ற நேரத்தில் ஓடியமையே இதுவரை சாதனையாக இருந்தது.

இந்தச் சாதனையை 35 வருடங்களின் பின் 2011 ஆம் ஆண்டு இடம்பெற்ற மெய்வன்மைப் போட்டியில் மருதங்கேணியைச் சேர்ந்த ஆர்.றஜீகரன் 4:20:1 என்ற நேரத்தில் ஓடி முடித்து முறியடித்துள்ளார்.

(த-23-86)

# யாழ்.சென்றல் வென்றது

யாழ்ப்பாணம், ஜூன் 21

வடமாகாண கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையே இடம்பெற்ற ஆண்களுக்கான கூடைப் பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி சம்பியனாகியது.

வவுனியா நகர சபை விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணியை எதிர்த்து யாழ். சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி மோதியது.

இதில் யாழ்.மத்திய கல்லூரி அணி 63:23 என்ற புள்ளிகள் அடிப்படையில் சென்.பற்றிக்ஸ் அணியை வெற்றிகொண்டது. (த-23-86)

# மாகாணக் கரப்பந்தாட்டப் போட்டிகள் இன்று வவுனியாவில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 21

வடமாகாணக் கல்வித்திணைக்களத்தின் ஏற்பாட்டில் வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான ஆண், பெண் இருபாலாருக்குமான 15, 17, 19 வயதுப் பிரிவினருக்கான கரப்பந்தாட்டப் போட்டிகள் இன்று செவ்வாய்க்கிழமை வவுனியா தமிழ் மகா வித்தியாலயத்தில் ஆரம்பமாகின்றன.

15 வயதுப் பெண்கள் பிரிவில் யாழ்.மாவட்டத்திலிருந்து அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம், அளவெட்டி அருணோதயக் கல்லூரி, ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியாலயம் ஆகியனவும்,

17 வயதுப் பிரிவில் அளவெட்டி அருணாச்சலம் வித்தியாலயம், பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள்உயர்தரப் பாடசாலை, சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி ஆகியனவும்,

19 வயதுப் பெண்கள் பிரிவில் பருத்தித்துறை மெதடிஸ்த் பெண்கள் உயர்தரப் பாடசாலை, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி ஆகியனவும் கலந்து கொள்ளும்.

15 வயது ஆண்கள் பிரிவில் உடுப்பிட்டி அமெரிக்க மிசன் கல்லூரி, வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம், சுழிபுரம் விக்றோரியாக் கல்லூரி ஆகியனவும்,

17 வயது ஆண்கள் பிரிவில் ஆவரங்கால் மகாஜன வித்தியாலயம், சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம், ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியாலயம் ஆகியனவும்,

19 வயது ஆண்கள் பிரிவில் புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி, இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம், மாதகல் சென்.ஜோசப் வித்தியாலயம் ஆகியனவும் கலந்து கொள்ளவுள்ளன.(த-23-86)



மாகாண மட்டப் போட்டியில் பங்குகொள்ளச் செல்லும் இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலய கபடி அணியினர் பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்களுடன். (த)

# கார்மேல் போய்ஸ் சம்பியன்

கொழும்புத்துறை, ஜூன் 21

கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலையத்தின் 43ஆவது ஆண்டு நிறைவையொட்டி ஜெற்லைனர்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்திய கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டத்தில் குருநகர் கார்மேல் போய்ஸ் அணி சம்பியன் கிண்ணத்தைத் தட்டிச் சென்றுள்ளது.

கொழும்புத்துறை இந்துமகா வித்தியாலய மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இறுதிப் போட்டியில் குருநகர் கார்மேல் போய்ஸ் அணியை எதிர்த்து குருநகர் சிக்ஸ் ஸ்ரார் அணி மோதியது.

5 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட ஆறுவீரர்கள் பங்குபற்றும் இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சிக்ஸ்ஸ்ரார் அணி 3.4 பந்துப்பரிமாற்றத்தில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 16 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கார்மேல் போய்ஸ் அணி 3.3 பந்துப் பரிமாற்றத்தில் 3 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

சிறந்த பந்துவீச்சாளராகவும், சிறப்பு ஆட்டநாயகனாகவும் கார்மேல் போய்ஸ் அணியைச் சேர்ந்த அ.அலன் போடரும், சிறந்த களத்தடுப்பு வீரராக சிக்ஸ்ஸ்ரார் அணி வீரர் ம.ராகவனும் தெரிவு செய்யப்பட்டனர்.

வெற்றிக் கிண்ணத்தை பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா வழங்கிக் கௌரவித்தார்.

(த-135)



# இன்றைய ஆட்டங்கள்



யாழ்ப்பாணம், ஜூன் 21

யாழ்.உதைபந்தாட்ட லீக் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தும் லீக் முறையிலான இரண்டாம் சுற்று உதைபந்தாட்டப் போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:

- உரும்பிராய் சென்.மைக்கல் விளையாட்டுப் கழகம் எதிர் விக்கினேஸ்வரா விளையாட்டுக் கழகம் (பிற்பகல் 3.45 மணி)
- ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் எதிர் [illegible] விளையாட்டுக்கழகம் (மாலை 5மணி).(த-23)

பாடசாலைகளின் சதுரங்கம்

# ஹாட்லிக் கல்லூரி 2 பிரிவுகளில் முதலிடம்

யாழ்ப்பாணம், ஜூன் 21

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வடமாகாண மாவட்டப் பாடசாலைகளின் ஆண், பெண் இருபாலாருக்குமான சதுரங்கப் போட்டியில் ஆண்களுக்கான 15, 19 ஆகிய இரு பிரிவுகளில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி முதலிடத்தைப் பெற்றுள்ளது.

இந்தப் போட்டியில் வெற்றி பெற்ற பாடசாலைகளின் விவரம் வருமாறு:

**15 வயதுப் பிரிவு - ஆண்கள்**

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி (முதலாம் இடம்), யாழ். இந்துக் கல்லூரி (இரண்டாம் இடம்), தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி (மூன்றாம் இடம்).

**19 வயதுப் பிரிவு - ஆண்கள்**

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி (முதலாம் இடம்), யாழ். இந்துக் கல்லூரி (இரண்டாம் இடம்), மன்னார் சென்.சேவியர் கல்லூரி (மூன்றாம் இடம்).

**15 வயதுப் பிரிவு - பெண்கள்**

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை (முதலாம் இடம்), அளவெட்டி அருணோதயக் கல்லூரி (இரண்டாம் இடம்), வடஇந்து மகளிர் கல்லூரி (மூன்றாம் இடம்).


**19 வயதுப் பிரிவு - பெண்கள்**

யாழ்.இந்து மகளிர் கல்லூரி (முதலாம் இடம்), அளவெட்டி அருணோதயக் கல்லூரி (இரண்டாம் இடம்), வடஇந்து மகளிர் கல்லூரி (மூன்றாம் இடம்).

(த-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதம் அடித்தார் சங்கக்கார; போட்டி சமநிலையில்



சௌதம்டன், ஜூன் 21

இங்கிலாந்துக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியின் இறுதி நாளான நேற்று இலங்கை அணியின் தலைவர் சங்கக்காரவும், திலான் சமரவீரவும் அபாரமாக ஆடி அணியை தோல்வியிலிருந்து மீட்டெடுத்தனர். இடையிடையே மழையும் கைகொடுக்க இலங்கை - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்றாவது போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

இங்கிலாந்து - இலங்கை கிரிக்கெட் அணிகளுக்கிடையிலான 3ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி சௌதம்டனில் கடந்த 16ஆம் திகதி தொடங்கியது. முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி, தனது முதல் இன்னிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் பறிகொடுத்து 184 ஓட்டங்களை மாத்திரமே சேர்த்தது. பின்னர் தனது இன்னிங்ஸை ஆரம்பித்த இங்கிலாந்து அணி, மூன்றாம் நாள் ஆட்ட நேரம் முடியும்போது 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 195 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது.

பெல் (39), அன்டர்சன் (0) ஆகியோர் ஆட்டமிழக்காது களத்தில் இருந்தனர்.

மீண்டும் நேற்றுமுன்தினம் தனது இன்னிங்ஸைத் தொடர்ந்த இங்கிலாந்து அணி, 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 377 ஓட்டங்களைச் சேர்த்திருந்தவேளை ஆட்டத்தை இடைநிறுத்திக்கொண்டது.

பெல் சிறப்பாக ஆடி 119 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது களத்தில் இருந்தார்.

பின்னர், 193 ஓட்டங்கள் பின்னிலையுடன் தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இலங்கை அணியை பரண விதாரண (10), திரிமன்னே (38), மஹேல ஜெயவர்தன (6) ஆகியோர் கைவிட்டனர்.

இதனால் நான்காம் நாள் ஆட்ட நேரம் முடியும்போது, 3 விக்கெட்டுகளைப் பறிகொடுத்து 112 ஓட்டங்களை இலங்கை அணி சேர்த்திருந்தது. சங்கக்கார 44 ஓட்டங்களுடனும், ஹேரத் 2 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

ஐந்தாம் நாள் ஆட்டம் தொடங்கி நீண்ட நேரம் இலங்கை அணி விக்கெட்டைப் பறிகொடுக்காது நிதான ஆட்டத்தைக் கடைப்பிடித்தது. சங்ககாரவுக்கு ஹேரத் நல்ல ஒத்துழைப்புக் கொடுத்தார். ஹேரத் 36 ஓட்டங்களைப் பெற்றார். அடுத்துவந்த சமரவீர சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். மறு முனையில் அணியைச் சரிவில் இருந்து மீட்ட சங்ககார சதமடித்தார். 119 ஓட்டங்களுடன் அவர் ஆட்டமிழந்தார். அதன் பின்னர் சமரவீர அரைச்சதம் கடந்தார். சமரவீர 87 ஓட்டங்களுடனும், பிரசன்ன ஜெயவர்தன 6 ஓட்டங்களுடன் களத்தில் இருக்கையில் திடீரென மழை குறுக்கிட்டதால் ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது.

# கை நழுவும் முதலிடம்



ஐ.சி.சி. டெஸ்ட் தரவரிசையில் தென்னாபிரிக்க வீரர் கலிஸுடன் முதலிடத்தைப் பகிர்ந்துகொண்டுள்ள சச்சின் டெண்டுல்கர், அந்த இடத்தை விரைவில் இழக்கவுள்ளார்.

தரவரிசையில் 883 புள்ளிகளுடன் சச்சினும், தென்னாபிரிக்க வீரரான கலிஸும் கூட்டாக முதலிடத்தில் உள்ளனர்.

மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு எதிரான டெஸ்ட் போட்டிகளில் சச்சின் பங்கேற்கவில்லை. அவர் பங்கேற்காத ஒவ்வொரு டெஸ்ட் போட்டிக்கும் அவருக்குப் புள்ளிகள் குறையும். இதனால், கலிஸ் முதலிடத்தைப் பிடிப்பார். சச்சின் இரண்டாவது இடத்துக்குத் தள்ளப்படுவார். 38 வயதாகும் சச்சின் டெண்டுல்கர் இந்திய அணி உலகக் கிண்ணத்தை வென்ற பின்னர் ஐ.பி.எல். தொடரில் பங்கேற்றார். அதன்பிறகு தமக்கு ஓய்வு வேண்டுமென்பதால் மேற்கிந்தியத்தீவுகளுக்கு எதிரான ஆட்டங்களில் அவர் பங்கேற்கவில்லை.

ஷேவாக், கௌதம் கம்பீர், சஹீர்கான் ஆகியோரும் டெஸ்ட் போட்டியில் பங்கேற்கவில்லை. இதனால், அவர்களும் தரவரிசையில் புள்ளிகளை இழந்து பின்தங்குவார்கள். ஷேவாக் தற்போது 6ஆவது இடத்தில் உள்ளார். இதேவேளை, இந்திய அணி தற்போது ஐ.சி.சி. டெஸ்ட் தரவரிசையில் முதலிடத்தில் உள்ளது. இந்தத் தொடரில் இந்திய அணி பெறும் வெற்றியும், தோல்வியும் டெஸ்ட் தரவரிசையில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தாது.

ஏனெனில், இரண்டாமிடத்தில் உள்ள தென்னாபிரிக்க அணிக்கும் இந்திய அணிக்கும் 11 புள்ளிகள் வித்தியாசம் உள்ளன. எனவே, இந்திய அணி டெஸ்ட் தொடரில் தோல்வியடைந்தாலும் கூட தொடர்ந்து முதலிடத்திலேயே இருக்கும்.

# ‘எஸ்.எல்.பி.எல். லீக்’ பின்னணியில் மோடி?



லலித்மோடி

கொழும்பு, ஜூன் 21

‘ஸ்ரீலங்கா பிரீமியர் லீக்’கின் பின்னணியில் ‘இந்தியன் பிரீமியர் லீக்’ (ஐ.பி.எல்.) அமைப்பின் முன்னாள் தலைவரான லலித் மோடி இருப்பதன் காரணமாகவே, இந்தியக் கிரிக்கெட் சபை அந்நாட்டு வீரர்களை இலங்கையில் விளையாட அனுமதிக்கவில்லை என செய்திகள் வெளியாகியுள்ளன.

வரும் ஜூலை 19ஆம் திகதி முதல் ஒகஸ்ட் 4ஆம் திகதி வரை நடைபெறவுள்ள ‘ஸ்ரீலங்கா பிரீமியர் லீக்’ கிரிக்கெட் போட்டிகளில் பங்கேற்கவிருந்த இந்திய கிரிக்கெட் வீரர்களுக்கு அந்நாட்டுக் கிரிக்கெட் சபை தடையில்லாச் சான்றிதழ் வழங்க மறுத்துள்ளது.

இதற்குப் பல்வேறுபட்ட காரணங்கள் வெளிவந்தவண்ணமுள்ளன.

சிங்கப்பூரைத் தளமாகக் கொண்ட ‘சோமர்செட் இன்டடெய்மென்ட் வென்ஸர்ஸ்’ தனியார் நிறுவனமே இத்தொடரை நடத்துகிறது எனவும், இதன் காரணமாகவே இந்திய வீரர்களுக்கு மறுப்புத் தெரிவிக்கப்பட்டது எனவும் முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தன.




அதேவேளை, கடந்த ஐ.பி.எல். தொடரின்போது இலங்கைக் கிரிக்கெட் சபையுடன் ஏற்பட்ட முரண்பாடு காரணமாகவும் இந்த முடிவு எட்டப்பட்டிருக்கலாம் என்றும் கூறப்பட்டது.

இந்நிலையில், தற்போது ‘சோமர்செட் இன்டடெய்மென்ட் வென்ஸர்ஸ்’ நிறுவனத்தின் இந்த முயற்சியின் பின்னணியில், ஐ.பி.எல். அமைப்பின் முன்னாள் தலைவரான லலித் மோடி உள்ளார் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

இதன் காரணமாகவே இந்தியக் கிரிக்கெட் சபை, தமது வீரர்களுக்கு அனுமதி மறுத்துள்ளது எனக் கூறப்படுகிறது.

இதுகுறித்து இந்தியக் கிரிக்கெட் சபை அதிகாரி ஒருவர் கூறுகையில்,

“ஐ.பி.எல். தொடரில் லலித் மோடியுடன் இணைந்து பணியாற்றிய சிலர், சோமர்செட் இன்டடெய்மென்ட் வென்ஸர்ஸ் நிறுவனத்தின் ஊடாக ‘ஸ்ரீலங்கன் பிரீமியல் லீக்’ கை நிர்வகிக்கின்றனர்'' எனக் கூறியுள்ளார். எனினும், லலித்மோடி இதனை முழுமையாக மறுத்துள்ளார்.

இதேவேளை, இத் தொடரை ஏற்பாடு செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள சோமர்செட் என்டெர்டெய்ட்ன்மன்ட் நிறுவனமானது இலங்கைக் கிரிக்கெட்டின் சந்தைப்படுத்தல் கிளை என இலங்கைக் கிரிக்கெட் சபை சார்பில் கூறப்பட்டுள்ளது. ஏற்கனவே, லலித் மோடி இங்கிலாந்தில் இத்தகைய போட்டிகளை நடத்துவதற்கான ஏற்பாடுகளை செய்து வருகிறார் எனச் செய்திகள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஆடுகளம் சரியில்லை என்கிறார் பிளட்சர்



''இந்திய வீரர்கள் பயிற்சி செய்யவென ஒதுக்கப்பட்ட ஆடுகளம் சரியாக இருக்கவில்லை'' என்று இந்திய அணியின் பயிற்சியாளர் டங்கன் பிளட்சர் முறைப்பாடு தெரிவித்துள்ளார். இந்தியா - மேற்கிந்தியத்தீவுகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் கிங்ஸ்டனில் நேற்று ஆரம்பமாகியது. இப்போட்டிக்கான பயிற்சியில் இந்திய வீரர்கள் போட்டி நடைபெறும் கிங்ஸ்டன் சபீனா பார்க் மைதானத்தில் தீவிரமாக பயிற்சியில் ஈடுபட்டனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்திய வீரர்கள் பயிற்சியில் ஈடுபட்டிருந்தபோது ஆடுகளம் சரியில்லாதமையால் பந்து வேகமாக எகிறியது.

இதனால், வீரர்கள் பயிற்சி செய்வதில் தடங்கல் ஏற்பட்டது. இது குறித்து வீரர்கள் பயிற்சியாளர் பிளட்சரிடம் முறையிட்டனர். இதையடுத்து ஆடுகள ஏற்பாட்டாளர்களிடம் பிளட்சர் முறைப்பாடு செய்தார். ஆடுகள அமைப்பாளர்களை அவர் கடிந்து கொண்டார் எனவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

புடைவை வியாபாரம் பழகக்கூடிய அல்லது அனுபவமுள்ள ஆண்/பெண் விற்பனை யாளர் தேவை.
த.சங்கரப்பிள்ளை அன் சன்ஸ்
21, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

## கோழிக்குஞ்சு விநியோகம்

35 நாளில் 2kg வுக்கு மேல் வளர்ச்சியடையக் கூடிய BAHIRAHA No -01 புறொயிலர் குஞ்சுகள், 22.06.2011 விநியோகிக்கப்படும்.

**ராஜீவ்,**
நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
T.P. No- 0212222867, 0776090926

## LANKA SKILL DEVELOPMENT ACADEMY

ABC AWARDS U.K

REGISTERED IN COLOMBO SRI-LANKA NO.73407

**FIRST INTERNATION APPROVED CENTRE BY ABC AWARDS (LONDON)**
And
Royal Society Of Promotional Health
Reg No:1219

**114, Main Street, Jaffna.**

**WORK SHOP: Wednesday (22.06.2011) at 10.00AM**
Training Given On Food Safety and Health & Safety
Certificates will be charged.

International Work. Not to be missed
Food & Soft Drink Supplied
Newely Appointed Teacher
Yogakumaran Chendil Pragash
will be answer your questions.

(49)

**London/ India- Based Director, Course Tutor Examiner, Head of The Department**
**MR.S.SENTHILINGAM FRSPH, MHCIMA, LCGI, MRIPH,MBLCS.**
**Senthil Phone: 0771286382 Gerald ON: 0775278918**

# கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 21

யாழ். மாவட்ட பாடசாலைகளில் மாகாண கல்வி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் நடப்பாண்டில் முன்னெடுக்கப்படும் கட்டட நிர்மாண வேலைகள் மற்றும் திருத்த வேலைகள் தொடர்பான கூட்டமொன்று நாளை புதன்கிழமை இடம்பெறவுள்ளது.

யாழ். பொது நூலகத்திலுள்ள வடமாகாண பொது மாநாட்டு மண்டபத்தில் ஆளுநர் தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெறவுள்ளது.

பிற்பகல் 3 மணிக்கு நடை பெறவுள்ள இந்தக் கூட்டத்தில் கட்டட ஒப்பந்தகாரர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்தி சங்கப்பிரதிநிதிகளை தவறாது கலந்துகொள்ளுமாறு கல்வி அமைச்சின் செயலாளர் கோரி யுள்ளார். (10)

## விற்பனைக்கு

MF 135 உழவு இயந்திரம் விற்பனைக்கு உண்டு.
MF 135 ஒறிஜினல் போனட், மட்காட் விற்பனைக்கு உண்டு. உழவு இயந்திர சாரதி தேவை
0776154078, 0774142809, 0776660369

## வீடு விற்பனைக்கு

கோண்டாவில் மேற்கு, K.K.S வீதியில் அமைந்துள்ள 1½ பரப்புக் காணியுடன் கூடிய வீடு உடனடியாக விற்பனைக்குண்டு. உப தபால் கந்தோர், கூட்டுறவுச் சங்கம் என்பவற்றுக்கு முன்னால், கே.கே.எஸ். வீதியிலிருந்து 35 மீற்றர் தூரமுள்ள 15" அகலப் பாதை கொண்டுள்ளது. விலை பேசித் தீர்மானிக்கலாம்.
தொடர்பு: 0772492301, 0213216320. 0776219706

## வயல்காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், நாவற்குழி
நெனியன் வயல்வெளியில்
அமைந்துள்ள 9¾ பரப்புக்களும்,
13½ பரப்புக்களும் உள்ள இரண்டு
வயல்காணிகளும் விற்பனைக்கு
உண்டு.
தொடர்புக்கு: 0777189536

## கண்ணீர் அஞ்சலி



எனது ஆருயிர் நண்பன் வீ.மகாலிங்கம்
அவர்களின் அன்புத் தந்தை
**பொன்னர் வீரபாகு**
அவர்களின் இழப்பால்
துயருற்றிருக்கும் அவரின்
குடும்பத்தினர் அனைவருக்கும்
எனது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்கின்றேன்.
**எ. ஞானம்ஸ் பதிப்பகம்,**
கந்தர்மடச் சந்தி, கந்தர்மடம்.

**வடக்கின் (யாழ் நகரில் பிறிண்டிங்) அச்சகத்துறையின்**
இன்றைய முன்னோடி நிறுவனத்தின் ஊடாக
பலவர்ண பிறிண்டிங் வேலைகளையும் குறைந்த செலவில் குறுகிய நேரத்தில்;
சுவரொட்டிகள், அழைப்பிதழ்கள், புத்தகங்கள், சஞ்சிகைகள், Handbills, பாடசாலைவெளியீடுகள், பருவவெளியீடுகள், நினைவுமலர்கள், லேபில்கள், துண்டுப் பிரசுரங்கள், கண்ணீர் அஞ்சலிகள் மற்றும் புத்தகம்கட்டுதல்.
யாழ் கொழும்பு **பிறிண்டேர்ஸ்**

## மரண அறிவித்தல்

### திருமதி குணரட்ணம் பவளம்



சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் கொழும்புத்துறை வீதி, பாண்டியன் தாழ்வை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குணரட்ணம் பவளம் நேற்று (20.06.2011) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் ஐயாத்துரை குணரட்ணத்தின் (பனை அபிவிருத்திச் சபை ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற சர்மினி மற்றும் குமுதினி, தர்சினி (ஆசிரியை, முல்லைத்தீவு மகாவித்தியாலயம்), மயுர்தினி (யாழ். மாநகர சபை உத்தியோகத்தர்), குகானந்தன்(வேலணை பிரதேச செயலக உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்புத் தாயும், சுதாவரனின் அன்பு மாமியும், ஒளியரசி, லக்ஷன், லஜீபன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதி நிகழ்வுகள் இன்று (21.06.2011) செவ்வாய்க் கிழமை காலை 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் கொட்டடி சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

126/4, கொழும்புத்துறை வீதி,
பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம்.
தகவல்:
(500) குடும்பத்தினர்.

## IDM Affiliated Campus

**Jaffna Branch**

Affiliated Campus
Sri Lankan Brand for Higher Education

# 216 Navalar Road, Jaffna, Sri Lanka | T: 021 222 9901 | info@idmjaffna.com | www.idmjaffna.com

### IDM யாழ் நகரக் கிளை வழங்கும் வேலை வாய்ப்புக்களுடன் கூடிய கற்கை நெறிகள்

- HND in Software Development
- HND in Computer Network Technology
- HND in Business management
- Advanced Diploma in Computer Networks
- Certificate in Multimedia and web application
- Programming Languages ( C/JAVA/VB.NET/PHP/MySql)
- MCITP : Enterprise Administrator
- MCSE (Microsoft Certified Systems Engineer)
- CCNA (Cisco Certified Network Associate)
- Diploma in Business Management
- Tally
- ACCPAC
- e Commerce
- Linux Administration
- Business English
- Diploma in ICT
- Diploma in PC Assembling
- e-Citizen (பெற்றோருக்கானது)

☆ Digital Library, e-Leaning , போன்ற புதிய வசதிகள்

### HND கற்கை நெறிகளின் பின்

☆ உலகம் முழுவதும் அங்கிகரிக்கப்பட்ட சான்றிதழ்கள்
☆ ஐக்கிய இராச்சியம் (UK) செல்லக்கூடிய வாய்ப்பு
☆ Company களுடனான விசேட தொழில் பயிற்சி

புதிய வகுப்புக்கள் விரைவில் ஆரம்பம்
முதல் 10 HND மாணவர் பதிவுகளுக்கு
Student Gift
இலவசம்
TP #: 021 222 9901

மேலதிக விபரங்களுக்கு IDM இன் யாழ் நகரக் கிளையை அணுகவும்
மாணவர்கள் பெற்றோர் சகிதம் வருகை தந்து மேலதிக விபரங்களைப் பெறுவது வரவேற்கத்தக்கது

## பதவி வெற்றிடம்

கட்டட நிர்மாண நிறுவனம் ஒன்றுக்கு உடனடியாக கீழ் குறிப்பிடப்படும் பதவிகளுக்கு வெற்றிடம் உண்டு.

1) Auto Cad Draughtsmen - 1
2) Clerk /Receptionist - 1
3) Meason - 5
4) Labour - 3

தொடர்புகளுக்கு:
0771023817,
0774316132

## VCare

இலங்கையில் முதலாவது மற்றும் ஒரே ஒரு தலை முடியியல் நிபுணத்துவ சிகிச்சை நிலையம் இதுவே

VCare இன் Dr. Hair ல்

தலைமுடி உதிர்தல், ஆண், பெண் வழுக்கை, பொடுகு, இளநரை, புழுவெட்டு, Psoriasis போன்ற அனைத்து பிரச்சினைகளுக்கு இலங்கை இந்திய மருத்துவர்களின் நேரடி கண்காணிப்பில் சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது. v care (Pvt) Ltd.




DR, HAIR

எதிர்வரும் 23, 24 ஆகிய திகதிகளில் யாழ் கிளையில் இலங்கை, இந்திய பிரபல தலைமுடியியல் நிபுணர்களின் நேரடி ஆலோசனை நடைபெறவுள்ளது.
முற்பதிவுகளுக்கு :0776 291 099

21, Frazerr Avenue, Dehiwala. Phone: 011-4874854, 2735715
162/5, Jaffna Road, Vavuniya. Tel: 024-4924940
26,brown Road, Jaffna.

## கலாலயா

தவிர்க்கமுடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டிருந்த புதிய பிரிவுக்கான அனுமதிகள் 27.06.2011 திங்கள் காலை முதல் ஆரம்பமாகின்றன.

**கலாலயா** பயிற்சியகம்
பெருமாள் கோயிலுக்கு அண்மையில், யாழ்ப்பாணம்.

மகளிருக்கான துரித குறுகிய கால பயிற்சிகள்

❄ **3 மாத கால** கேக் ஐசிங் (7 வகை. 25 அமைப்புகளில்), ஐசிங் பூக்கள், உணவு தயாரித்தல், கூந்தல் அலங்காரங்கள் (50 வகை), பப்றிக் வர்ணம் தீட்டுதல், பூவேலை, கைவேலை, Saree Works. *கூந்தல் அலங்கார பயிற்சிக்காலத்தின் நடுப்பகுதியில் Facials,* மணமகள் அலங்காரம் வகுப்புகள் ஆரம்பமாகும்.
❄ தையலில் அடிப்படை அறிவு அற்றவர்களுக்கான **6 மாத கால** உடை தயாரித்தல் வகுப்புகள். ➡ மேற்படி பயிற்சிகள் முடிந்தபின்னர் சான்றிதழ்கள் வழங்கப்படும்.
❄ தையல் தெரிந்தவர்களுக்கான **2** வாரகால சாறி பிளவுஸ், சுரிதார் வகுப்புக்கள்

*மேலும் விபரங்களை பி.ப 2.00 மணி வரை நேரில் அறிந்து கொள்ளலாம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெறவிருந்த ஆசிரிய இடமாற்றம் தொடர்பாக ஆளுநருக்கும் ஆசிரியர் சங்கங்களுக்குமிடையே நேற்று நடைபெற்ற பேச்சு தோல்வியில் முடிவடைந்தது. இதனையடுத்து சுகயீனப் போராட்டத்தில் தாம் ஈடுபடப் போவதாக ஆசிரியர் சங்கங்கள் அறிவித்தன. சரியான தீர்வு கிடைக்கா விட்டால் தொடர்ச்சியாகப் போராட்டங்களை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளதாவும் அந்தச் சங்கங்கள் மேலும் தெரிவித்திருந்தன. இந்த நிலையில் நேற்று அரச தரப்பு எம்.பிக்களுடன் ஜனாதிபதி சந்திப்பொன்றை நடத்தினார். இதன்போது கிழக்கு மாகாண ஆசிரிய இடமாற்றத்தை இரத்துச்செய்ய வேண்டும் எனவும், வெற்றிடமாக உள்ள பகுதிகளுக்கு புதிய ஆசிரியர்களை நியமிக்க வேண்டும் எனவும், டிசெம்பர் மாதம் அளவில் இடமாற்றச் சபை ஒன்றை அமைத்து சீரான வகையில் நியாயமான இடமாற்றங்களை மேற்கொள்ளலாம்எனவும் அரசு தரப்பு எம்.பிக்களான எஸ்.எம்.எம். ஹரிஸ், பிரதியமைச்சர் அதாவுல்லா, பிரதியமைச்சர் முரளீதரன், ஏ.எச்.எம்.அஸ்வர் ஆகியோர் கோரிக்கை விடுத்தனர்.

இதனையடுத்து உடனடியாகக் கிழக்கு மாகாண ஆளுநரைத் தொலை பேசியில் தொடர்புகொண்ட ஜனாதிபதி ஆசிரிய இடமாற்றங்களை இரத்துச்செய்யுமாறு உத்தரவு பிறப்பித்தார். (ந-30)

## அளவெட்டிச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் படையினர் குழுவொன்று சமூக மண்டபத்துக்குச் சென்றபோது அங்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அவர்களின் பாதுகாப்புப் பிரிவினர் உள்ளிட்ட, கூட்டத்தில் கலந்துகொண்டிருந்த சிலருக்கும் படையினருக்கும் இடையில் வாக்கு வாதம் ஏற்பட்டது.

வாக்குவாதத்தின் போது அமைச்சர்கள் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த (நாடாளுமன்ற உறுப்பினர்களின் மெய்க் காவலர்கள்) ஒருவருக்கே அடி விழுந்தது. நாடாளுமன்ற உறுப்பினரையோ கூட்டத்தில் பங்கேற்றவர்களையோ அவர்கள் தாக்கவில்லை.

வாகனங்கள் சேதமாக்கப்பட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகளும் பொய்யானவை'' என்றும் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை யாழ். நகரில் செய்தியாளர்களைச் சந்தித்த குடாநாட்டுப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஹத்துருசிங்க, படைகளிலுள்ள சில சக்திகள் அல்லது வெளிச் சக்திகள் இதில் தொடர்புபட்டிருக்கலாம் என்று தெரிவித்திருந்தார்.

சம்பவத்துடன் படையினர் தொடர்புபட்டிருந்தால் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் உறுதியளித்திருந்தார்.

தாக்குதலை நடத்திய படையினரைத் தம்மால் அடையாளம் காட்ட முடியும் என்று கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையிலேயே அளவெட்டிச் சம்பவத்தில் இராணுவத்தினரே தொடர்புபட்டுள்ளனர் என்று பாதுகாப்புச் செயலர் தெரிவித்துள்ளார். அத்துடன் சம்பந்தப்பட்ட படையினர் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு கட்டளைத் தளபதி கோத்தபாய ஹத்துருசிங்கவுக்கு உத்தரவிட்டுள்ளார் என்று அரச தரப்பு ஊடகங்கள் தெரிவித்தன. (உ)

## தொற்றுநோய்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பரம்பலுக்கு வழி வகுக்கின்றன. எனவே இதைத் தடுப்பதற்கான தீவிர நடவடிக்கையினை சுகாதாரத் திணைக்களத்தினர் மேற்கொள்ளவுள்ளனர் - என்றார். (ந-4)

## கந்தரோடையின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொல்லியல் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் கலாநிதி நிமல் பெரேரா உள்ளிட்ட தெற்குக் குழுவின ருடன் கலாநிதி தெரணியகல நேற்று கந்தரோடைக்கு வந்திருந்தார். யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறைத் தலைவர் பேராசிரியர் புஷ்பரட்ணமும் அவர்களுடன்இணைந்திருந்தார்.

யாழ். பல்கலைக்கழக தொல்லியல் துறையும் இலங்கைத் தொல்லியல் திணைக்களமும் இணைந்து கந்தரோடையில் கடந்த இரண்டு மாதங்களாக ஆய்வுகளை மேற்கொண்டு வந்தன. இரண்டு இடங்களில் ஆய்வுகள் நடத்தப்பட்டன. அவை தற்போது நிறைவு பெற்றுள்ளன.

இந்த ஆய்வுகளிலிருந்து, கந்தரோடையில் புராதன குடியிருப்பு மட்டுமின்றி அந்தப் பண்பாட்டுத் தொடர்ச்சி அண்மைக்காலம் வரை அந்தப் பிரதேசத்தில் காணப்பட்டமையும் தெரியவந்துள்ளது.

ஆய்வின் முடிவுகள் குறித்து, கலாநிதி தெரணியகல கந்தரோடையில் வைத்து உதயனுக்கு விளக்கினார். அதன் போது அவர் தெரிவித்ததாவது:-

அகழ்வாராய்ச்சியின் போது, மட்பாண்டங்கள், இரும்புக் கருவிகள், மணிகள், ரோமன் கால மட்பாண்டங்கள், தென்னிந்திய புராதன நாணயங்கள், வடஇந்தியாவின் கங்கைப் பகுதிக்குரிய கறுப்பு நிறத்தினாலான பளபளப்பான மணிகள் என்பன கிடைக்கப்பெற்றுள்ளன.

தென்னிந்தியப் பொதுப் பண்பாட்டுக்கான சான்றுகளே அதிகளவில் கிடைக்கப் பெற்றுள்ளன. இங்கிருந்துள்ள மக்கள் ரோம் போன்ற நாடுகளுடன் அந்தக் காலத்திலேயே வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்திருக்கிறார்கள் என்பதனையும் அறியமுடிகிறது.

இந்த ஆதாரங்கள் மூலம் கந்தரோடையில் 2,500 ஆண்டுகளுக்கு முற்பட்ட - பெருங்கற்கால - பண்பாட்டைச் சேர்ந்த மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பதை உறுதி செய்ய முடிகிறது.

ஆய்வின் போது, காலத்தைத் திட்டவட்டமாகக் கணிப்பிடக்கூடிய தொல்பொருள்கள் கிடைத்துள்ளன. அவற்றை மேலும் விஞ்ஞான ரீதியான ஆய்வுக்கு உட்படுத்துவதன் மூலம் உறுதியான முடிவுகள் கிடைக்கும். அதற்காக அவற்றை அமெரிக்காவிலுள்ள சர்வதேச தொல்லியல் ஆய்வு கூடத்துக்கு அனுப்பவுள்ளோம். ஆறு மாத காலத்தில் அதன் முடிவுகள் கிடைக்கப்பெறும் - என்றார் தெரணியகல. (உ)

## ஈழத்தமிழருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணியாற்றி இருக்கிறார். பம்பாயில் அமைந்துள்ள தூதரக அலுவலகத்தின் வர்த்தக சேவையில் அவர் சட்ட ஆலோசகராக இருந்துள்ளார்.

சட்டத்தரணியான அவர் பாரிஸில் சர்வதேசப் பொருளாதார உறவுகள் என்னும் துறையில் பட்டப்பின் கற்கை நெறியில் தகைமை பெற்றவர். இந்தியாவுடன் வர்த்தகத் தொடர்புகளை விருத்தி செய்யவும், இந்தியாவில் முதலீடு செய்யவும் விளைந்த பிரெஞ்சு நிறுவனங்களுக்கு அவர் சர்வதேச வர்த்தக நெறிகளுக்கு அமைய சட்டஆலோசனைகளை வழங்கினார்.

பிரெஞ்சு மொழியில் பாண்டித்தியம் பெற்றவரான அவர் பிரெஞ்சு அரசுக்காக பல நூல்களை பிரெஞ்சு மொழியில் எழுதியுள்ளார். 412 பக்கங்கள் கொண்ட, இந்தியாவில் முதலீடு செய்தல் தொடர்பான அவரது நூல், பிரெஞ்சு நிறுவனங்கள் மத்தியில் சிறந்த வரவேற்பைப் பெற்றது. வெளிநாட்டு முதலீடு, ஏற்றுமதி, இறக்குமதி என்னும் விடயங்கள் பற்றிய பிரெஞ்சுமொழி நூல்களுள், இந்த நூல் கணிணிவழி விற்பனை நிறுவனமான 'அமேசன்' நிறுவனத்தின் சிறந்த விற்பனைப் பட்டியலில் நீண்டகாலம் தொடர்ச்சியாக முதல் நூறு இடங்களுள் இருக்கிறது. 2007ஆம் ஆண்டில் பிரசுரிக்கப்பட்ட இந்த நூல் 2010ஆம் ஆண்டில் மாற்றீடு செய்யப்பட்ட பின்னரும், புதிய நூலுடன் இந்த நூலும் முதல் நூறு இடங்களுள் இன்றும் இடம்பெற்றுள்ளது.

அவரது இச்சேவைகளைப் பாராட்டுமுகமாக பிரெஞ்சு அரசு அவருக்கு 'செவாலியர்' விருதை அறிவித்துள்ளது.

தாய்மொழியான தமிழுடன், ஆங்கிலம், பிரெஞ்சு, சிங்களம், இந்தி ஆகிய மொழிகளிலும் வேலுப்பிள்ளை நன்கு தேர்ச்சி பெற்றிருந்தார்

பருத்தித்துறை நகர சபையின் துணை முதல்வராக இருந்தவரான நாகநாதனின் மகனே வேலுப்பிள்ளை. இவரது தந்தையார் நாகநாதன் நாகர்கோயிலில் பாடசாலை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காகப் பாடசாலை ஒன்றை உருவாக்கியவர்.

தமிழகத்தின் சிறந்த நடிகரான சிவாஜி கணேசனுக்கும் பிரான்ஸ் அரசு செவாலியர் விருதை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ)

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி பொன்னுத்துரை



அல்வாய் வடக்கைப்பிறப் பிடமாகவும் அல்வாய் வடமேற்கையும் கொடிகாமத்தையும் வசிப்பிடமாகக்கொண்ட சின்னத்தம்பி பொன்னுத்துரை நேற்று (20.06.2011) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் சின்னத்தம்பி தம்பதியரின் இளைய மகனும் காலஞ்சென்ற தங்கச்சியம்மாவின் அன்புக் கணவரும் அல்வாய் வடமேற்கு அட்டிறந்தை யைச் சேர்ந்த பொன்னர் தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற தங்கராணி மற்றும் ரதி, ராதா, ஸ்ரீதாஸ் (தாஸ் வைன்டிங்-மந்திகை), வரதன்,வாசுகி, அங்கயற்கண்ணி, பார்த்தீபன் (பனை அபிவிருத்திச் சபை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் வேலுப்பிள்ளை, முருகேசு, சின்னம்மா ஆகியோரின் சகோதரரும் கந்தசாமி (ஆசிரியர்), செல்வரட்ணம் (V.K.S), செல்வராணி, கலாவதி,ஜெயந்தி, மகேஸ்வரன் (மதுரன் கிராபிக்ஸ்), ரகுநாதன் (சுவிஸ்), கவிதா ஆகியோரின் மாமனும் நக்கீரன், காண்டீபன், குமணன், கலைமகள், பவிதா, கோமகள், காயத்திரி, பிரசன்னா, கிருஸ்ணா, ஜதிகரன், ராதிகா, செந்தூரன், சுகந்தி, யோபிகா, ராஜினி, பிருந்தா, பிரியங்கா, வைஷ்ணவி, வர்ணன், விஷால், சொரூபி, அபிராமி, மாருதி, கீர்த்தனா, மதுரன், சிவஜா, சரந்தன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.06.2011) செவ்வாய்க்கிழமை பி.ப. 3 மணியளவில் நடைபெற்று பூதவுடல் அல்வாய் பங்குவேம்படி மயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஜதிகிருஸ்ணா,
அல்வாய் வடமேற்கு,
அல்வாய்.

(சி/996)

தகவல்
க. செல்வரத்தினம்.
(V.K.S)
நெல்லியடி.




## மரண அறிவித்தல்கள்

### கணபதிப்பிள்ளை பாலசிங்கம் (பாலு)

(பாலா சலூன் உரிமையாளர்)



புத்தூர் வடக்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை பாலசிங்கம் நேற்று (20.06.2011) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கண பதிப்பிள்ளை - கற்பகம் தம்பதியரின் புதல்வனும், அச்செழு கந்தையா மாணிக்கம் தம்பதியரின் மருமகனும், புஸ்பம் (பேபி) யின் அன்புக் கணவரும், கஸ்தூரி, அமுதா, பகீரதன், இதயரேகா ஆகியோரின் பாசமிகு தந்தையும், வவகுசன், அஜந்தன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்ற இராஜேஸ்வரி மற்றும் இரத்தினம், கமலம், பேபி, காலஞ்சென்ற சுசிலா (கிளி) ஆகியோரின் சகோ தரனும், காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை மற்றும் ஜெயரட்ணம், காலஞ்சென்ற பரமலிங்கம் மற்றும் சின்னமணி, செல்வரத்தினம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (22.06.2011) புதன்கிழமை மு.ப.10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கிந்திட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புத்தூர் வடக்கு,
புத்தூர்.

(5056)

தகவல்:
குடும்பத்தினர்

### திருமதி பொன்னம்பலம் மீனாட்சி



பலாலி தெற்கைப் பிறப்பிடமாகவும் ஆறுகால்மடம் ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் மீனாட்சி நேற்று (20.06.2011) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் தம்பிராசா - பொன்னம்பலத்தின் அன்பு மனைவியும் சாந்தினி, குணாநந்தன், நிலானி, ஜெயாநந்தன் ஆகியோரின் பாசமிகு தாயும் ரவீந்திரன், சுவேந்திரன், யாழினி, ஈவா ஆகியோரின் அன்பு மாமியும் மிதிலா, சுயித்தா, நிரோன், ஜோய் ஜெனிபர் நிக்கார் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் சரவணை, செல்லம்மா சிவலிங்கம் காலஞ்சென்றவர்களான இராசன், செல்லமுத்து கனகு, மகேந்திரன் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.06.2011) புதன்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் காக்கைதீவு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆறுகால் மடம்,
ஆனைக்கோட்டை. (988)

தகவல்:
த.பொன்னம்பலம் (கணவர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ஷில்ப' கண்காட்சியும் விற்பனையும்

யாழ்ப்பாணம், ஜூன்

இலங்கை தொழில் அபிவிருத்திச் சபை தேசிய விருதுக்கு உரியவர்களைத் தெரிவு செய்வதற்காக நாடாளாவிய ரீதியில் நடத்தும் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்துறையில் மிகச்சிறந்த தொழில் பயிற்சியாளர்களுக்கும் கைத்தொழில் முயற்சிகள் துறையில் மிகச் சிறந்த தொழில் முயற்சியாளர்களுக்கும் தேசிய தங்க விருதுகளும் 50 ஆயிரம் ரூபா பணப் பரிசும் வழங்கப்படவுள்ளன.

14 கைத்தொ ழில் பிரிவுகளில் தேசிய மட்டத்தில் முதலாம் இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெறுவோருக்கு தலா 30 ஆயிரம் ரூபாவும், ரூபா 20 ஆயி ரம் ரூபாவும் 10 ஆயிரம் ரூபாவும் மாகாண மட்டத்தில் முதலிடம் பெறுவோருக்கு ரூபா 10 ஆயிரமும் சான்றிதழும் வழங்கப்படவுள்ளன. (ம-7)


## சிங்கர் பிளஸ் - சுன்னாகம் கிளை

**பரிசு பெறுவோர் விவரம்**

*சிங்கர் பிளஸ் சுன்னாகம் கிளையின் ஒரு வருட பூர்த்தியை முன்னிட்டு 23.01.2011 அன்று 2009/2010 இல் கொள்வனவுகளை மேற்கொண்ட வாடிக்கையாளரிடையே நடத்தப்பட்ட ''சிங்கர் பிளஸ் சுன்னாகம் வாடிக்கையாளர் அதிர்ஷ்டம்'' இல் வெற்றி பெற்றவர்களின் விவரம் வருமாறு:-*

1. ஆம் பரிசு - சிங்கர் LCD TV.
கே. உதயகுமார் (தேவாலய வீதி, புன்னாலைக்கட்டுவன்.)
2. ஆம் பரிசு - சிங்கர் சலவை இயந்திரம்
திருமதி வி. பத்மநாதன் (மயிலணி, சுன்னாகம்.)
3. ஆம் பரிசு - எஸ். செந்தூரன் (கந்தரோடை, சுன்னாகம்.)

**ஆறுதல் பரிசுகள்:-**

கே. கிருபாகரன் (உடுவில் மத்தி, மானிப்பாய்), எம். தர்மபாலன் (உடுவில் கிழக்கு, சுன்னாகம்), வல்லிபுரம் ராஜநாயகம் (ஐயனார் கோயிலடி, சுன்னாகம்), திருமதி ஜே. ஜெயரட்ணம் (மில் வீதி, ஏழாலை மேற்கு), என். மீனாட்சிசுந்தரம் (அம்பலவாணர் வீதி, உடுவில்), திருமதி எஸ். மலர் (கோப்பாய் வடக்கு), ஏ. தர்பரன் (அலக்ஸாந்தர் வீதி, கொழும்பு-06), எஸ். வாமதேவன் (அம்மன் வீதி, உரும்பிராய் மேற்கு), வி. அருந்தவன் (சூராவத்தை, சுன்னாகம்), ஜி. இரத்தினசிங்கம் (புலவனார் வீதி, கல்வியங்காடு)

*வெற்றியாளர்களுக்கான பரிசில்கள் நாளை (22.06.2011) புதன் கிழமை பி.ப. 3.30 மணிக்கு இடம்பெறும் பரிசளிப்பு விழாவில் கலந்துகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.*

### சிங்கர் பிளஸ் - சுன்னாகம்

இல.136, கே.கே.எஸ். வீதி, சுன்னாகம். தொ.பே:-021 224 0555.


### பணிப்பெண்கள் தேவை

வயோதிபப் பெண்களை பராமரிப்பதற்கு பெண் பணியாளர்கள் தேவை. உணவும், தங்குமிட வசதியும் வழங்கப்படும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். தொடர்பு:அன்னை திரேசா இல்லம். இராசபாதை வீதி, (இருபாலை வீதி) கோப்பாய்.

### உடன் தேவை

தனியார் கல்வி நிறுவனத்துக்கு அலுவலக உதவியாளர் (Clerk - பெண்) தேவை. யாழ். மாநகர சபைக்கு உட்பட்டவர்கள் நேரடியாகத் தொடர்புகொள்ளவும். T.P:0774598440.

| | |
|---|---|
| நாவலர் | பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். |

### மரத் தளபாடங்கள் தேவை

பாவித்த மரத்தளபாடங்கள் மற்றும் மரங்கள் உடன் காசுக்குப் பெற்றுக்கொள்ளப்படும். குறிப்பு: பாவித்த பழைய மரத் தளபாடத்துக்குபுதிய தளபாடங்கள் மாற்றிக்கொடுக்கப்படும். தொடர்பு:- இல. 133, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 0773583879.

## மரண அறிவித்தல்

### திருமதி சோமசுந்தரம் பூமணி



ஏழாலை தெற்கு, சூராவத்தையைப் பிறப்பிடமாகவும் இணுவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் பூமணி நேற்று (20.06.2011) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - தெய்வானை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சோமசுந்தரத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற தவமணி மற்றும் கண்மணி, கனகமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.06.2011) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக குப்பிளான் காடாகடம்பை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சூராவத்தை. (சி/995) ஜெயக்குமார் றதிஸி.

## இன்னிசைச் சங்கமம்

★யாழ். சிவசுப்பிரமணியக் குருக்கள் அறக்கொடை நிதிய அனுசரணையில்...

★ Dr. *தர்ஷனனின் ஆதர்ஷ் இசைக்குழு வழங்கும் இன்னிசைச் சங்கமம்.*

★ யாழ். வண்ணை வீரமாகாளியம்மன், அன்னபூரணி அலங்கார மண்டபத்தில்

★ இன்று (21.06.2011) செவ்வாய்க்கிழமை இரவு 8 மணி முதல் 10 மணி வரை

★ வறுமைக்கோட்டுக்குக் கீழ் வாழும் மாணவி ஒருவருக்கு இந்த நிகழ்வின் சிறப்பம்சமாக துவிச்சக்கர வண்டி வழங்கப்படும்.

**சிவஸ்ரீ சிவ. கமல்ராஜ் குருக்கள்**
வண்ணை வீரமாகாளி அம்மன் ஆதீன தர்த்தாவும்,
பிரதம குருவும், நிதியஸ்தாபகரும்.





லண்டனில் உயர்கல்வி கற்பது தொடர்பான இலவச ஆலோசனைகளுடன் ஒரே நாளில் அனுமதிகள் பெற்றுத்தரப்படும்.

June மற்றும் July / August Intake ற்கான அனுமதிகள் தற்போது ஏற்றுக்கொள்ளப்படுவதுடன் பல வருடம் அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகளின் உதவியுடன் உங்களது விசா தேவைகள் பூர்த்தி செய்யப்படும்.

■இலவச IELTS வகுப்புகள் ■20 மணித்தியாலம் வேலை செய்யும் வசதி (per week)
■4 வருட visa உத்தரவாதம் ■GCE(O/L) தகமை போதுமானது

Jaffna

| | |
|---|---|
| fhyk; | 21st June 2011 & 22nd June 2011: 10.00 a.m. - 5.00 p.m. |
| ,lk; | LONDON METROPOLITAN COLLEGE No:197, Arasady Road,Jaffna |

**Hot Line:021 222 7230,071 4150 995**

**எமது சேவை முற்றிலும் இலவசமானது**
* Condition Apply

University of Portsmouth, UH, Middlesex University, icp, CTL, British Institute of Technology & E-commerce

EXPONET Overseas Consultants
Head office - 379-1/2, Galle Road, Colombo 6, Sri Lanka Tel:0714150995
Jaffna Branch - 197,Arasady Road, Jaffna
London Branch - No:56,The Gardens Harrow, Middlessex HA1 4EY,UK
www.expogroup.lk Email:nimal@expogroup.lk



## யாழ்.நகரில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட

London - UK ஐ தலைமையகமாகக் கொண்டு இயங்கும்

## London Metropolitan College இல்

## உடனடி வேலைவாய்ப்புகள்

1. நிர்வாக முகாமையாளர்
★இருவருட கால வேலை செய்த அனுபவம்
★வயதெல்லை 22- 30
★மும்மொழிகளிலும் தேர்ச்சி பெற்றிருத்தல்

கடமைகளும் பொறுப்புகளும்
★ நிர்வாகத்தை செயற்பொறுப்புடன் நிர்வகிக்கும் ஆற்றல்
★ ஒருங்கிணைந்து வேலை செய்யக்கூடியவராக இருத்தல்

2. ஆங்கில விரிவுரையாளர்
★ IELTS/Advanced English/ General English Cambridge தரம் கற்பித்த முன்னனுபவங்கள் கட்டாயமாக இருத்தல் வேண்டும்.
★ வயதெல்லை கிடையாது

3. கணினி விரிவுரையாளர்
★ கீழ்க் கண்ட பாடநெறிகளை கற்பிக்கக்கூடியவர்கள் தேவை
a. Programming Languags Visual Basic, VB Net, C, C++, Java
b. Multimedia Applications
c. Accounting Packages
d. Hardware and Networking
★ வயதெல்லை 22- 28
★ ஆங்கில மொழித்தேர்ச்சி

4. வரவேற்பாளர் Receptionist (Female)
★ க.பொ.த. உயர்தர தரச் சித்தி
★ வயதெல்லை 22-28
★ தமிழ், ஆங்கில மொழித் தேர்ச்சி
★ கணினி அறிவு அவசியம்

நேர்முகத் தேர்வு நடைபெறும் இடம்: **London Metropolitan College**
*197, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.*

21.06.2011 (செவ்வாய்) மற்றும் 22.06.2011 (புதன்)
நேரம்: மு.ப. 10 - பி.ப. 2

**தொடர்புகளுக்கு: 0714150995, 021 222 7230**

தகுதியான விண்ணப்பதாரர்கள் தங்கள் கல்வித் தரச் சான்றிதழ்களுடனும் தங்களின் புகைப்படம் அடங்கிய சுயவிவரக்கோவையுடன் நேரடியாக சமுகமளிக்கவும்.

(சி-467) (48,27)



புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன
**GNU/Linux Administration & Networking** Leads to RHCE
100% Practical / Concepts
Professional Training
MIS Call me: 0776577359

A/L ? Pass / Fail → CIMA-UK | Engineering-USA | BIT University of Colombo | Multimedia Adobe
SMS your name & course to 772395895 & Get Schol.
Government Scholarship. USA, UK பல்கலைக்கழகங்களில் Master Degree
Closing Date 25.06.2011



MCS Supported By UNDP/JRRP
புலமைப் பரிசிலுக்கும் மேலதிக விபரங்களுக்கும் நேரில்,
324, Palaly Road,Campus Junction,Jaffna.
Free : BCS-UK , IELTS / TOEFL, CISCO-CCNA , Hardware, ICDL


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.06.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org